பக்கங்கள்: 14

Registered as a Newspaper

NEW MASTER Institute
B.M C. LANE JAFFNA
A/L 90 (Sat & Sun)
BOTANY
KUGATHARAN.
MORPHOLOGY
Bach II: 8 30 - 9.30
Batch I: 9 30 - 10 30
CYTOLOGY
Batch II: 10 30 - 11 30
Batch I: 11 30 - 12.30

# சஞ்சீவி

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

விலை ரூபா 3-50

NEW M... Institute.
241. NAVALAR ROAD, JAFFNA.
A/L 89 (Sat & Sun)
BOTANY
Kugatharan.
MICROBIOLOGY
(Unit - 9)
ஆரம்பம் 01 - 10 - 1988
Sat. Sun - 6 30 - 7.30
Batch I: 7 30 - 8.30
Batch II:
FUNGUS
Sat, Sun - 12.30 - 1-30 P M

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 15 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 19 (01-10-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 30

# யாழ். பிரதம தபாலகத்தில் இருந்து தேர்தல் தஸ்தாவேஜுகள் அபகரிப்பு

## நேற்றுக் காலையில் சம்பவம்

—அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ்—

யாழ்ப்பாணம், அக்டோபர் 1

**உத்தேச மாகாணசபைத் தேர்தலுக்கென கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு வந்து சேர்ந்த, தஸ்தாவேஜுகள் அடங்கிய நான்கு பெரிய பொதிகள் நேற்று இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டன.**

**இந்தச் சம்பவம் நேற்றுக்காலை பத்து முப்பது மணி அளவில் நடைபெற்றது.**

பிரதம தபால் கந்தோரில் இருந்து அபகரித்துச் செல்லப்பட்ட பொதிகள் பிரிக்கப்படாததால், அவற்றுக்குள் இருந்த தஸ்தாவேஜுகள் என்ன என்று நிச்சயமாக எவருக்குமே தெரியாது. எனினும், அனேகமாக வாக்காளருக்கு விநியோகிக்கப்படுவதற்கான வாக்காளர் அட்டைகளாக இருக்கக் கூடும் என நம்பப்பட்டது.

அந்த நான்கு பெரிய பொதிகளும் யாழ் செயலக உதவித் தேர்தல் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை பத்து மணி அளவில் திடீரென யாழ் தபாலகத்துக்குள் நுழைந்த இரண்டு இளைஞர்கள், பொதிகளைத் தேடியதாகவும், பின்னர் தபால் [மெயில்] அறையில் அவை இருப்பதைக் கண்டு அங்கிருந்து அவற்றை எடுத்துச் சென்றதாகவும் தெரிய வருகிறது

இது தொடர்பாக யாழ் தபால் - உயரதிகாரிகள் இந்திய அமைதிப் படையினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தேர்தல் பொதிகள் (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். காணிப்பதிவுத் திணைக்களத்திலிருந்து
## 5 லட்சம் காணி உறுதிகளின் மூலப் பிரதிகள் காணமற் போய் விட்டன

யாழ்ப்பாணம், அ 1

காணிமூலப் பிரதிகள் பதிவேடுகளின 250 தொகுப்புகள் (Volumes) யாழ். காணிப் பதிவுத் திணைக்களத்தில் இருந்து சமீபத்திய அசம்பாவிதங்களின் போது காணமற்போய் விட்டன என்று தெரியவருகிறது.

இந்தப் பதிவேடுத் தொகுப்பு ஒவ்வொன்றிலும் சுமார் இரு நூறு காணி மூலப்பிரதிகள் வரை தொகுத்து வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

இதன்படி யாழ் மாவட்டத்தில் சுமார் ஐந்து லட்சம் காணி உறுதிகளுக்கான மூலப்பிரதிகள் காணமல் போயிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது

கிளிநொச்சி மாவட்டம் உட்பட யாழ் மாவட்டத்திலுள்ள காணிகளின் மூலப்பிரதிகள் அடங்கிய இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பதிவேட்டுத் தொகுப்புக்கள் யாழ்ப்பாணம் காணிப்பதிவு திணைக்களத்தில வைக்கப்பட்டிருந்தன.

அசம்பாவிதங்களின் பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திணைக்களத்தைப் பார்வையிடச் சென்றபோது சுமார் இருநூற்றைம்பது (6 ஆம் பக்கம் பார்க்க)

## சோவியத் தொடர்ந்து முன்னணியில்

சோல், அக் 1

சோல் ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்று முன்னணியில் நிற்கும் முதல் மூன்று நாடுகள் பற்றிய விபரம் வருமாறு;

சோவியத் யூனியன் - 43
கிழக்கு ஜேர்மனி - 34
அமெரிக்கா - 27

(இ-எ)

## மந்திகை ஆஸ்பத்திரி ஊழியர் சம்பளப் பணம் திருட்டு

டெமாராட்சி அக்டோபர் 1

மந்திகை ஆஸ்பத்திரி ஊழியர்களின் ரூபா ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட சம்பளப்பணம் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது

மந்திகை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் திரு.எஸ் கதிரவேற்பிள்ளை சஞ்சீவிக்குத் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:-

ஆஸ்பத்திரி ஊழியரின் சம்பளத்துக்காக இலங்கை வங்கியில் இருந்து ரூபா 2 40 000 எடுத்து வந்தோம் இதில் சில ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு மிகுதிப் பணம் பாதுகாப்பாக இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தது

பின் மறுநாளான நேற்று 30 ஆம் திகதி காலை 7.00 மணி அளவில் அறையைத்திறந்து பார்த்த போது பணம் வைக்கப்பட்டிருந்த தகரப்பெட்டி மேசை ஒன்றின்மேல் கிடந்தது.

பாதுகாப்பு இரும்புப்பெட்டி திறந்த நிலையில் இருந்தது.

இப்படி அவர் கூறினர். (இ-70 160)

## செய்திச் சாரம்

### 19 படகுகளில் 140 அகதிகள்

சென்னை, அக் 1

இலங்கைத் தமிழ் அகதிகள் 140 பேரை ஏற்றிக் கொண்டு நாகபட்டினத்தில் இருந்து 19 படகுகள் நேற்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டன.

இந்தியக் கடற்படைக் கரையோரக் கப்பலான 'மாதங்கா' காங்கேசன் துறை வரை பாதுகாப்பாகச் செல்லும்.

காங்கேசன்துறையில் இருந்து இந்தியக் கடற்படைக் கப்பலான 'ஐஎன் ஸ்திரிசூல்' பத்தொன்பது படகுகளுக்குக் காவலாக திருகோணமலை வரை செல்லும். (இ-எ)

### வடமராட்சியில் கண் தோண்டும் வதந்தி

வடமராட்சி, அக் 1

இனம் தெரியாத நபர்கள் சிறுவர்களின் கண்களைத் தோண்டுகிறார்கள் என்று வட மராட்சியில் பரவி உள்ள வதந்தியால் நேற்று பாடசாலைகளில் மாணவர் வரவு ஓரளவு குறைந்திருந்தது.

சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டிக் கொண்டு வந்து பின்பு பாடசாலை முடிவடைந்த பின்னர் கூட்டிச் சென்றனர்.

எமது வடமராட்சிச் செய்தியாளர் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று விசாரித்ததில் அப்படியான எந்த ஒருவரும் சிகிச்சைக்காக வரவில்லை என்றும் விஷமிகள் சிலரே இப்படியான வதந்தியைப் பரப்பி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-160)

### ★ பொது வேட்பாளர் சிறிமாவோ

கொழும்பு, அக் 1

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை நிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்ட முடிவில் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி பி. உட்பட ஏழு எதிர்க்கட்சிகள் இதற்கு உடன்பட்டிருப்பதாக சுதந்திரக் கட்சி வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (இ-எ)

### வடமராட்சி கிழக்கில் தேடுதல்

தாளையடி, அக்.1

வடமராட்சி கிழக்கில் உள்ள தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று ஆகிய கிராமங்கள் நேற்று வெள்ளிக்கிழமை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மருதங்கேணிச் சந்தைக்கு வந்த ஆண்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-144)

### காந்தி சிலைக்கு படையினர் வர்ணம்

யாழ்ப்பாணம், அக் 1

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்திஜியின் சிலைக்கு இந்திய அமைதிப்படையினர் நேற்று வர்ணம் பூசினர்.

அக்டோபர் 2 மகாத்மா காந்தியின் 120 ஆவது ஜெயந்தி தினம் ஆகும். (இ-10)

### சுபநேரம்

01. 10. 1988
புரட்டாதி - 15
சனிக்கிழமை

சுபநேரம்:
3 02முதல் 04 32வரை

ராகுகாலம்:
09 02முதல் 10 32வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## நோராட் உதவியுடன்
## 19 பாடசாலைகளின் திருத்த வேலைகள் ஆரம்பமாகும்
### நேற்று ஒப்பந்தம செய்யப்பட்டது

யாழ்ப்பாணம் அக் 1

நோராட் ஸ்தாபனத்தின் உதவியுடன் யாழ் மட்டத்தைச் சேர்ந்த 19 பாடசாலைகளைத் திருத்தி அமைக்கும் வேலைகளுக்கான கேள்விக் கூற்றுக்கள் கோரப்பட்டு, அவை பரிசீலிக்கப்பட்டு, கட்டட ஒப்பந்தங்கள் நேற்று செய்து கொள்ளப்பட்டன

இதனை அடுத்து இந்த திருத்த வேலைகள் அடுத்த சில தினங்களில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்தத் தகவலை யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் சஞ்சீவிக்குத் தெரிவித்தார். (இ-9)

## ஜனாதிபதித் தேர்தல்:
## இ.தொ. காங்கிரஸுடன் சு.க. இரகசியப் பேச்சு?

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவு தருமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக இருசாராருக்குமிடையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடை பெற்று வருவதாகவும் மிக நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு வழங்கும் என்பது இன்னமும் தெளிவு படுத்தப்படவில்லை.

இவ்வாண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் பல மாகாணங்களால் இ. தொ. கா அங்கத்தவர்கள் ஐ.தே. கட்சி பட்டியலிலேயே போட்டியிட்டு பல மாகாண சபை அங்கத்தவர்களாகத் தெரிவாகினர். இ தொ. கா வின் ஆதரவு இருந்ததாலேயே குறிப்பிட்ட சில மாகாணங்களில் ஐ தே. கட்சி வெற்றி பெறவும் முடிந்தது.

எனவே ஜனாதிபதி தேர்தலில் இ. தொ கா போட்டியிடாத பாதிலும் வெற்றியை முடிவு செய்வதில் அது முக்கியமான ஒரு பங்கை வகிக்கப் போவது நிச்சயம்.

இப்போது நடக்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்து இ.தொ கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில், கடந்த மாகாணசபைத் தேர்தலில் தெரிவான அமைச்சர்களாகவும் அங்கத்தவர்களாகவும் உள்ள இ.தொ. கா. உறுப்பினர்களின் நிலை என்ன வாகும் என்ற கேள்வியும் இ. தொ. கா. வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது. (அ)

## நேற்று 4 உலக சாதனைகள்

சோல், அக் 1

சோல் ஒலிம்பிக் போட்டியின் 14 ஆவது தினமான நேற்று 4 உலக சாதனைகள் உடற்பயிற்சியில் நிலைநாட்டப்பட்டன.

மகளிருக்கான 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் போட்டியில் சோவியத் யூனியன் தங்கப்பதக்கம் பெற்றது

ஆடவருக்கான 50 கிலோ மீற்றர் நடை போட்டியில் சோவியத் யூனியன் தங்கப்பதக்கம் பெற்றது.

இத்தூரத்தை சோவியத வீரர் 3 மணித்தியாலம் 38 நிமிடங்கள் 29 வினாடிகளில் நடந்து கடந்தார்.

மகளிருக்கான 100 மீட்டர் தடை ஓட்டப் போட்டியில பல்கேரியா தங்கப் பதக்கம் பெற்றது.

மூவாயிரம் மீட்டர் ஸ்ரீபிள் ஓட்டப் போட்டியில் கென்யா தங்கபபதக்கம் பெற்றது. (இ எ)

### நோபல் பரிசு

நோர்வே, செப் 30

ஐ. நா. அமைதிப் படையினருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது

## குரோமிக்கோ உட்பட ஐந்து முக்கிய தலைவர்கள் நீக்கம்

மாஸ்கோ, அக் 1

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை பீடத்தில் இருந்து ஜனாதிபதி குரோமிக்கோவ் உட்பட 5 முக்கிய தலைவர்கள் அகற்றப்பட்டனர்.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறுமாறு 82 வயதான திரு குரோமிக்கோவ் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

அகற்றப்பட்டவர்களில் திரு. டொப்ரினும் ஒருவர். இவர் திரு.கோர்பச்சேவின் வெளியுறவு ஆலோசகராக இருந்தார்

இன்று சனி சோவியத் நாடாளு மன்றத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெறும் அப்போது மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவருகிறது.

திரு. கோர்பச்சேவின் கரங்களைப் பலப்படுத்துவதாக மத்தியக் கமிட்டியின் இத் தீர்மானங்கள் அமைந்துள்ளன என்று பி. பி சி. வானொலி அறிவித்தது. (இ-எ)

## புங்குடுதீவிலிருந்து வந்த மினி பஸ் புரண்டது
### பத்துப் பேர் காயம்

யாழ்ப்பாணம், அக் 1

புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினி பஸ் ஒன்று புரண்டு விபத்துக்குள்ளானதால் பத்துப் பேர் வரை காயமடைந்தனர்.

நேற்றுக்காலை பத்து மணி அளவில் புங்குடுதீவு குறிஞ்சிக்காடு என்னும் இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்தவர்களில் விபரம் வருமாறு-

ஜே பிரான்சிஸ் (வயது 52 புங்குடுதீவு (6 ஆம் பக்கம் பார்க்க)

### சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் அக் 1

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் நேற்று ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காசிப்பிள்ளை கிருஷ்ண பிள்ளை (வயது 50) என்பவரே இறந்தவர் ஆவார்

நேற்று பகல் 1 30 மணி அளவில கோவில் வீதியில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வெளியே வந்த போது இவர் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள பொறியியலாளராகக் கடமையாற்றிய இவர் அரியாலையைச் சேர்ந்தவர்.

இவரது மரண விசாரணை நேற்றுயாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. (இ-10)

## யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டுகளுக்கு அமைதிப் படையினர் மறுப்பு

யாழ்ப்பாணம் அக். 1

'இந்திய இராணுவத்தினரின் யுத்த நிறுத்த மீறல்கள்'' என்ற தலைப்பிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை 27. 9 88 பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

இது தொடர்பாக இந்திய அமைதிப்படையினர் விடுத்த மறுப்பு அறிக்கை வருமாறு:-

இ. அ. கா. படை இரண்டு யுத்த நிறுத்த மீறல் குறிப்புகளை மறுக்கின்றது 17 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவனில்சில விஷமிகள் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளை வெண்டுமென்றே துப்பாக்கியால் சுட்டுவிட்டுப் பழியை இ. அ. கா. மீது சுமத்தினார்கள்.

22 ஆம் திகதி புங்குடுதீவில் பலவந்தமாக பணம் பறிப்பதாக இ. அ. கா. படையினருக்கு புகார் வந்ததன் பேரில் ரோந்துப்படை அந்த இடத்துக்கு விரைந்தது.

அப்படையினர் மீது ஒரு வெடி குண்டை வீசிவிட்டு, மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்ல முயன்றார் அப்போது அவர் சுடப்பட்டு, கைது செய்யப்பட்டார்.

இ அ. கா. படை எல்லா மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், எங்களால் மட்டும் ஒருதலைப் பட்சமாக அறிவிக்கப்பட்ட, ஆனால் விடுதலைப் புலிகளால அறிவிக்கப்படாத, யுத்த நிறுத்தத்தை ஒரு சமயத்திலும் நாங்கள் மீறவில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பலசுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்கள் (Gold fish (big), Angel, Guramiss, Silver Shark, ஆகியவையும் இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரட்ணவாசா, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. (பழைய புகையிரத வீதி) (6887)

திறி ஏக்கர் பாம் ஒரு நாள் Hyine வெள்ளை நிறக் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் இம் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் காலை 9 மணியிலிருந்து 4-30 மணிவரையும். கஜேராஸ் ஸ்தாபனம், இல. 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம் (C 340)

Yan Mar 3600 w Light Engine உடன் விற்பனைக்குண்டு. அத்துடன் Wild Level Machine னும் (Heerbrugg) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு. என் ரவீந்திரன், 2ம் குறுக்குத் தெரு, காங்கேசன்துறை. (7056)

யாழ்ப்பாண தெற்கு வத்தை ரோட், ... கத்தில் முன்னர் கந்தன் சண்முகநாதனுக்கும் பெண் சரோஜினிக்கும் சொந்தமாக இருந்து தற்போது வே. விஜயகுமாருக்குச் சொந்தமான இறை "மணிசிந்தாக் கலட்டி" என்னும் 3 பரப்புக்காணியும் அதற்குள் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீடும் கிணறும், தோட்டம் செய்யக் கூடியதுமான காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. விஜயகுமார், 53/5 ஆனந்த சத்திரலேன், கந்தர்மடம். (C297)

Lister Generator 9 K.W விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். Roshan Electrical Centre, No 440, Hospital Road, Jaffna. (6796)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கண்ணாடி அலுமாரி, Showcase. அலுமாரி, கட்டில், மேசை, Oven, சாப்பாட்டு மேசை, கண்ணாடி மேசை மற்றும் பல வீட்டுப் பொருள்களும் உடன் விற்பனைக்குண்டு. 167, Hospital Rd, (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக) யாழ்ப்பாணம். (6836)

சிங்கப்பூரில் இருந்து கொண்டு வரப்பட்ட கிளாஸ் வகைகள், சில்வர் பொருள்கள் Bamix கேக்மிச்சர், சுவர்மணிக் கூடு மற்றும் பல பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. 167, ஆஸ்பத்திரி வீதி, (சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக) யாழ்ப்பாணம் (6854)

## விற்பனையாகின்றது

6 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பரீட்சைக்கானதும் தேர்வுப் பரீட்சைக்கானதுமான புதிய தமிழ் மொழிப் பயிற்சி [விளக்கங்களுடன்] விலை ரூபா 20.00 கிடைக்குமிடம்: ஞானசுரபி புத்தகச் சம்பவி யாழ்ப்பாணம். (7054)

## காணி விற்பனை

நீர்வேலி வில்லுமதவடி பருத்தித்துறை வீதி அருகாமையில் ஏழு பரப்புக் காணி கிணறு மின் இணைப்புடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. க. ச. குமாரசாமி, ஆமயபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. (6873)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broller இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

Broiler இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: No 47, Vidanee Lane, Chundukkuli (7055)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் ...ட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன் நல்லூர் (6881)

மூன்றுமாத Golden Comet பேட்டுக் கோழி 1ஆம் திகதி சனிக்கிழமை விநியோகிக்கப்படும். விலை 65/- முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (6785)

## வலம்புரிச்சங்கு

இலங்கையில் இலட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூஜை ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்கு உண்டு ஆசச் சிறியதன் விலை ரூ. 100/- தொடர்பு கொள்ளவும்; தாஸ் 188, புதுச்செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 (6790)

## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இரண்டு படுக்கை அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு தேவை. விபரங்களுக்கு: J. P. T Ltd. 3. நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம். (7052)

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பதற்கு பெண் பிள்ளைகள் தேவை. மங்களபதி வைத்தியசாலை, அரசவீதி, பண்டாரகுளம் பிள்ளையார் கோயிலடி, நல்லூர். (6886)

யாழ். நகரில் அமைந்திருக்கும் அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ற்கு அனுபவம் வாய்ந்த ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். அஜந்தாஸ், 54, பெரியகடை, யாழ்ப்பாணம். (6798)

## மணமகள் தேவை

இந்து வேளாள 23 வயது கிளிநொச்சியில் சுய தொழில் புரியும் (மாதாந்த வருமானம் 3000/-) மணமகனுக்கு 20வயதுக்குட்பட்ட மணமகள்தேவை. மணமகள் கிளிநொச்சியில் வசிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். சீதனம், படம், சாதகக்குறிப்பு ஆகிய முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 199, C/o உதயன். [6879]

## MATRIMONIAL

Variety of Horoscopes Brides and Bridegrooms- Available with full particulars - Details arrangements guaranteed Call over after [2 p. m] on week days weekends from morning at 14, Vidans Lane, Colombuthurai West, Thiruvilangam (6791)

## வகுப்புகள்

### A/L இரசாயனம்

108, Brown Road A/L 89 இரசாயனம் ஆசிரியர் சதீஸ். ஒரு வருட, சனி, ஞாயிறு வகுப்பு (பிரிவு II) ஆரம்பம் (1- 10- 1988) சனி 4-00P-m சனி, ஞாயிறு (4 P m - 6 P.m) 4 - 5 பௌதிக இரசாயனம் 5 - 6 15 Basic- Chemistry பிரிவு I திங்கள், செவ், புதன், வியா. வெள்ளி ஆரம்பமாகிவிட்டது. (6787)

### Advanced English

புதியபிரிவு ஆரம்பம் 8- 10- 88 சனி, ஞாயிறு நாட்களில் காலை 8 30 மணி - 10. 30மணி S.B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6863)

### Spoken English

புதியபிரிவு தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியை முன்னிட்டு நேரம் பகல் 2மணி- 4மணி, நாட்கள் திங்கள், புதன் ஆரம்பம்: 3- 10 - 88 S. B. Iyar வைமன் வீதி, நல்லூர். (6864)

### ஆங்கில வகுப்புகள்

ஆங்கிலம் O/L 1988 பழைய, புதிய பாடத் திட்ட வகுப்புகள் A/L 1989 Grade 5-12 ஆங்கிலம் Spoken English தினசரி காலை மாலை நடைபெறுகிறது. கணகசபை, இல 8, ஆறும் ஒழுங்கை பலாலி வீதி, கந்தர்மடம். (6793)

### WIN INN LADIES ACADEMY

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம் விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புகளும், கீழைத்தேய, மேலைத்தேய இசைவகுப்புகளாகிய வயலின் வீணை கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலியனவும் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. Shorthand Typing வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன விண்ணப்பங்கள் காலை 9 - 12மணி வரை. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (6851)

## வாடகைக்கு விடப்படும்

சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். "பக்தியா அகம்" 3-ஆம் கட்டை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (7057)

## கஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜெர்மனி [West Germany] க்குச் செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் நாமதியாது கஜேராஸ் ஸ்தாபனம் No: 21 வேம்படிரோட் யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C341)

## தவறிவிட்டது

செல்வரத்தினம் ரவீந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை இல 593641732 V நல்லூர் தேர் அன்று கோயிலடியில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (6885)

## சென்னையில் தமிழ் இளைஞர் இருவர் காவலில்

சென்னை, அக் 1

இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவர் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பரமேஸ்வரன் [22வயது] மகேஸ்வரன் [23வயது] ஆகியோரே அந்த இருவருமாவர்.

பாஸ்போர்ட் இல்லாமல் தமிழ் நாட்டில் நீண்டநாட்கள் தங்கி இருந்ததாக குற்றம் சாட்டி இவர்களை சென்னைப் பொலீஸார் கைது செய்திருந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவ்விருவரையும் சென்னை நீதிமன்ற நீதிபதி இராதா கிருஷ்ணன் பதினைந்து நாட்களுக்கு காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ஓ-எ-4)

## மலையக இளைஞருக்கு சிறை

கொழும்பு, அக் 1

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்துக்கு மலையகத்தில் ஆட்களைச் சேர்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு ஒன்றில் எதிரிக்கு இரண்டு வாரச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பொகவந்தலாவை கொட்டகலையைச் சேர்ந்த எதிரியான நிஜாம் காதருக்கு (25 வயது) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் ஜி.எல். எம் டி- சில்வா இத் தண்டனையை வழங்கினார். (ஓ)

## ST.PATRICK'S COLLEGE
## ADMISSIONS 1989

**Admissions will be made only to the following classes:-**

YEAR I: Students born before 31-01-84 and after 01-02-83.
YEAR IV: Students born after 01-02-80.
YEAR VI: Students born after 01-02-78.
YEAR IX: Students born after 01-02-75.

Apply on Forms (Rs. 25/- each including Exam Fees). available at the College Office from 03-10-88 to 21-10-88 during school days.

Last day for handing over Applications Form is 28-10-88.

Admission Tests will be held on Saturday the 5th November, 1988] at 8.30 a m. in the College.

Bishop's Scholarships will be awarded on the merits of the performance at the Admission Test.

—RECTOR

St. Patrick's College, Jaffna.

(C 202)

J. M. J.

உங்கள் பயண அமைப்பாளர்

## எஸ். பி. அன்ரன்

வழங்கும்

## வெளிநாட்டுப்பயண ஒழுங்குகள்

செலவம் கொழிக்கும்

### 1. குவைத் நாட்டில்

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்- Cleaners
சம்பளம் 35-40 குவைத் டினார்கள்
உணவு, உறைவிடம் இலவசம்
குவைத் டிறைவர்
H. V. டிறைவர் -Drivers
L. V. டிறைவர்
குவைத் கப்பல் வேலை வாய்ப்புகள்

### 2. சவூதி அரேபியா

சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் Cleaners உடனடியாகத் தேவை
சம்பளம்: 4?0 SR, ஓவர்டைம்,
உணவு, இருப்பிடம் இலவசம்

3. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறிஸ், சைப்பிரஸ், லெபனான், யோர்தான், ஓமான், சிங்கப்பூர், அபுதாபி
வீட்டு வேலை பணிப்பெண்கள் உடனடியாகத் தேவை
வயது 22—35

சுய விபரங்களுடன் நேரில் வரவும். மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. ANTON**
No 648½, ஆஸ்பத்திரி வீதி,
Front of I C.
யாழ்ப்பாணம்.

எமது நீர்வேலி கிளை இன்று முதல் இந்த விலாசத்தில் இயங்கும்.
கிளை அலுவலகம்:

**G. ஞானம்**
அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி மத்தி, நீர்வேலி.
C 342)

## காணி விற்பனை

அரியாலை மேற்கு திருமகள் வீதியில், நல்ல சுற்றுடலிலுள்ள மா, பலா, தென்னை நல்ல தண்ணீர்க் கிணறுகளுடன் கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க

91, கனகரத்ணம் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(6889)

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற நாட வேண்டிய இடம்

## FORTUNA ENTERPRISES

(Labour License No. 79)

பாரின், குவைத், சவூதி.
யூ. ஏ. ஈ, சிங்கப்பூர்

வேலை வாய்ப்புகள்

(1) லேபரேர்ஸ் — 50
(2) டிறைவேர்ஸ் — 05
(3) ஹெவி வெயிக்கிள் டிறைவேர்ஸ் (H V.Drivers) — 07
(4) வீட்டுப் பணிப்பெண்கள்
(5) மேசன்
(6) காப்பென்டேர்ஸ்
(7) எலெக்ரீஸன்
(8) மெக்கானிக் (Diesel & Petrol)
(9) தோட்ட வேலையாட்கள் (Gardeners))
(10) பெண் தையற்காரர் (Female Tailors)

நீங்கள் நாடவேண்டிய முகவரி:

**போடியூன என்ரபிரைசஸ்**

யாழ்ப்பாணப பிரதிநிதி:
இ. விஸ்வேஸ்வருயன்
3ஆம் கட்டை லேன்.
கே. கே. எஸ். வீதி.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

(6877)

தமிழினத்தின் விடுதலைக்காக


## 15.9.1987 முதல் 26.9.1987 வரை

நல்லூரில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த

# தியாகி திலீபன் (இ. பார்த்திபன்)

நினைவாக நல்லூரில் நிறுவப்பட்ட

# தியாக தீப தூபி



அர்ப்பணிப்பு

**யாழ். மாநகராட்சிமன்ற ஊழியர்கள்.**

28. ~. 1988 இல்

மாநகர ஆணையாளர்

**திரு. சி. வி. கே. சிவஞானம்**

அவர்கள்

தலைமையில் நடைபெற்ற வைபவத்தில்

திலீபனின் தந்தை ஆசிரியர் இராசையா அவர்களால் தியாக தீபம் ஏற்றிவைக்கப்பட்டது.

பிரசுர ஒழுங்கு:- ஞானம்ஸ் ஸ்ருடியோ,
ஹோட்டல் ஞானம்ஸ்,
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறவுண்ட வாசல்

17-9-88 அன்று நடைபெறவிருந்த இந்நிகழ்ச்சி 2-10-88 ஞாயிறு மாலை பி. ப 3.00 மணிக்கு சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரவேசம் ரூபா 5.00

President
SCM
St. John's College

(7103)

## University of Jaffna - Sri Lanka
## VACANCY
### Purchasing Officer

Refrerence the Advertisement dated 17-09-1988 for the post of Purchasing Officer it is hereby notified that the Salary Scale should read as:

Rs 2,300 -7 x 50, 10 x 75 - 3,400 p.m.

Actg. Registrar

(C/ 328)

## ரயிலில் கொள்ளை

கொழும்பு, அக். 1

காலி-கொழும்பு ரயிலில் பயணம் செய்தவர்களிடம் இருந்து இனந்தெரியாத நபர்கள் நகைகளைக் கொள்ளையடித்த சம்பவம் நடந்த திங்கள் பிற்பகல் இடம்பெற்றது.

கொள்ளைக் கோஷ்டி களுத்துறை வடக்கு ரயில் நிலையத்தில் இருந்து ரயிலில் ஏறியது. உடைமைகளைக் கொள்ளை அடித்த பின்னர் வாதுவை ரயில் நிலையத்தில் கொள்ளைக் கோஷ்டி இறங்கிச் சென்றது.

உடைமைகளைப் பறிகொடுத்தவர்களில் சிலர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஆவர்.

(ஓ-எ)

## முதலாம் ஆண்டு
### நிறைவு நினைவஞ்சலி



இளவாலை

**செல்வி தேவிகா நாகரத்தினம்**

மலர்வு: 12-02-1963  உதிர்வு: 12-10 1987


எங்கள் குடும்பத்தை ஏற்றமுறச் செய்த தங்கமே, எங்கள் தவப் புதல்வியே, உன்னை வழியனுப்பி வைத்தோமே வாழ்வில் உயர்வதற்கு, வழிபார்த்தஎங்களுக்குவந்தது உன் துயரச் செய்தி. திரைகடல் ஓடியும் நீ திரவியத்தைத் தேடினையே, கருணையில்லாக் காலன் உன்னைக் காணாமற் கவர்ந்தானே, உன் நினைவில் உன் நிழலில் உத்தமியே நாமிருப்போம். என்றும் இறை பாதத்தில் நீ இருக்கத் தொழுகின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

தந்தை, தாய்,
சகோதரர்,
சுற்றத்தார், நண்பர்கள்,

(6630)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. க. அப்புத்துரை**

அன்னைமடியில்: 24-09-1942  ஆண்டவன் அடியில்: 12 10-1987

திதி: 01-10-1988

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், எமக்கு நல்வழி காட்டி அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழவைத்த தெய்வமே! உமது சிந்தையோடு வாழ்ந்த எங்கள் வாழ்வு ஓர் அமர காவியம். எம் நெஞ்சில் நினைவுள்ளவரை தாங்கள் நிலைத திருப்பீர்கள்.

தங்கள் பிரிவால் வாடும்:

உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

மனைவி, மக்கள்,
சகோதர சகோதரிகள்.

(6649)

## கிளிநொச்சியில் கிராம சேவகர் நேர்முக பரீட்சை

யாழ்ப்பாணம், அக். 1

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளே கிளிநொச்சி கச்சேரியில் நடைபெற்று வருகின்றன.

யாழ். மாவட்ட கிராம சேவையாளருக்கான நேர்முகப் பரீட்சை ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

(ஓ-144)

## முதலாம் வருட இதய அஞ்சலி



விஸ்வலிங்கம் மங்கையற்கரசி
தோற்றம்: 08-10-38
மறைவு: 12-10-87



விஸ்வலிங்கம் சுகன்யா
தோற்றம்: 03-11-63
மறைவு: 12-10-87



விஸ்வலிங்கம் ஜீத்தா
தோற்றம்: 28-04-66
மறைவு: 12-10-87



ஜெனகன்
புலேந்திரன் சர்வேஸ்வரியின் மகன்
தோற்றம்: 07-07-79
மறைவு: 12-10-87

12-10-1987 இல் பிரம்படியில் அகால மரணமான எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

மக்கள்:- கலாராணி, சுசிந்திரன், கிருசாந்தி, சுதாகரன், மற்றும் சகோதர, சகோதரிகள்

P. சர்வேஸ்வரி
பிரம்படி, கொக்குவில்

(6641)


# வட்டி மீதான உச்சவரம்பை மத்திய வங்கி உயர்த்தியதைத் தொடர்ந்து மேர்கன்டைல் கிறெடிற் நிறுவனம் உங்கள் பணவைப்புகளுக்கான வட்டி விகிதத்தை அதிகரித்துள்ளது.

| காலம் | தொகை | மாதாந்தம் வழங்கும் வட்டி | முதிர்ச்சியில் வழங்கும் வட்டி |
|---|---|---|---|
| 3 மாதங்கள் | ரூ. 2,500 அல்லது மேல் | —— | ஆண்டுக்கு 15% |
| 1 வருடம் | ரூ. 2,500 அல்லது மேல் | ஆண்டுக்கு 16% | ஆண்டுக்கு 18% |
| 2 வருடங்கள் | ரூ. 2,500க்கும் ரூ. 200,000க்குமிடையே | ஆண்டுக்கு 18% | ஆண்டுக்கு 22% |
| | ரூ. 200,000 அல்லது மேல் | ஆண்டுக்கு 20% | ஆண்டுக்கு 24% |
| 3 வருடங்கள் | ரூ. 2,500 அல்லது மேல் | ஆண்டுக்கு 18% | ஆண்டுக்கு 24% |

### எமது புள்ளிவிபரங்கள்

| | 31-03-87 | 31-3-86 | 31-03-85 |
|---|---|---|---|
| மூலதனம் | 10,750,000 | 10,750,000 | 10,750,000 |
| கையிருப்புகள் | 166,979,549 | 133,231,106 | 126,953,242 |
| வைப்புகள் | 1,186,955,656 | 1,022,805,036 | 755,262,385 |
| கடன்கள் | 207,410,706 | 231,588,893 | 197,020,597 |
| மொத்தச் சொத்துகள் | 1,853,498,125 | 1,619,109,324 | 1,256,650,309 |
| | 1986/87 | 1985/86 | 1984/85 |
| வரிசெலுத்துமுன் இலாபம் | 17,938,929 | 14,445,412 | 12,987,368 |
| வரிசெலுத்தியபின் இலாபம் | 12,938,929 | 10,545,412 | 10,987,369 |
| அறிவிக்கப்பட்ட பங்கிலாபம் | 3,547,500 | 2,575,000 | 2,575,000 |

தலைவர் என். யூ. ஜயவர்தன

### பணிப்பாளர்கள் சபை

ஏ. என். யூ. ஜயவர்தன (முதல்வரும் முகாமைப் பணிப்பாளரும்)
திருமதி வை. என். பெரேரா (பிரதி முதல்வர்)
கே. விக்னராஜா (ஆலோசனைப் பணிப்பாளர்)
ஏ. எம். மொறகொட (நிறைவேற்றுப் பணிப்பாளர்)
எம். பி. ஏ. ரஹீம் (நிறைவேற்றுப் பணிப்பாளர்)
கே. செல்வநாதன் (மாற்று எம். செல்வநாதன்)
ஆர். சேனநாயக
ஆர். யு. டி. த சில்வா

கூட்டிணைத்த திகதி 4, ஜூலை 1956

### பிரதான தொழில் முயற்சிகள்

தவணைக் கொள்வனவுக்கு நிதியளித்தல், குத்தகை, குத்தகைக்கொள்வனவுக்கு நிதியளித்தல், கடன் நிதி, வாணிபத்திற்கு நிதியளித்தல், உத்தரவாத வசதிகள், வங்கி வசதிகளுக்கு ஒழுங்கு செய்தல், வர்த்தக நிதி, காப்புறுதிச் சேவை.

மேர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்
11/8, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 021/22321


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி க. பூரணம்**

தோற்றம்: 01 - 01 - 1923  மறைவு: 12 - 10 - 1987





**க. யோகலிங்கம்**  **செல்வி க. சந்திராதேவி**

தோற்றம்: 25 - 10 - 1959
மறைவு: 12 - 10 - 1987

பூரணமாய் எம் வாழ்வு
பூமியிலே சிறந்திடவே
பூரணமே நீ இன்றி எம் இல்லம்
பூரணமாகாதே!
யோகலிங்கமே எம்மை விட்டு நீ
போன தெங்கே சொல்?
போக மான பூமியிலே
மோனமாகிப் போனாயோ!
சந்திராதேவியே நீ
சங்கமமான தெங்கே சொல்?
இந்திர லோகமான எம தில்லம்
இன்னல்மயமானதே!
அந்தோ! உமதாத்மாக்கள்
சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

காலம் சென்ற யோகலிங்கம் குடும்பம் நினைவாக 02 - 10 - 1988 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மேற்கு சொர்ணபதி விநாயகர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

உற்ற நண்பர்கள்.

'சாந்தி விலாஸ்' கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்,

(6871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மாலே 3-00 மணிக்கு
வட்டு. தொழில்நுட்பக்கல்லூரி
மண்டபத்தில்

"அன்பரின் அழைப்பு"

— சுவிசேஷ நிகழ்ச்சி —

கிறிஸ்துவுக்காக
இளேஞரின் படைப்பு

அனுமதி இலவசம்

(6860)

# முக்கிய அறிவித்தல்

தலேயாளி ஞானவைரவர் சுவாமி கோயிலில் திருத்த வேலே செய்யவோ அல்லது திருத்த வேலே செய்வதற்கென்று பணம் சேகரிக்கவோ நான் எவருக்கும் அனுமதி அளிக்கவில்லே. ஆகையால் பொதுமக்கள் இது குறித்துக் கவனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கோயில் சம்பந்தப்பட்ட எந்தவிடயமேனும் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி R. கனகரத்தினம்
(உரிமையாளரும் முகாமைத்துவ அதிகாரமுடையவரும்)

தலேயாளி,
கொக்குவில்.

(6872)

ஆறு நெஞ்சின் ஊற்றுய் வடியும்

## முதலாம் ஆண்டு

## கண்ணீர் அஞ்சலி



செல்வன்
சாந்தலிங்கம் பிரபாகரன் (S.P.)
சுன்னுகம் தெற்கு,
சுன்னுகம்.

ஆண்டவன் படைப்பு:- 27- 03- 1964
அநியாய அழிப்பு:- 12- 10- 1987
திதி:- 01- 10 1988

அன்புருவே! அகல் விளக்கே!
அகலாத பேருருவே!
புன்சிரிப்'ப பூம் பிரபா!
புது நட்சத்திரமே!
கண்மணியே! சுன்னுகம்
உதிர்ந்த கட்டிளங் காளேயே பிரபா!
அன்னே மனம் அங்கலாய்க்க
அன்புத் தந்தை நோக!
முன்னே பிறந்த சகோதரர்கள்
முழு நினேவின்றிப் பரிதவிக்க!
என்ன செய்வதென்றே
இளேயவர்களும் ஏங்க!
மின்னொளியாய் மறைந்து விட்டாயே!
ஆறு வருடங்கள் வரை
அன்பு நண்பர்களாய் வாழ்ந்தோமே!
தாளாத் துயரில் தாழ்த்தி விட்டு
தவிக்க விட்டதேன் பிரபா!
உன்னேயிழந்து ஒரு வருடமாகியும்
என் கண்ணெதிரில் நீ இருந்து பேசிச்
சிரிக்கின்றுய்!
இன்னும் எத்தனே வருடங்கள் ஆனுலும்
உன்னேக் கண்டிட என் மனம் துடிக்குதே
பிரபா!
கண்ணீர் பெருகவே! உன் ஆத்மா
சாந்தியடைய இந்நாளே வேண்டி
இறைஞ்சுகின்றேன்.

12- 10 -1987 அன்று ஷெல் அடிக்குப் பலியான சுதாகரன், ஜெயகந்தன் ஆகியோருக்கும் எனது கண்ணீர் அஞ்சலிகள்.

தகவல்:- ஆருயிர் நண்பன்
க. கலேச்செல்வன்,
இராலசயா வீதி,
வேலணே- 5

(6643)

## Immediate Vacancies in

# SAUDI ARABIA

1. Work Schedullar (Preventive Maintenance of Air Condition)
2. HVAC Split Units/Central A/C Tech. — 800SR—1000+100 F.A.
3. A/C Technicians — 700SR—800+100 F.A.
4. Boiler Technicians — 800SR—1000+100 F A.
5. Home Appliances (Electrical Equipment) Technicians— 700SR—800+100 F.A.
6. Electronic Technicians— 750SR—900SR
7. Cleaning Equipment Mechanics — 700—800+100 F A.
8. Heavy Equipment Mechanic (Buldozer Exauator Crane Etc )— 900 SR+200 F A.
9. Secretary/Typist — 700SR+100 F.A.
10. Air Compressor Mechanic— 800—900+100 F.A.
11. Plumbers — 600SR+150 F.A.
12. Painter — 500SR&150 F.A.
13. Carpenter — 550&150 F.A.
14. Generator Electricians — 600&150
15. Site Supervisors — 600&150 F.A.
16. Building Electrician — 600&150 F.A.
17. Swimming Pool Attendent- 700SR+150FA.
18. A /C Technician 750+150 F.A.
19. Civil Supervisor 600+150 F.A

Please Call over at Jaffna Office with Certificate and Passport at your earliest.

Interview will be held in Colombo on 1st, 2nd, 3rd and 4th of October, 1988.
**Flight will be arranged within 15 days.**

# T V TRAVELS & TOURIST

[Front of Railway Station]
Brown Road, Kokuvil, Sri Lanka.

(C/93)

## ஓராண்டு நினேவஞ்சலி



க மகேந்திரன் (அகிலன்)
அரியாலே.

தாயின் மடியில் 11.12.1966 மண்ணின் மடியில் 12.10.1987
திதி:— 1.10.1988

நாற்பது ஆண்டுகள் நசுக்குண்டோம் என்று
துப்பாக்கி ஏந்திட்ட வேங்கையே அகிலா!
களமது புகுந்து தமிழினமது சாக்க
பல சாசலங்கள் புரிந்து சிங்கள சிங்கங்களே
சிதைத்தும், சிறைபிடித்தும் சாதனே புரிந்தாய்!
வெற்றி நமக்கென்று மகிழ்ந்திட்ட வேளேயில்
நடந்த அனர்த்தங்களே எப்படிக் கூற?
பல்கலேயும் பயிலும் பல்கலேக் கழகம் காத்திட
வீறு கொண்டு நீயும்பாய, பயந்தன படைகள்!
பயந்த படைகள் உன்னேயும் சாய்த்திட
தமிழ் மணம் கமழும் உன் வீர உதிரம்
மண்ணேயும் நனேத்திட அகிலா என்றே
அகிலமே அழுதிட அகிலா நீ சென்று
ஓராண்டு ஆனதே!
எம் நெஞ்சை விட்டகலாத ஒளியே!
உன் இலட்சியப் பாதையை மறவார்கள்
உன் தோழர்கள்!

என்றும் உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேம்.

பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணி, பிள்ளேகள்,
நண்பர்கள்.

(6857)

# அரசாங்க அறிவித்தல்

திருத்த முடியாத தளபாடங்களின் பகுதிகள் 10- 10- 88 திங்கட்கிழமை காலே 11 00 மணியளவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 304/3ம் இலக்க கட்டட வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஆகக்கூடிய கேள்விக்காரர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி பி. ப. 3. 00மணிக்கு முன்னதாக அவைகளே அகற்ற வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அவை பின்னெரு நாளில் அகற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. அவைகளேப் பார்வையிட விரும்புவோர் அன்றைபதினம் காலே 9. 00 மணிமுதல் 10. 45மணிவரை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம்.

சுகாதார சேவைகள் பிராந்தியப்
பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பிராந்திய,
பணிப்பாளர் பணிமனே
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
28- 09- 88

(C/ 330)




## எண்ணெயிட்டு முழுகுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

1. உடல் வலி நீங்குகிறது.
2. இளமையைப் பாதுகாக்கிறது.
3. முதுமையை விரட்டி அடிக்கிறது.
4. கண்களேப் பாதுகாக்கிறது.
5. பார்வையைப் பிரகாசமாக்குகிறது.
6. உடலுக்கு வலிமையைத் தருகிறது.
7. ஆயுளே விருத்தி செய்கிறது.
8. நல்ல தூக்கத்தை உண்டாக்குகிறது.
9. தோலே மிருதுவாக்குகிறது.
10. உடல் சோர்வை அகற்றுகிறது.
11. கபத்தை நீக்குகிறது.
12. பல்லில் ஏற்படும் நோயைத் தடுக்கிறது.
13. சுவையின்மையை மாற்றுகிறது.


★ ★ ★

நீராடி மகிழ
"ஒலிவ் ஸ்நானப் பவுடரை"
வாங்கி உபயோகியுங்கள்
பைக்கற் விலே ரூபா ஒன்று மட்டுமே!

**'இது ஓர் மில்க்வைற் தயாரிப்பு'**

(C/ 337)

## ஒருவருட நினேவஞ்சலி



செல்வரத்தினம் குலேந்திரன்

ஜனனம்: 29 - 9 - 1959 மரணம்: 12 - 10 - 1987
திதி: 01 - 10 - 1988

மானிடனுக உலகில் அவதரித்தாய்
அதிலும் கூன் குருடு செவிடு நீங்கப் பெற்று
மண்ணில் அவதரித்தாய்
மானிடனுசப் பிறந்து அதன் முழுப்பலனேயும்
அனுபவிககு முன் குதறிவிட்டார்கள்
பாவிகள். பொய்யுடம்பை மண்ணுக்கு
விட்டு எங்கோ சென்றுய்.
உனது ஆத்மா சாந்தி அடைய
என்றென்றும் அந்த "சச்சிதானந்த
பரம்பொருளே"

இறைஞ்சி நிற்கும்:
மனேவி, மகள். மைத்துனர்,
மைத்துனிமார், மாமா,
மாமி.

பிரம்படி லேன்,
கொக்குவில்.

(6827)

## ✶ கொம்பியூட்டர் பயிற்சி ✶

Diploma in Computer Programming
in Basic & Data processing Course
New Batches Start on:

1- 10- 88 (8. 30 a.m) Weekend Batch
7- 10- 88 (9. 00 a. m) Week Day Batch

# I D P

Institute of Data Processing

யாழ்ப்பாணம்
(K. K. S Road
சிவன் கோவிலடி)

தெல்லிப்பழை
(4. 00 P.m)
(துர்க்கையம்மன் கோவிலடி)

(6644)

சங்கானே
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.(வ. உ)

## வெற்றுச் சாக்கு

# கேள்வி விண்ணப்பம்

சங்கானே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனேக்குண்டு. வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தில பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மூலேயில் வெற்றுச் சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு "பொது முகாமையாளர், சங்கானே ப நோ. கூ, சங்கம், சங்கானே" என்ற முகவரிக்கு 5- 10- 88ஆம் திகதி நன்பகல் 12 00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்
சங்கானே ப. நோ. கூ. சங்கம்.
28-9-88

(C/334)

# WANTED

**For immediate employment a Library Assistant with the following minimum qualifications.**

1. Credit in English at the Ordinary Level
2. Three Passes in one sitting at the Advanced Level
3. Intermediate Examination in Library Science.

**OR**

At least five years experience in a Recognised Library with not less than 10,000 Volumes.

**Apply on forms available at the Principal's Office on or before 8th October, 1988.**

PRINCIPAL.
JAFFNA COLLEGE,
VADDUKODDAI.

(C/331)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சீமெந்துத தொழிற்சாலே,
காங்கேசன்துறை.

# கேள்விப் பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலேயில் பின்வரும் வாகனங்களே வாடகைச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக விண்ணப்பப் பத்திரங்கள் வாகனச் சொந்தக்காரர் / ஒப்பந்தக்காரர் ஆகியோரிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. தொழிற்சாலேப் பாவிப்புக்காக மோட்டார் வண்டி ( Motor Car ) மூன்று
2. தொழிற்சாலேப் பாவிப்புக்காக 06 தொடக்கம் 09 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடியவான் (Van) இரண்டு
3. தொழிற்சாலேப் பாவிப்புக்காக உழவு இயந்திரம் ( Tractor ) இரண்டு

மேற்குறிப்பிட்ட கேள்விப்பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலே 8. 30 மணி தொடக்கம் மாலே 4. 00 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலே 8. 30 மணி தொடக்கம் நண்பகல் 12. 00 மணிவரையும் மீளப் பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விப் பத்திரங்கள் 1988. 10. 10 ஆம் திகதி மாலே 4. 00 மணி வரை விநியோகிக்கப்படும்.**

**--தொழிற்சாலே முகாமையாளர்.**

(C/304)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூர்ந்து கவனியுங்கள்!

## 'ஷப்ரு'வின் நிதி அறிக்கையை கூர்ந்து கவனியுங்கள்!! நம்பிக்கை தானே பிறந்துவிடும்!!!



### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,817,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,395,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,818 | 7,716,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,873 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

#### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும், அபரிமிதமான வளர்ச்சியும் உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. வங்கியியலிலும் நிதியியலிலும் சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன் அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

#### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்களுடன் பல்வேறு விசேட சலுகைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. உங்கள் தேவைக்கேற்ப வட்டியை மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில் பணமாகவோ, காசோலையாகவோ அன்றி வங்கிக்கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

#### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே எமது பிரதான நோக்கமாகையால் அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

#### சுலபமான மீளப்பெறுகை

உங்கள் முதலையும் வட்டியையும் முதிர்ச்சிக்கால எல்லையில் சுலபமாக மீளப்பெறலாம். போதியளவு முன்னறிவித்தலுடன் உங்கள் முதலீட்டை குறித்தகால முதிர்ச்சிக்கு முன்னும் மீளப் பெற்றுக்கொள்ளமுடியும்.

#### மேலதிக வசதிகள்

இவை வைப்புப் பொறுப்பாகவுள்ள கடன்கள், உத்தரவாதப் பத்திரங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்களுக்கான தவணைக் கொள்வனவு நிதி, வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி நிதி வசதி. மேலும் அவைபற்றிய ஆலோசனைகள் போன்ற பலவற்றை உள்ளடக்கியுள்ளன.

★

#### வைப்பு சான்றிதழ் CERTIFICATE OF DEPOSIT

| காலம் | சான்றிதழின் பெறுமதி | | | | வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 மாதம் | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 ” | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 ” | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| முதிர்ச்சிப் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | • |

#### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B., (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond.), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

### இலங்கை மத்திய வங்கியின் விதிகளுக்கு அமைய அதிகரிக்கப்பட்ட புதிய வட்டி வீதங்கள்

#### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

#### 2. முதலீட்டுச் சேமிப்புத்திட்டம் INVESTMENT SAVINGS DEPOSIT

| | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| ரூபா | 12% | 14% | 16% |
| 100/= | 1,280.93 | 2,783.41 | 4,643.27 |
| 200/= | 2,561.86 | 5,566.82 | 9,286.54 |
| 300/= | 3,842.79 | 8,350.23 | 13,929.81 |
| 400/= | 5,123.72 | 11,133.64 | 18,573.08 |
| 500/= | 6,404.65 | 13,917.05 | 23,216.35 |
| 600/= | 7,685.58 | 16,700.46 | 27,859.62 |
| 700/= | 8,966.51 | 19,483.87 | 32,502.89 |
| 800/= | 10,247.44 | 22,267.28 | 37,146.16 |
| 900/= | 11,528.37 | 25,050.69 | 41,789.43 |
| 1000/= | 12,809.30 | 27,834.10 | 46,432.70 |

SHABRA UNICO FINANCE LIMITED
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.
யாழ் முகவரி: ... யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

சகலகலாவல்லி மாலேயும், அழகிய சரஸ்வதி ஸ்ரிக்கரும் பெற்றுக்கொள்ள 20 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளே வெட்டி அனுப்புங்கள்.

**மில்க்வைற்,**
யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

01 - 10 - 1988 சனிக்கிழமை



"உழைப்பே உயர்வுக்கு வழி"
— மகாத்மா காந்தி.

2. 10 88 அன்று மகாத்மா காந்தி பிறந்த தினமாகும். 20 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளே அனுப்பி மகாத்மா காந்தியின் "படிப்பினே" என்ற புத்தகத்தையும், அழகிய காந்தி ஸ்ரிக்கரையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்

**மில்க்வைற்,** யாழ்ப்பாணம்.



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலே வாய்ப்பினேப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

### COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 40 நாட்கள்
ஆரம்பம்: 07-10 1988 (திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)
கட்டணம்: 950/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

### COMPUTER PROGRAMMING IN D BASE III

பயிற்சிக் காலம்: 2 மாதம்.
ஆரம்பம்: 11-10-1988 (செவ்வாய், வியாழன் வகுப்புகள்)
கட்டணம்: 1250/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM Compatible, Computer இல் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்

**UNIKCO**
**Computer Centre**
No. 5, மின்சார நிலேய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபால் கந்தோருக்கருகாமை)
(C 322)


## மெமோறியல் விளேயாட்டுப் போட்டி

குருநகர், அக் 1

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலேயின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலே விளேயாட்டு மைதானத்தில் நடைபெறும்

கல்லூரி அதிபர் திரு வி. பொன்னுத்துரை தலேமையில் நடைபெறும் இந்த விளேயாட்டுப் போட்டிகளுக்கு யாழ் கல்வித் திணேக்கள கல்வி அதிகாரி திரு ஆர். கே குலசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச தனஞ்செயன் கலந்து கொள்வார். (இ-51)


**A/L**
**MATHS**
ஆசிரியர்:-
**ரவிமோகன்**
யாழ்ப்பாணம்
பெருமாள் கோவிலடி
(6844)


அமரர் சிவரத்தினம் ஞாபகார்த்த

# கரபந்தாட்ட இறுதிப் போட்டி நாளே ஷப்ரு நிதி நிறுவன ஆதரவுடன்

யாழ்ப்பாணம். அக்.1

ஷப்ரு நிதி நிறுவன ஆதரவில் அரியாலே ஐக்கிய கழகம் நடத்தும் அமரர் மு சிவரத்தினம் ஞாபகார்த்த கரபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நாளே ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு அரியாலே சன சமூக நிலேயத்தில் போட்டிகள் ஆரம்பமாகும்

3 மணிக்கு நடைபெறும் "செற் - அப்" முறையிலான பெண்கள் கரபந்தாட்ட காட்சிப் போட்டியில பாஷையூர் சென் அந்தனிஸ் வி. க அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் வி. க அணி மோதும்

3. 45மணிக்கு நடைபெறும் அமரர் ம. சிவரத்தினம் ஞாபகார்த்த இறுதிப்போட்டியில் திருநெல்வேலி சிவன் வி. க அணியை எதிர்த்து அரியாலே ஐக்கிய சமூக அணி மோதும்

5 மணிக்கு நடைபெறும் "செற் - அப்" முறையிலான காட்சி' கரபந்தாட்டப் போட்டியில் பாஷையூர் சென் அந்தனிஸ் வி.க அணியை எதிர்த்து அரியாலே ஐக்கியசமூக மோதும்.

இந்தப் போட்டிகளுக்கு யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு மு இராமலிங்கம்பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

ஷப்ரு நிதிநிறுவன நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன், பொது முகாமையாளர் திரு. சி. ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

கழகத் தலேவர் திரு. எஸ். ரி பத்மநாதன் தலேமையில் நடைபெறும்விழாவின்முடிவில் கழகச் செயலர் திரு. இ. கே. குமரையா நன்றியுரை வழங்குவார்.

ஷப்ரு நிதி நிறுவன ஆதரவில் 1987 ஆம் ஆண்டு அரியாலே ஐக்கிய கழகத்தினரால் நடத்தப்பட்ட 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கும் அன்றைய தினம் பரிசில்கள் வழங்கப்படும்.

இந்தப் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளேயாட்டுக்கழகம் சாம்பியனுகியது குறிப்பிடத்தக்கது (ஒ- க)

## 5 லட்சம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுப்புக்கள் வரை காணுமல் போயிருப்பதாக தெரியவந்துள்ளதாம்.

இதனே அடுத்து அங்கு எஞ்சியிருந்த தொகுப்புகள் யாவும் பாதுகாப்பான ஒரு இடத்துக்கு கொண்டுவரப் பட்டு வைக்கப் பட்டிருக்கின்றன.

இதேவேளேயில் காணுமற்போயிருக்கும் மூலப் பிரதித் தொகுப்புக்களே மீண்டும் தயாரிப்பதற்கான சட்ட ஆலோசனேகளேப் பெறுவதற்கு தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணிகளின் மூலப்பிரதி தொகுப்புககளே கிளிநொச்சிக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஐ-க)

## சாரணர் சங்க பாசறை விழா

மானிப்பாய், அக் 1

காங்கேசன் துறை மாவட்ட சாரணர்சங்கத்தின் வருடாந்த பாசறை விழா இன்றும் நாளேயும் (1 ஆம் 2 ஆம் திகதிகளில்) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெற இருக்கும் இப் பாசறை விழாவில் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. வெ சபாநாயகம், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு மு. பஞ்சலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். (இ-90)

## புங்குடுதீவு...

10 ஆம் வட்டாரம், ஆர். அருந்தவராசா (வயது 26) புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம், கே. மகேஸ்வரன் (வயது 21) புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம், எஸ். யோகநாதன் (வயது 32) புங்குடுதீவு, திருமதி நடராசா கெங்காதேவி (வயது 20) புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம்.

எஸ். தையல்நாயகி (வயது 52) புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம், அ. சத்தியபாமா (வயது 23) புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம், நடராசா தங்கம்மா (வயது 52) புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம்.

ரி சிவபாக்கியம் (வயது 30) புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம், ஞானேஸ்வரி கந்தசாமி (வயது 30) புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம்.

காயமடைந்தவர்கள் அனேவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். (இ-10)

## பரிசளிப்பு விழா

சங்கானே அக்.1

சங்கானே சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முதலாம் திகதி சனிக்கிழமை காலே 9. 00 மணிக்கு நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலேமையில் நடைபெறவுள்ள விழாவுக்கு ஷப்ரு நிதி நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறூர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வித் திணேக்கள பொறியிலாளர் திரு அன்ரனிபிரான்சிஸ், திருமதி ருஜினி பிரான்சிஸ், பண்டத்தரிப்பு கொத்தணி அதிபர் திருமதி டி. தம்பிராசா, பாடசாலே அபிவிருத்திச் சபையின் செயலாளரும், கல்வி அபிவிருத்திச் சபையின் பொருளாளருமான சிமான் த. ஜீவரத்தினம், திருமதி, பூ. ஜீவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்கிறூர்கள்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு திருமதி யசோதை சரவணபவன் பரிசில்களே வழங்குவார்.

## யாழ் பிரதம.....,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டதையடுத்து அமைதிப் படை யாழ்-தபாலகத்திற்கு விரைந்து தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டனர்.

யாழ் தபாலகத்தில் அமைதிப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள்நேற்றுஇருக்கவில்லே. செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மட்டுமே யாழ். தபாலகத்தில் இந்திய அமைதிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் (இ-10)


# MISSING
## Mr. Kanayah Dayanandham

Mr Kanayah Dayanandham 32 years recently employed as driver by the United Nations High Commissioner for Refugees (UNHCR) left Jaffna on Saturday 24 September to visit a friend in Kilinochchi So far he has not reported back to our office neither in Jaffna nor to Colombo. UNHCR is kindly requesting any person who might know or have contacted him recently, to get in touch with our office or the nearest Police Station to contact Jaffna Police Station

காணவில்லே

திரு. கன்னேயா தயானந்தம்

கடந்த 24 ஆந் திகதி முதல் சட்டமைச்சு சமூகம் தராது UNHCR நிறுவன சாரதி திரு கன்னேயா தயானந்தம் (வயது 32) என்பவரை UNHCR நிறுவனத்தினர் தேடுகின்றனர்.

(6892)



## ஓராண்டு நினேவஞ்சலி



நயினே குமரையா கமலதாஸ்
(முன்னுள் 'உதயன்' பத்திரிகைப்பணியாளர்)

பிறப்பு:- 22- 12- 1960
இறப்பு: 13- 10- 1987

திதி: 1- 10- 1988

பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் உற்றுரும் பற்றுரும் உளமுவக்க நன் மகனுக வாழ்ந்து, அநியாய அழிவுக்கு ஆளான உன் அன்புருவம் எம் நெஞ்சிருக்கும் வரை நினேவகலா ஓவியமாக உள முருகுகின்றது

உன் ஆத்ம சாந்திக்காக அன்னே ஸ்ரீ நாகபூஷணியை இறைஞ்சுகின்றேம்

பிரிவு ஆற்ரு:
பெற்றேர்,
சுற்றத்தார்.

2-ஆம் வட்டாரம்,
நயினுதீவு.



# மரண அறிவித்தல்கள்

## திரு. நா. நா. செல்லத்துரை

(இளேப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்)

சாவகச்சேரி கோயில் தடியிருப்பைச் சேர்ந்த இளேப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் திரு நா. நா. செல்லத்துரை அவர்கள் 27-9-88 அன்று காலமானுர்.

அன்னூர் இளேப்பாறிய ஆசிரியை ரத்தினவதி செல்லத்துரையின் அன்புக் கணவரும், ஸ்ரீ ஞானநாதன் [Engineer, London] ஸ்ரீகந்தராஜா [Teacher, London] ஸ்ரீபாலகிருஷ்ணன் [Engineer,London] ஸ்ரீரமணேஸ்வரன் [Engineer, Australia] ஸ்ரீபத்மநாதன் [Engineer,London] ஸ்ரீசண்முகராஜா [Ireland] ஜெகதாம்பா [M. S C London] ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்திமாலா, பிறேமாவதி, செல்வராணி, ஈவோன், சுரேந்திரன், சியாமளாதேவி ஆகியோரின் மாமனுரும் கண்ணன், ஜெனன், காயித்திரி, ஸ்ரீதர்சன், தனுசியா, சியாமா, கவிதா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவர்

அன்னூரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் 1-10-88 (சனி) இன்று மாலே 4மணிககு கண்ணடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலே உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி செல்லத்துரை பிள்ளேகள்

(7110)

## காசிப்பிள்ளே கிருஷ்ணபிள்ளே

(இளேப்பாறிய பெருந் தெருக்கள் திணேக்கள பொறியியலாளர்)

காலஞ்சென்ற ஆ காசிப்பிள்ளே (சிரேஷ்ட கூட்டுறவுப் பரிசோதகர்) சோதிப்பிள்ளே அவர்களின் சிரேஷ்ட புத்திரன் திரு. கா. கிருஷ்ணபிள்ளே 30 9-88 இல் அகால மரணமானுர்.

அன்னூர் யசோதராதேவியின் அன்புக் கணவரும், கிரிதரன் (U K), கிரிகரன் (UK) கிரிஜா (யாழ் ஆங்கில கன்னியர்மட மாணவி) கிரபாலன், கிரிரூபன் (யாழ் பரி யோவான் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌந்தரராஜா (நைஜீரியா), யோகேந்திரன், யோகேஸ்வரன (இ. போ ச. கிளிநொச்சி) துரைசிங்கம், செல்லத்துரை (எத்தியோப்பியா), கனகரத்தினம் (கனடா), தவஞானம் (U. K) சோதிராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இளேப்பாறிய ஆசிரியர் குமாரசாமி, இராசம்மா ஆகியோரின் மருமகனும், பாக்கியநாதன், சரவணபவான, முத்துக்குமாரசாமி, பாசுபதன், U. K. இல்இருக்கும் வாசவன், செங்காதரன், ஐங்கரன், பத்மாதேவி, உருத்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், மாணிக்கராசா, சற்குணவதி, தில்லேநாயகி, தவகுமாரி, அருந்ததி, சிவயோகம், பத்மா, மோகனகுமாரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னூரின் பூதவுடல் 2.10-88 ஞாயிற்றுக்கிழமை காலே 9 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அரியாலே, சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

9, (ஆள்காட்டி ஒழுங்கை) அரியாலே, யாழ்ப்பாணம்.

தகவல்:
கு, பாக்கியநாதர்

(6898)



# புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலே ரூபா 68/55 125 கிறும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களே வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளேகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலே ரூ. 37/50 200 மி. லி.

Pfizer

சில்லறை விலே ரூ.39/90 200 மி. லி.

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 1st October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரிகத்திற்கேற்ப
★ பிறிடைம் ★ பாட்லி
★ றிமோ கொன்றோல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

01-10-1988 சனிக்கிழமை

★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் & பிளவுஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
RASI
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

கருத்துக் கலசம் — மயூரா

## தவறும் அவதூறும்

மனிதன் ஒவ்வொருவனும் தவறுவிட, தவறு செய்ய இடமுண்டு. தவறு விடாத ஒரு மனிதனைக் காண்பது அரிது. ஒவ்வொருவனும் ஏதோ ஒரு விதத்தில், சந்தர்ப்பத்தில் தவறு செய்யாமல் இருக்க முடிவதில்லை.

தவறு செய்வது இரண்டு வகை. ஒன்று மனம் எண்ணாமல், தெரியாமல் செய்யும் தவறு. மற்றது மனம் தெரிந்து வேண்டுமென்றே செய்யும் தவறு.

தெரியாமல் செய்யும் தவறு மன்னிக்கப்படக் கூடியது. அவசியம் தண்டிக்கப்படவேண்டியது என்பதல்ல. வேண்டுமென்றே செய்யும் தவறு தண்டனைக் குரியது.

எனினும், தெரிந்து கொண்டே அல்லது வேண்டுமென்றே தவறு செய்பவனையும் மன்னித்து விடும் சந்தர்ப்பங்கள் வரும். தவறு செய்தவனை மன்னிப்பவன் பெரியவனாகின்றான்.

ஒவ்வொருவரும் தவறு செய்வதை எவ்வளவுக்குத் தவிர்த்துக் கொள்கிறார்கள் என்பதில் அவரவர் சமூக மதிப்பு உயருகிறது. அதனால் தான் 'உன்னை நீயே திருத்திக்கொள்' என்றார்கள்.

ஆனால் பலரும், தம்மைத் தாமே திருத்திக் கொள்ளாமல் மற்றவர் மீது பிழை கற்பிக்க முனைகின்றார்கள். அத்தோடு நிற்காமல் மற்றவர்களை அவதூறு செய்யவும் முற்படுகிறார்கள்.

ஒருவர் செய்யும் தவறு, சமூக நலன் கருதி அம்பலப்படுத்தப்பட வேண்டுமானால், அதனை அம்பலப் படுத்தியே ஆக வேண்டும். உதாரணமாக ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள், அதிகாரியாகஇருப்பவர்கள் தவறுகள் விட்டால் அவை ஆதாரபூர்வமானவையாக உறுதிபடுத்தப் பட்டால், அம்பலப்படுத்தப்படுவதில் தவறில்லை. அதனை அவதூறு என்று சொல்லமுடியாது.

ஆனால் சுயநலன் கருதி, ஒருவர் செய்யாத குற்றத்தைச் செய்ததாகச் சோடித்துப் பிரசாரம் செய்தால் அது அவதூறு, அவமதிப்பு.

எந்தப் பிரசைக்கும் அடுத்தவனை அவமதிக்கவோ, அவதூறு செய்யவோ உரிமை இல்லை. சட்டப்படி அது அனுமதிக்கப்படவில்லை.

தவறு செய்த ஒருவன் அவ்வாறு செய்தான் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டால் எவ்வாறு தண்டனைக்கு உரியவனாகின்றானோ அதே போல (தவறு செய்ததற்கு ஆதாரம் எதுவும் இன்றி) அடுத்தவனை அவதூறு செய்பவனும் தண்டனைக்கு உரியவனாகின்றான்.

பிறனை அவதூறு செய்வதால் தனது சுயநலன்களை ஈட்டலாம் என நினைப்பவன் எப்போதும் தோல்வி காண்பான்; தண்டனையும் பெறுவான். ★

# ராம நாம பெருமையை உணர்த்த நாரத மகரிஷி நடத்திய நாடகம்!

வனவாசம் முடித்து, ராவணனை சம்ஹாரம் செய்து அயோத்தி திரும்பி பட்டாபிஷேகம் முடித்து பெருமையோடும், புகழோடும் நீதி தவறாது ராமராஜ்யம் நடத்தி வந்தான் ஸ்ரீராமன்.

அப்போது மக்களின் நலன் கருதி நாட்டின் வளமைக்காக ஒரு யாகம் நடத்தினான் ராமன்.

வசிஷ்டர், விஸ்வாமித்திரர் போன்ற மகரிஷிகளைக் கொண்டு யாகம் நடத்தப்பட்டது.

ராமனின் ஆளுகைக்குட்பட்ட ஒரு சிற்றரசன் சகுந்தன்!

அவன் ஒரு நாள் வேட்டையாடி விட்டு வந்து கொண்டிருக்கையில் யாகசாலைக்குச் சமீபமாக வந்தான். வெளியில் நின்றபடி 'வசிட்டாதி முனிவர்களுக்கு என் வணக்கங்கள்' என்று கூறி விட்டுச் சென்றான்.

சகுந்தன் கூறிய வார்த்தைகள் எப்படியோ நாரத மகரிஷியின் காதில் விழுந்து விட்டது.

### நாரதர் பணி ஆரம்பம்

தன் பணியைத் தொடங்கினார் நாரதர்.

'பார்த்தீர்களா மகரிஷி! இந்தச் சகுந்தனின் திமிரை; அப்படி என்ன வசிஷ்டர் உயர்ந்து விட்டார்? தாங்களும் ராமனின் குரு. தங்கள் பெயரையும் சொல்லி ஒரு நமஸ்காரம் போட்டிருக்கலாமே'— அப்படி நாரதர் விசுவாமித்திரரிடம் கூறினார்.

விசுவாமித்திரர் முகம் கோபத்தால் சிவந்தது.

சகுந்தன் செய்த பிழையை ராமனிடம் கூறி; ராமனைக் கொண்டே தண்டிக்கச் செய்ய வேண்டும்— இப்படி நாரதர் தெரிவித்த ஆலோசனையை விசுவாமித்திரரும் ஏற்றுக் கொண்டார்.

### கோபம் கொள்ளல்

ராமனைச் சந்தித்து 'ராமா, உன் குருவை ஒருவன் அவமதித்தால் அவனுக்கு நீ என்ன தண்டனை தருவாய்'— என்று விசுவாமித்திரர் கேட்டார்.

'குருதேவா! தவ சிரேஷ்டர்களை அவமதித்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்குரிய தண்டனையைத் தாங்களே கூறுங்கள் நிறைவேற்றி வைப்பது என் கடமை'— என்று ராமன் தெரிவித்தான்.

'என்னை அவமதித்த சகுந்தனின் சிரசை இன்று சூரிய அஸ்தமனத்துக்கு முன் என் காலடியில் சேர்த்து விட வேண்டும். இது உன் கடமை'— இப்படி விசுவாமித்திரர் ராமனிடம் சொன்னார்.

### ஸ்ரீராமனின் போர்க்கோலம்

ராமன் 'தங்கள் ஆணைப்படியே செய்கிறேன். இது சத்தியம்' என்று வாக்களித்தான்.

ராமன் செய்தி அனுப்பினால் போதும், சகுந்தனே தனது தலையை வெட்டித் தட்டில் வைத்து அனுப்பி விடுவான். இருந்தாலும் அது ராமன் கடைப்பிடிக்கும் க்ஷத்திரிய தர்மத்துக்கு அழகாகுமா?

எனவே ராமன் போர்க்கோலம் பூண்டு சகுந்தனின் நாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

ராமனின் போர்க்கோலம் கேட்டுச் சகுந்தன் கலக்கம் அடைந்தான்

சகுந்தனின் நாட்டை அடுத்த வனத்தில் அஞ்சனாதேவி ஆட்சி புரியும் கானகம் இருந்தது. ஆஞ்சநேயனின் தாய் அன்னை அஞ்சனாதேவி.

'அவளைப் போய் தஞ்சமடைந்தால், அவள் உயிர்ப்பிச்சை தருவாள், அப்புறம் ராமபாணம் கூட ஒன்றும் செய்ய முடியாது'— என்று கேள்விப்பட்டு சகுந்தன் அஞ்சனாதேவியிடம் சென்றான்.

### அன்னையின் அடைக்கலம்

அங்கே அக்கினியை வளர்த்துக் கொண்டு 'அஞ்சனாதேவி சரணம்' என்று கூறி பிராணத்தியாகம் செய்யத் தயாரானான்.

தாயல்லவா அவள்! அக்கினியில் பாயும் முன் அஞ்சனாதேவி தோன்றி 'குழந்தாய்' கவலைப்படாதே. என்னைச் சரணடைந்த உன் உயிருக்கு எந்த ஆபத்தும் நேராது'— என்று ஆசி கூறினாள்.

உற்சாகம் பிறந்த சகுந்தன் அஞ்சனாதேவியின் திருவடிகளில் வீழ்ந்தான்.

'அன்னையே, ஸ்ரீராமன் போர்க்கோலம் கொண்டு வருகிறார். என் சிரசைத் தன் குருவின் காலடியில் சூரிய அஸ்தமனத்துக்கு முன் சேர்க்கும் சங்கல்பத்துடன் ராமன் வருகிறார். நான் என்ன செய்ய

**- ரி. எஸ். என். சுவாமி -**

வேண்டும்'— என்று கேட்டான் சகுந்தன்.

சகுந்தன் சொன்னவை அஞ்சனாதேவியை ஒரு கணம் கலக்கி விட்டது.

ராமபாணத்தில் இருந்து காப்பாற்றுவது முடியாத காரியம் என்று அன்னை உணர்ந்தாள். இருந்தும் உயிர்ப்பிச்சை அளித்தவனைக் காப்பதும் தன் கடமை என்று எண்ணினாள்.

### ஆஞ்சநேயன் வாக்குறுதி

வாக்கைக் காப்பாற்றும் பொறுப்பை வீரமைந்தன் ஆஞ்சநேயனிடம் அன்னை ஒப்படைத்தாள்.

சகுந்தனைக் காப்பாற்ற தனது அன்னை அளித்த வாக்கைக் காப்பாற்றுவேன் என்று ஆஞ்சநேயன் சத்தியம் செய்தான்.

எதிர்த்து வருபவன் ஸ்ரீராமன் என்றால் என்ன? அல்லது மும்மூர்த்திகளேயானாலும் என்ன? தாயிடம் அடைக்கலம் புகுந்து உயிர்ப்பிச்சை பெற்றவனைக் காக்கவேண்டியது தன் கடமை என்று உறுதியாக நின்றான் ஆஞ்சநேயன்.

எந்த அபத்தையும் எதிர்க்கும் வல்லமையின் ரகசியம் ஆஞ்சநேயனுக்குத் தெரிந்திருந்தது.

கடமைக்காக தாயினும் மேலான தலைவனையே எதிர்க்கத் தயாரானான் ஆஞ்சநேயன்.

### ஆஞ்சநேயன் போர்க்கோலம்

தன்வாலை நீளமாக வளர்த்து. அதனை ஒரு கோட்டை போல அமைத்தான்.

அதற்குள் சகுந்தனைப் பாதுகாப்பாக அமர்த்திவிட்டுக் கோட்டையின்மேல் ஒரு சிறு குரங்குவடிவில் அமர்ந்து கொண்டான் ஆஞ்சநேயன்.

தலைநகரில் புகுந்த ராம, லட்சுமணர்களின் படை சகுந்தன் மறைந்திருக்கும மலையை நோக்கி சரமாரியாக அஸ்திரங்களை ஏவின.

### ராமநாமத்தின் முன் ராம பாணங்கள்

இராமன் விட்ட அஸ்திரங்கள் எல்லாம் திரும்பி வந்து இராமன் திருவடிகளில் விழுந்தன.

இ ராம - லட்சுமணர்கள் திகைத்து நின்றனர். தனது அஸ்திரங்கள் சக்தியிழந்து திரும்பிவருவதைக் கண்டு ராமன் அதிசயித்தான்.

இராவணனை விட பெரிய மாயாவியாக சகுந்தன் இருப்பானோ என்று லட்சுமணன் சிந்தித்தான்.

யுத்தம் தொடர்ந்தது. ராமன் கற்ற அஸ்திரவித்தைகள் அனைத்துமே தோற்றுநின்றன.

திகைத்துநின்ற ராமனிடம் நாரதர் வந்தார்.

'ராமா! உனது அஸ்திரங்களின் சிம்மநாதமும் யுத்த பேரிகையின் சத்தமும் ஒரு கணம் நிற்கட்டும். அப்போது இதன் காரணத்தை அறியலாம்'—என்றார் நாரத மகரிஷி.

ஒரு கணம் யுத்தபூமியில் அமைதிதோன்றியது.

அப்போது எங்கிருந்தோ காற்றில் மிதந்துவந்த 'ராம்!' 'ராம்!' 'ராம்!' என்ற சப்தம் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

ஆம்! அது அனுமானின் குரல்தான் அவன் ஒருவனால் தான் ராமநாமத்தை இத்தனை பக்தியோடும் சக்தியோடும் ஜெபிக்க முடியும் என்பதை ராமன் உணர்ந்தான்.

நாரதர் தொடர்ந்தார்: "ராமா! உன் நாமத்தின் சக்தியின் முன்னால் உன்னாலேயே எதுவும் செய்யமுடியாது.

"உன் நாமம் அத்தனை புனிதமானது. அத்தனை சக்தி வாய்ந்தது.

"உலகின் எந்தச் சக்தியும் உன் நாமத்தை எதிர்த்து நிற்கமுடியாது.

"காலத்தால் அழியாத பெருமை வாய்ந்தது உன் நாமம்.

"அதிலும் அதனை ஆஞ்சநேயனே ஜெபிக்கின்றான் என்றால் பின் அதனை எவரால் எதிர்க்கமுடியும்?" என்று விளக்கினார் நாரதர்;

இந்த யுத்தத்தைத் தொடர வேண்டுமானால் ஸ்ரீராமன் தன்னையே அழித்துக் கொள்ளவேண்டும் என்றார் நாரதர்.

எப்படி?

இந்த ராமநாமத்தை நிறுத்தினால்தான் உன் அஸ்திரங்கள் இந்த எல்லையைத் தாண்ட முடியும்.

அந்த மாருதியை அழித்தால் தான் அந்த நாமம் ஒலிப்பதும் ஓயும்.

அவன் இருதயத்திலே ஸ்ரீராமனைப் பிரதிஷ்டை செய்து வைத்திருக்கிறான். அவனை அழிப்பது சுலபம் அல்ல.

அனுமானை வென்றால்தான் சகுந்தனை வெல்லமுடியும்.

அப்படியானால் ஸ்ரீராமன் தன்னையே அழித்துக்கொண்டால்தான் யுத்தம் தொடர முடியும்—

இப்படிக் கூறி நிலைமையை நாரதர் மேலும் சிக்கலாக்கினார்.

அப்போது விசுவாமித்திரர் ஓடி வந்து ராமா! வேண்டாம் 'ராமா! இந்த விபரீதத்துக்கு என் அகந்தைதான் காரணம். சகுந்தன் நிரபராதி யுத்தத்தை நிறுத்து'— என்று சொன்னார்.

### ஆஞ்சநேயன் என்று யாரை அழைக்கலாம்?

அப்படியானால்—

ஸ்ரீராமன் கொடுத்த வாக்கு என்னாவது?

அன்னை அஞ்சனாதேவி கொடுத்தவாக்கு என்னாவது?

ஆஞ்சநேயன் கொடுத்த வாக்கு என்னாவது?— என்ற நிலை எழுந்தது.

நாரதர் அழைக்க சகுந்தன் விசுவாமித்திரரின் பாதங்களில் தம் சிரம் படும்படி வணங்க,

ராமன் வாக்கும் பொய்க்கவில்லை.

அஞ்சனாதேவியின் வாக்கும் பொய்க்கவில்லை.

ஆஞ்சநேயனும் கடமையில் இருந்து தவறவுமில்லை.

ராமநாமத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்த நாரதர் நடத்திய நாடகத்தின் இறுதிக் கட்டத்தில் ஆஞ்சநேயனை நெஞ்சாரத் தழுவிக் கொண்டான் ஸ்ரீராமன்.

"எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கிறதோ - அங்கெல்லாம் பக்திப்பரவசத்துடன் கண்களில் நீர்மல்க எவன் காணப்படுகின்றானோ அவனே ஆஞ்சநேயன்"— என்று அனுமானுக்கு அடையாளங் காட்டப்படுகிறது. ★

# பிரார்த்தனையில் ஈடுபடாமல் இருந்திருப்பின் பைத்தியக்காரனாக மாறியிருந்திருப்பேன்

காந்திஜியின் 119 ஆவது பிறந்ததினம் நாளை வருகின்றது.

2-10-1944 இல் காந்திஜியின் 75 ஆவது பிறந்த தினம் வந்தது. அப்போது அவர் உயிருடன் இருந்தார்.

அதை ஒட்டி 'காந்திஜி' என்ற தலைப்பில் மலர் ஒன்று ஆங்கிலத்தில் அவரின் முன்னுரையுடன் பம்பாயில் வெளியிடப்பட்டது.

அந்த மலரில் காந்திஜி ஆங்கிலத்தில் எழுதிப் பிரசுரமான பிரார்த்தனை பற்றிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

பிரார்த்தனையே என்னைக் காப்பாற்றியது.

பிரார்த்தனையில் நான் ஈடுபடாமல் இருந்திருப்பின் எப்போதோ நான் பைத்தியக்காரனாகியிருந்திருப்பேன்.

எனது தனிப்பட்ட, பொது அனுபவங்கள் கசப்பானவை.

அவை என்னை நம்பிக்கையற்ற நிலைமைக்குத் தள்ளின.

பிரார்த்தனை மூலமே நான் அதில் இருந்து மீண்டேன்.

என் வாழ்வில் சத்தியம் இணைந்தமாதிரி, பிரார்த்தனை இருக்கவில்லை.

அவசிய தேவையின் நிமித்தமே பிரார்த்தனையில் ஈடுபடத் தொடங்கினேன்.

பிரார்த்தனை இன்றி மகிழ்ச்சியாக வாழ முடியாத நிலையில் நான் இருப்பதை உணர்ந்தேன்.

கடவுள் மீதான எனது விசுவாசம் அதிகரிக்க, அதிகரிக்க பிரார்த்தனை மீது நான் தடுக்க முடியாத அளவு ஆவல் கொண்டேன்.

பிரார்த்தனை இன்றி வாழ்க்கை மந்தமாக இருந்தது.

தென்ஆபிரிக்காவில் இருந்தபோது கிறிஸ்தவ சமயச்சேவைகளில் கலந்து கொண்டேன்.

ஆனால் அவை என்னை இழுத்தெடுக்கவில்லை.

கிறிஸ்தவ நண்பர்கள் இறைவனிடம் மன்றாடினர். அப்படி என்னால் செய்ய முடியவில்லை.

அதில் நான் பாரதூரமான தோல்வியை அடைந்தேன்.

கடவுள், பிரார்த்தனை ஆகியவற்றில் நம்பிக்கை இழக்க ஆரம்பித்தேன்.

வாழ்க்கையின் பிற்பகுதி வரை என் வாழ்வில் ஒரு



-அண்ணல் காந்திஜி-

வெறுமையை நான் உணரவில்லை.

அந்தக் கட்டத்தில் தான் உடம்புக்கு உணவு தவிர்க்க முடியாத ஒன்று என்பது போல ஆத்மாவுக்குப்பிரார்த்தனை தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை உணர்ந்தேன்.

உண்மையில் ஆத்மாவுக்கு பிரார்த்தனை எவ்வளவு அத்தியாவசியமோ அந்த அளவு உடம்புக்கு உணவு அவசியமில்லை.

உடம்பைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க இடைக்கிடை பட்டினி இருக்கவேண்டும்.

அதுபோல பிரார்த்தனையில் 'பட்டினி' இருக்க முடியாது.

பிரார்த்தனையில் 'அளவுக்கு மிஞ்சி' என்று ஒரு நிலையும் இருக்க முடியாது.

உலகின் முப்பெரும் ஆசான்கள் புத்தர், யேசு, நபிகள் நாயகம்.

இவர்கள் பிரார்த்தனை மூலமே தங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கியவர்கள். பிரார்த்தனையின் இலக்கணமாக உலகுக்குஅவர்கள் காட்சியளிக்கின்றார்கள்.

கோடிக்கணக்கான கிறிஸ்தவர், இந்து, முஸ்லிம்கள் பிரார்த்தனைமூலம் வாழ்க்கையில் அமைதி காண்கின்றனர்.

அவர்களை நீங்கள் 'பொய்யர்கள்' என்றோ தங்களைத் தாங்களே ஏமாற்றுபவர்கள் என்றோ கூறலாம்.

உண்மையை நாடுபவன் என்ற வகையில் அப்படியான 'பொய்' என்னை வசீகரிக்கிறது என்று சொல்வேன்.

அந்தப் 'பொய்'தான் என் வாழ்க்கையில் நான் நம்பியிருக்கும் முக்கிய ஆதாரம் என்றால், அது இன்றி நான் ஒரு கணமும் வாழமுடியாது.

அரசியல் வானில் நம்பிக்கையின்மை என்னை எதிர்நோக்கும்போதும் நான் அமைதியை இழக்கவில்லை.

உண்மையில் நான் அமைதியாக இருப்பதைக்கண்டு பொறாமைப்படுபவர்களை நான் காண்கின்றேன்.

அந்த அமைதி பிரார்த்தனையில் இருந்தே வருகிறது.

நான் படித்தவன் அல்லன்.

ஆனால் நான் பிரார்த்தனையில் ஈடுபடுபவன் என்பதை பணிவாகச் சொல்ல விரும்புகின்றேன். ★

## காந்திஜி பற்றி ஐன்ஸ்டீன

அடக்கம், அறிவுடைமை நிறைந்த ஒரு மனிதர்.

வளைக்க முடியாத உறுதி, மனோதிடம் பூண்டவர்.

தவ மக்களின் வளர்ச்சிக்காக தனது சக்தியையே அர்ப்பணித்தவர்.



இப்படியான ஒரு மனிதர் இப் பூமியில் 'இரத்தமும் சதையும்' ஆக நடமாடினார் என்பதை நம்ப முடியாத தலைமுறைகள் தோன்றத்தான் போகின்றன.

—பிரபல அமெரிக்க விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் காந்திஜியின் 75 ஆவது பிறந்தின மலருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இருந்து. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுக்குப் பயந்தவன்



**- மனோகரன் -**

ராமநாதன் உயரமாக, நிழல் பரப்பி நின்ற அந்த மாமரத்தின் அடியில் போடப்பட்டிருந்த நீளமான தென்னங்குற்றியில் உட்கார்ந்து சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்ட பொழுது மனதின் வெம்மை சற்றே தணிந்திருந்ததாய் உணர்ந்தான்.

மாமரம் அமுதனுடைய கடைக்குப் பக்கத்தில் நின்றது. அமுதன் அவனுடைய சிநேகிதன். சின்ன வகுப்பிலிருந்தே ஒன்றாய்ப் படித்தவர்கள். இரண்டுபேரும், ஒன்றாக வெளிநாடுபோகவென்று திட்டமிட்டிருந்தவர்கள். ஆனால், அமுதனுடைய தகப்பன் திடீரென்று காலமாகிப் போனதால், அமுதன் கடையைப் பாரமேற்கவேண்டி வந்தது. அவன் மட்டும் தனித்து வெளிநாடு போனான்.

நான்கு வருஷங்கள் உழைப்பதற்சென்று, அந்நிய நாட்டில் ஒடும் புளியம் பழமும் போல இருந்துவிட்டு, சொந்த நாடு, செந்தமண், தெரிந்த மனிதர்கள் என்று, தேடி ஓடி வந்தவன் கானல் நீரைத் தேடி ஓடின கதையாய்ப் போய்விட்டதோ? என்று கவலையுடன் சிந்தித்தான்.

அமுதன் கடையில் பிஸியாக இருந்தான். சிறிய பலசரக்குக்கடை. அந்த நாளில் இருந்தது போலவே இப்பொழுதும் இருந்தது. கடை சிறியது என்றாலும் நல்ல வியாபாரம் நடக்கிற இடம். கடைக்குப் பக்கத்தில் நிற்கிற மாமரம் பல காலமாகவே பிரசித்தம். பொழுது போகாத நேரங்களில், ராமநாதன் சிநேகிதர்களோடு அங்கே வருவதுவழக்கம். மறைவாக சிகரெட் பிடிக்கலாம். அரசியல், சினிமா, இலக்கியம் என்று கதைக்கலாம். தெருவில் போகிற வருகிறவர்களை அவர்களுக்குத் தெரியாமலே புதினம் பார்க்கலாம்.

ராமநாதன் தனியாகப் பல சமயங்களில், மாமரத்து நிழல் காற்றில், தென்னங்குற்றியில், உட்கார்ந்து சொந்தளித்துக் குமுறுகிற கனவு வெள்ளத்தை சீராக்கி செப்பனிடுகிற நிஷ்டையில் இருந்திருக்கிறான்.

நாட்டுக்கு வெளியே இருந்த பொழுது, மாமரத்தடியை நினைத்து நினைத்து அமுதனுக்குக் கடிதம் எழுதுவான். நாட்டுப் பிரச்சினைகள் வலுத்த பொழுது, வீட்டுக்காரர்கள், தெரிந்தவர்களைப்பற்றி யெல்லாம் எவ்வளவு கவலைகொண்டானோ, அவ்வளவு கவலை மாமரத்தைப்பற்றியும் கொண்டிருந்தவன்.

அமுதனுக்குக் கல்யாணம், அவர்கள் கடையின் பின்னால் இருந்த சிறிய வீட்டுக்குக் குடிவந்துவிட்டார் என்று கேள்விப்பட்ட பொழுது, இனி மாமரத்தடியை சேராமல் சுத்தமாக இருக்கும் என்ற நிம்மதி பிறந்தது.

எங்களுக்கு இங்கே ஒன்றுமில்லை. கண்ட செய்திகளையும் நம்பி மனதை அலையவிடாதே என்று, வீட்டிலிருந்து வருகிற கடிதங்களை எவ்வளவு ஐயுறவோடு பார்த்தானோ அவ்வளவுக்கு மாமரத்திற்கு ஒன்றுமில்லை என்ற அமுதனின் கடிதவரிகளிலும் சந்தேகம் கொண்டிருந்தான். நேரில் வந்து பார்த்தபிறகுதான் மனம் நிம்மதி பெற்றது.

ராமநாதன், மரத்தை நிமிர்ந்து ஆராய்ந்தான். நான்கு வருஷத்தில் மாமரம் புதிதாகப் பல கிளைகளைத் தோற்றுவித்திருந்தது. புதிய கிளைகள் அவன் அறியாதவை. வெளிப்பார்வைக்கு அதிக மாறுதல் எதையும் காட்டாத இந்த மரத்திலுள் எத்தனை புதிய கிளைகள்? சிறியவை என்றாலும் கிளைகள் தானே?

அவன் வெளிநாட்டிலிருந்த பொழுதுதான் அக்காவுக்குக் கல்யாணம் நடந்தது. ரெடிமேட் சிரிப்புடன் வீடியோப் படத்தில் அத்தானைக் கண்டபொழுது, என்னுடைய உழைப்பின் பயன் என்று அவன் பெருமிதம் கொண்டான்.

வாழ்க்கை முழுவதும் உனக்கு நன்றி உடையவளாக இருப்பேன் என்று அக்கா கடிதம் எழுதின பொழுது: அதில் தொனித்த பாசத்தின் லயிப்பில், பிரேமா அவனுக்குக் கடிதம் எழுதாமல் விட்டதைக் கூட மறந்து போனான். என்ன இருந்தாலும் இரத்த உறவு என்றால் அதன் மதிப்பு தனிதான் என்று நினைத்திருந்தான். மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் தான் வீட்டுக்கு வந்தான்.

இங்கே வந்து இறங்கியதும் அவனுடைய எதிர்பார்ப்புகள் கொஞ்சம் கலைந்தன. மாமரத்தில், புதிதான சிறிய கிளைகள் தோன்றி இருந்ததைப் போலவே, வீட்டிலும் சிறிய கிளைகள் இருந்ததாய் உணர்ந்தான்.

வீட்டுக்கு வந்ததும் அவன் மனதை மிகவும் பாதித்த விஷயம், அவனுடைய பெட்டிகளும் மாற்றப்பட்டிருந்தது தான். அவன் பாவித்து வந்த அறை அக்காவின் பெட்ரூமாக மாற்றப்பட்டிருந்தது. அந்த அறையிலிருந்து, அவனுடைய பொருள்கள் எல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. தன்னையே இடம் மாற்றிவிட்டதுபோல, அவன் மனதில் உறைத்தது.

இரவு ஹோலில் படுத்திருந்தபொழுது சொல்லமுடியாத கவலை அவன் மனதை வாட்டியது. பஞ்சு மெத்தை, மின் சாதன வசதிகள் எது இருந்தாலும் அவனுடைய அறையில், அந்த யன்னல் கரையில், கட்டிலில் படுத்திருந்து, படிப்பதோ அல்லது வெளியே, பலா மரத்தில் இருந்து விஷமம் செய்கிற குருவிகளை வேடிக்கை பார்த்து மகிழ்வதோ அல்லது வெட்டவெளியில் பார்வையை நிலைக்கவிட்டு சிந்திப்பதோ போல எதுவும் வராது என்று தோன்றியது. தான் வீட்டுக்கு வந்திருக்கக்கூடாது என்று கூட சிந்திக்கத் தொடங்கினான்.

பிறகு, அப்படி நினைக்கக் கூடாது என்று தீர்மானித்தான். அந்த அறை அவனுக்கென்று எக்காலத்திலும் சொந்தமாய் இருக்கப் போவதில்லை அவன் கல்யாணம் செய்து கொண்டால், வேறு ஒரு வீடு வேறு அறை என்று மாறித்தானே ஆகவேண்டும் என்று மனதைச் சமாதானம் செய்து கொள்ள முயன்றான்.

அவன் வாங்கி அனுப்பிய வீடியோ டெக்கை, சிநேகிதன் ஒருவனுக்கு இரவலாக தருவதற்கு முடியவில்லை. அத்தானைக் கேட்டு விட்டுக் கொடு என்று அக்கா சொல்கிறாள். அத்தானைக் கேட்டால் ஆமென்றும் சொல்லாமல், இல்லையென்றும் சொல்லாமல் அமத்தலாக இருக்கிறார். உன்னுடைய பொருளை நீ கொடுக்க வேறு யாரையாவது அனுமதி கேட்பானேன்? என்று தங்கை சொல்கிறாள். வீட்டை எழுதிக் கொடுத்தால், வீட்டிலிருக்கிற பொருள்களும் அவைக்குத்தான் சேரும் என்றார் அப்பா.

எல்லாருமே புதிய கிளைகள்; அவனுக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்த ஒற்றுமை நெஞ்சங்கள் எங்கே?

பாசம், பாசம் என்று என்னதான் உரக்கப்பேசினாலும், அடிமனதில் எல்லாருக்கும் சுயநலம் இருக்கத்தான் செய்கிறது. பாசம், பாசத்தின் நிமித்தம் செய்யப்படுகிற தன்னலமற்ற தியாகம் என்பதெல்லாம், இலக்கியங்களுக்குத்தான் பொருந்தி வரும் என்று நினைத்தான்.

பாசம் என்பது தற்காப்பு உணர்ச்சிதான்; ஒருத்தரில் ஒருத்தர் தங்கியிருக்க வேண்டும் என்ற நிலை மனித குலத்திற்கு விதிக்கப்பட்ட பெரிய சாபமாக இருக்கவேண்டும்.

அக்கா, அவனில் தங்கியிருக்க வேண்டியிருந்தவரை பாசம், பாசம் என்று, மழையாய்ப் பொழிந்தாள். இனி அவள் அத்தானை அண்டி இருக்கவேண்டியவள் அவளுடைய புருஷன்தான் அவளுக்கு இனி பாதுகாப்பு. எனவே, பாசம் சுலபமாக இடம் மாறிவிட்டது.

இப்பொழுது அவனுடைய தங்கை பாசம் என்கிறாள். காணி வாங்கி அவளுக்கு ஒரு வீடு கட்டவேண்டும் என்கிறார் அப்பா. தங்கைக்கும் கல்யாணம் ஆகிவிட்டால், அக்காவைப்போல ஆகமாட்டாள் என்பது என்ன நிச்சயம்? தங்கைக்குப்பிறகு அப்பா. அப்பாவுக்குப் பிறகு?

பிரேமாவை இழந்தது பெரிய தவறு என்று தோன்றியது. பிரேமா, வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது, அவளுக்கு ஒரு பாஸ்போர்ட்டை எடுத்துக் கொடுத்து அவளையும் தன்னோடு அழைத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

பிரேமா, வேறு ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டதற்குக் கூட காரணம் தற்காப்பு உணர்ச்சியாகத்தான் இருந்திருக்கவேண்டும். அவன் மீதுள்ள நம்பிக்கையை அவள் இழந்துவிட்டதுதான் அவள் இன்னொருத்தனைக் கல்யாணம் செய்து கொள்ள காரணமாய் இருந்திருக்கவேண்டும்.

பிரேமா, அவனை அந்த நாட்களில் உயிருக்கு உயிராகக் காதலித்தவள். உருகி, உருகி அவள் எழுதிய கடிதங்கள் இப்பொழுதும் அவனிடம் இருக்கின்றன. அவன் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை என்று எழுதினளே! இதை இப்பொழுது கேட்டால், என்ன சொல்லுவாள்?

என்ன சொல்ல முடியும்? விதி பிரித்து விட்டது என்று, ஓர் அழுகையை அழுது விட்டு, என்னுடைய படம், நான் எழுதிய கடிதங்கள் எல்லாவற்றையும் தாருங்கோ என்று கேட்கக் கூடும் என்று நினைத்திருந்தான். ஆனால் தற்செயலாய் அவளைச் சந்திக்க நேர்ந்த பொழுது முற்றிலும் எதிர்பாராத அனுபவத்தை அவன் அடைந்தான்.

இரண்டு பிள்ளைகளுடன் அவளைக் கண்ட பொழுது அவனுக்கு என்ன பேசுவது என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றான். ஆனால் அவள் மிகச் சுலபமாக அவனுடன் பேசினாள்.

பதற்றமில்லாமல் வெகு இயல்பாக அவளால் எப்படிக் கதைக்க முடிகிறது என்பதே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் தன் புருஷனைப் பற்றி, பிள்ளைகள் செய்கிற விஷமங்கள்பற்றி எல்லாம் நிறையப் பேசினாள்.

'எப்ப கல்யாணம்? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கிற எண்ணம்?' என்று கேட்ட பொழுது அவன் அசடு வழியச் சிரித்தான். இயல்பாக இருப்பதற்கே அவன் பெரும் பிரயத்தனப்படவேண்டி இருந்தது. அவன் விடைபெற்றுக் கொண்ட பொழுது, மாமாவுக்கு டாட்டா சொல்லுங்கோ! என்று தன்பிள்ளைகளுக்கு அவள் சொன்னாள்.

'அத்தான் என்று விளித்து அவள் எழுதிய கடிதங்களை தன்வசம் இன்னும் வைத்துக் கொண்டே, திடீரென்றுதான் அவனுக்கு அண்ணாகவும், அவளுடைய பிள்ளைகளுக்கு மாமாவாகவும் ஆகிப் போனதை நினைக்க, சிரிப்பாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

அவனுடைய காதலைப்பெறுவதற்கு அவள் எத்தனை முயற்சிகள் எல்லாம் செய்தாள்? பிரேமா நல்ல அழகி. குணமானவள். ஆனால் அவ்வளவு வசதியான குடும்பம் அல்ல.

'ஓலை வேய்ந்த வீடு என்றதைக்கேட்டாலே அப்பா துள்ளிவிழுவார்' என்று அமுதனிடம் அங்கலாய்த்துக்கொண்டது இந்த மாமரத்தடியில் தான்.

குணம் முக்கியம், அழகும் முக்கியம். இரண்டும் சேர்ந்திருக்கிற பொழுது பணத்தைப்பற்றி பார்க்கக் கூடாது. பணத்துக்கு ஆசைப்பட்டு பிரேமாவை இழக்கப் போறியா...? என்று அமுதன் சொன்ன கதைகளைக் கேட்டுத் தான் காதலுக்குப் பச்சைக் கொடி காட்டினான்.

வெளிநாட்டிற்குப் போகிற ஐடியா வலுப்பட்டது கூட இதனால் தான் அப்பா, பணமில்லை என்று காரணம்காட்டி, பிரேமாவை நிராகரித்து விடக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கக் கூடாது. உழைத்துச் சம்பாதித்தால், பிரேமாவின் பொருளாதார நிலைமை ஒரு தடையாக வராது என்று தீர்மானித்தான்.

வெளிநாடு போகப் போகிறேன் என்ற கதையை அப்பாவிடம் சொன்ன பொழுது அப்பா சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார். ஒரே பிள்ளை இங்கே, நாட்டுப் பிரச்சினையில் அகப்பட்டு நசியக் கூடாது என்று அவர் நினைத்திருக்கக்கூடும். அவனுடைய மனதின் எண்ணங்களை அறிந்திருந்தால் அவர் அவனை மறந்திருக்கக்கூடும்.

அவன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தான். கொஞ்சம் சேமித்து, பிரேமாவின் அண்ணனையும் கூப்பிட முயற்சி செய்வதாய் பிரேமாவுக்கு உறுதிசெய்திருந்தான் ஆனால், பிரேமாவின் அண்ணன் தான் விரும்பிய ஒருத்தியோடு போய்விட்டதை அவள் ஒரு நாள் கவலையோடு எழுதினாள். இங்கே நிலைமைகள் மோசமாய் இருப்பதாயும், சொந்தத்திற்குள் கல்யாணம் செய்துகொள்ள வற்புறுத்தினார்கள் என்றும், தன்னை உடனே கூப்பிடுமாறும் எழுதினாள்.

அவனுடைய சிநேகிதர்களில் பலபேர் அப்படி தங்கள் காதலிகளைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவனுக்கும் ஆசை இருந்தது. ஆனால் சில மரபுகளை மீறப் பயந்தான். அவன் வளர்ந்த விதம் அப்படி. அக்காவுக்கு கல்யாணம் முடியவேண்டும். அப்பாவின் சம்மதத்தைப் பெறவேண்டும். அதுவரை பொறுத்திரு என்று அவன் எழுதினான்.

பிரேமாவிடமிருந்து கடிதங்கள் வருவது திடீரென நின்று போனபோது துடித்துப் போனான். விசாரித்து ? தும்படி அமுதனுக்கு பல கடிதங்கள் எழுதினான். பிரச்சினைகளால் இடம்பெயர்ந்துபோய் விட்டார்கள் என்றும், அவர் இருக்கிற இடத்தைப்போய் அறிவதற்கு நாட்டு நிலைமை இடம் கொடுக்கவில்லை என்றும் அமுதன் அவனுக்கு எழுதினான்.

உண்மையில் பிரேமாவுக்கு கல்யாணம் நடந்தது அமுதனுக்கு தெரியாமல் இருந்திருக்காது. பிரேமா கூட, அவளுடைய விருப்பத்திற்கெதிராகத்தான் கல்யாணத்திற்கு சம்மதித்திருக்கக்கூடும் என்றில்லை. ராமநாதனை நம்பியிருந்தால்தான் கடைசியில் ஏமாறவேண்டிவருமோ? என்ற சந்தேகம் பிரேமாவின் மனதின் அடியில் இருந்திருக்க வேண்டும்.

என்னப்பா? கடுமையான யோசனை?' என்று கேட்டுக் கொண்டே அமுதன் வந்தான்.

'மாமரத்திலை நிறையக் கிளைகள் புதுசாவந்திருக்கு; அதனால் மனமெல்லாம் குப்பையாய்க் கிடக்கு' என்றான்.

அவன் சொன்னதை அமுதன் தப்பாக அர்த்தம் செய்து கொண்டிருக்கவேண்டும். அவன் மாமரத்தைச் சுற்றியிருந்த குப்பையை வெறிக்கப்பார்த்தான்.

'என்ன செய்கிறது? மனுசிக்கு நேரமே இருக்கிறதில்லை, காலை எழும்பின உடனே நான் சந்தைக்குப் போக வேணும், கடையைத் திறக்கிறது அவள் தான். நான் சந்தையாலை வந்தபிறகுதான் சமையல், அது இது எல்லாம். குழந்தையின்ரை அலுவல்களைக் கவனிக்கவும் வேணும். ஒய்ச்சலே இல்லை. காலைமுதல் மாலை வரை வேலை. வேலை தான். நான் விட்ட பிழை. அந்தநாளில் உன்னைப்போல, வெளியே போய் உழைத்துக் கொண்டு வந்திருக்கவேணும். அப்படி நடந்திருந்தால் பிரச்சினையே வந்திருக்காது' என்றான்.

ராமநாதனுக்கு சிரிப்பாயிருந்தது. இக்கரைமாட்டுக்கு அக்கரைகள் எப்பவும் பச்சைதான். அமுதனுக்கு தன்மேல் பொறாமை உணர்ச்சியோ? காலைமுதல் மாலை வரை கடையைவிட்டு விலகியிருக்க முடியாது. மாறுதலே இல்லாத ஒரு வாழ்க்கையை தான் வாழ்ந்துகொண்டிருக்க, ராமநாதன் உழைத்துக்கொண்டு வந்து வைத்துவிட்டு சுதந்திரமாக சுற்றித் திரிகிறானே? என்று அமுதன் நினைத்திருக்கக்கூடுமோ?

தன்னுடைய அவஸ்தையை அமுதனுக்கு சொல்ல விழைந்தான். வெளிநாட்டுக்குப்போய் கண்டபலன் என்ன என்பதை அவனுக்குப் புரிய வைக்கவேண்டும். அக்காவுக்கு கல்யாணம் செய்துவைத்தது உண்மைதான். ஆனால் அவனுடைய இழப்புக்கள்?

'அக்காவின் வீட்டில் எத்தனைநாட்கள் இன்னும் இருப்பது? அடுத்தவளும் வளர்ந்து விட்டாள். இன்னும் ஒரு வீடு கட்டினால் நல்லது' என்று அப்பா காலையில் சொன்னார். அவருக்கு பெரிய கவலை: அவனுக்கு ஒரு கல்யாணம் பேசி வந்ததாம். பிள்ளை என்ன தொழில் செய்கிறார்? என்று கேட்டார்களாம். 'அவன் பிறகும் வெளிநாட்டுக்குப் போகப்போகிறான்' என்று அப்பா சொன்னதற்கு. 'நல்லதுதான். ஆனால் கல்யாணம் செய்துகொண்டு, பெண்ணையும் உடனே கூட்டிக்கொண்டு போகக்கூடிய வசதி இருந்தால் சொல்லுங்கோ மேலே பேசுவோம்' என்று சொல்லிப் போனார்களாம்.

அந்த ஆளை குறைசொல்ல முடியாது. கல்யாணம் முடிந்து சில நாட்களினுள்ளேயே, புருசனை அனுப்பிவிட்டு இன்னும் இரண்டோ மூன்றோ வருஷங்கள் காத்திருப்பதைவிட தன் பெண் கல்யாணம் ஆகாமலே நாலு வருஷம் இருக்கட்டும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

என்னதான் வெளியே போய் உழைத்துக்கொட்டினாலும் நிரந்தரமான தொழில் போல கௌரவம் இருக்குமா? அமுதனைப்போல தானும் ஒரு கடை போடவேணும் என்ற நினைப்பு ஊர்திரும்புகிற பொழுது இருந்தது. ஆனால் இங்கே பார்த்தால் வீடுகளை விடக் கூடுதலாய் கடைகள்தான் இருக்கின்றன. அடுத்து தான் என்ன செய்யப் போகிறோம் என்ற நிச்சயமற்ற தன்மையுள் தான் சிக்குப்பட்டிருப்பதை உணர்ந்தால் அமுதன் தன்னைப் பார்த்து பொறாமைப்பட்டிருப்பானா? அமுதனிடம் எல்லாவற்றையும் சொல்லவேண்டும் என்று விரும்பினான். அவனுடைய தப்பான எண்ணங்கள் விலகும். அத்தோடு உருப்படியான ஆலோசனை எதையும் பெற முடியும்.

அமுதனிடம் அவன் தன் பிரச்சினைகளை சொல்ல வாயெடுத்த பொழுது அமுதனின் மனைவியின் குரல் இடைமறித்தது. அவள் கடைக்கும் வீட்டிற்கும் இடையில் கையில் அழுகிறகுழந்தையை வைத்து தேற்றிக் கொண்டு நின்றாள்.

''கடையிலை சனம் கனபேர் நிற்கினம். அடுப்பில் கறி பொங்குது இந்தப் பிள்ளையின்ரை அழுகையை சமாளிக்க ஏலாமல் இருக்கு. நான் அல்லாடுகிறன். நீங்கள் பொழுது போறது தெரியாமல் கதையுங்கோ'' என்று சத்தமான குரலில் சொன்னாள்.

அமுதன் சிகரெட்டை அணைத்துவிட்டு துள்ளி எழுந்தான். 'இரு வாறன்' என்று கூடச் சொல்லாமல் விரைவாய் போனான். 'அந்தாள் பொழுது போகாத மனுஷன் நீங்களும் அப்பிடியே?' என்று சொல்லிக் கொண்டே அமுதனின் பின்னால் அவள்போய் மறைந்தாள்.

ராமநாதன் சலிப்புடன் எழுந்தான். அமுதனின் மனைவி அப்படிப் பேசியதற்கு ஏதும் நல்ல காரணம் கற்பித்து சமாதானம் அடைய முடியுமா? என்று சிந்தித்தான். அவளுக்கும் தன்மீது பொறாமையோ? அமுதனுக்கு தன்மீது பொறாமை இருப்பதுபோல அவளுக்கு தனக்கு வரப்போகிற மனைவிமேல் பொறாமை இருக்குமோ?

என்ன அபத்தமான சிந்தனைகள்? என்று மறுகிக் கொண்டான். எப்படி இருந்தாலும்; மாமரத்தடிக்கு அவனால் இனி வரமுடியாது. மனம் அதற்கு இடம் கொடுக்காது. இனி இங்கே எவருடனும் ஒட்டுதலாய் இருக்க முடியாது என்று மிகுந்த கவலையோடு தீர்மானித்தான்.

இனி அடுத்தது எங்கே?

கைவசம் கொஞ்சம் பணம் இருக்கிறது. அதில் ஒரு காணி வாங்கப்பாருங்கோ என்று அப்பாவிடம் சொல்லவேண்டும். ஜெயக்குமார் என்று ஒருத்தன், அவனை கப்பலில் அனுப்புகிறேன் என்று சொல்லியிருக்கிறன் அவனைப் போய்ப்பார்க்கவேண்டும்.

ராமநாதன் வீட்டை நோக்கி நடந்தான். ★

(யாவும் கற்பனை)

சஞ்சீவி சிறுகதை

## உலகை ஒரு நாள் ஆளும்

இரவு பகல் மலரும்
இரு விழிகள் சிவக்கும் .........!
அருள் என என் கவிதை வந்து பாயும்......!
ஆசை எல்லாம் அதில் விழுந்து தேயும்......!
கவலை இன்றி கற்பனைத் தேர் ஓடும் ....!
கவி நெஞ்சம் என்னை மறந்து பாடும்......!
வறுமை நிலை தொடரும்
வார்த்தைகளும் இடரும் ...!
எது வரினும் என் கவிதை மலரும் -அது
உலகையெல்லாம் ஒரு நாள் ஆளும்......!

- ரி. ரஜந்த் -

## உன் வரவை எதிர்பார்த்து...

கரையில் மோதும் கடல் அலைகள்
நெஞ்சினில் மோதும் நினைவலைகள்
கனவில் அடிக்கடி உன் வண்ணங்கள்
நினைவில் எப்போதும் உன் எண்ணங்கள்
வெண் நுரைகள் பொங்கும் கடலில்
நீர்த் துளிகள் பெருகும் என் விழியில்
கடந்தகால நிழல்களில் உன் கோலங்கள்
எதிர்கால நிஜங்களில் பல கீறல்கள்
காணும் பொருள் யாவும் நீயே
நெஞ்சம் முழுதும் நிறைந்தாயே
இன்பத்தில் உடன் மகிழ்வாயே......!
துன்பத்தில் நானே துடிக்கிறேன்
உறவுகளில் மகிழ்ந்தேன்
பிரிவுகளில் தவிக்கிறேன்
உன் வரவை எதிர்பார்த்து
தினம் நிற்பேன் வாசலில் காத்து.

- ஜீவனு சிவரட்ணம் -




## சனி வந்து விட்டால் சஞ்சலம் தீர்கிறது

1. சனியொன்று இங்கு வந்துவிட்டால் - என்
சஞ்சல மெல்லாம் விலை போகிறது
சஞ்சீவி என்றொருத்தி வந்து இங்கு - என் மன
சஞ்சலத்தை மெல்ல வாங்குகிறாள்
2. காலை எழுந்துவிட்டால் அவள் முகமே - என்
கண்ணெதிரே அன்று வருகிறது
காட்சிப் பொருளாய் அவளிருப்பதில்லை - பெரும்
காவியமாய் என்னைத் தொடர்கின்றாள்.

- க. காந்தரூபன்
பலாலி ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

## இளைய தலைமுறைக்கு ஊக்கமளிப்பது 'சஞ்சீவி'

ஈழத்து கலை இலக்கிய உலகில் இளையதலைமுறை எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் சஞ்சீவி தனித்துவம் வாய்ந்தது. பாராட்டுகிறோம்; பணி தொடர வாழ்த்துக்கள்.

- வேலணையூர் தாஸ்

## பஞ்சாமிர்தம்

'சஞ்சீவி'யே! உள்ளத்துக்கோர் நீ ஒரு பஞ்சாமிர்தம்!
செல்வி ஜெஸ்மின் அன்ஸார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான-வானிலை ஆராய்ச்சியில் சுப்பர் கம்பியூட்டர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**விஞ்ஞான ஆராய்ச்சி**

சுப்பர் கம்பியூட்டர் ராஜ வம்சம்; ரோல்ஸ் ராய்ஸ் (Rolls Royce) சில பிரத்தியேக, அதிவேக உபயோகங்களுக்சென்று தனிப்படத் தயாரிக்கப்பட்டவை. இவைகளைக் கடைகளில் வாங்க முடியாது. சிலவேளை வாங்கவே முடியாது: கடத்திக் கொண்டு வந்தால்தான் உண்டு. இந்த அதிவேக உபயோகங்கள் எல்லாமே விஞ்ஞான ஆராய்ச்சியில்தான் பெரும்பாலும் இருக்கின்றன. அவைகளில் சிலதைப் பார்க்கலாம். என்னதான் இதன் சுப்பர்வேலை என்று பார்க்கலாமே.

தொண்ணூறுகளில் பிரவேசம் செய்யும் கம்பியூட்டர் யுகத்தில் சுப்பர் கம்பியூட்டரின் தேவைகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. கம்பியூட்டேஷனல் ஏரோடைனமிக்ஸ் [Computational Aerodymics] என்று சொல்வார்கள். ஒரு ஏரோப்பிளேனை புதிதாக வடிவமைக்க முக்கியமாக அதன் இறக்கை, அமைப்பு போன்றவைகளை புதிதுபுதிதாக பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்றால் அதற்காக ராட்சசத்தமான காற்றுச்சுரங்கங்கள் (Wind Tunnels) வேண்டும்! அதிலும் ஒவ்வொருவடிவத்தையும் சிறியதாக மாடல் பண்ணித்தான் முடியும். அப்படிப் பார்த்து அந்த வடிவம் வேலை செய்யும், இல்லை கவிழும் என்று தீர்மானிக்கிறார்கள். இதற்குச் செலவும் நேரமும் அதிகமாகிறது. இப்போது சுப்பர் கம்பியூட்டரை வைத்துக் கொண்டு பற்பல கற்பனை ஏரோபிளேன் வடிவங்களைச் சட்சட் என்று அமைத்து அதன் மேல் மோதும் சக்திகளின் விளைவுகளை ஆராய்ந்து அந்த வடிவமைப்பு ஸ்திரமானதா இல்லையா என்று கண்டுபிடிக்க முடிகிறது.

இதற்கு உண்டான கணிதம் ஏறக்குறைய நூறு வருஷமாக இருக்கிறது. சேவியர் (Saviar), ஸ்டோக்ஸ்(Stokes) என்று இருவர் கண்டுபிடித்த கணக்குகள். அந்தக் கணக்குகளைக் கம்பியூட்டரில் செய்ய சுப்பர் கம்பியூட்டர் வேண்டும். தற்போது பிரபலமான ஏர்பஸ் விமானத்தின் லேட்டஸ்ட் மாடல் சுப்பர் கம்பியூட்டர் உதவிகொண்டு வடிவமைக்கப்பட்டது.

**வானிலைக் கணிப்பு**

அடுத்த உபயோகம் வானிலை. பத்து வருஷத்துக்கு முன்னால் அடுத்த பத்து நாட்களுக்கு உண்டான வான் நிலையை எதிர்பார்த்து 'வரும் வெள்ளிக்கிழமை மழைபெய்யும்' என்று சொல்வது முடியாத காரியமாக இருந்தது. இதற்குக்காரணம் நம்முடைய வான் மண்டலத்தின் பிரம்மாண்டமும், அதில் காற்றின் சுழற்சிகளும், சீற்றமும், சூரியனின் சூடும், ஈரமும் என்று பற்பல எதிர்பாராத சங்கதிகள் கலந்து கொண்டுவிடுவதால்.

சங்க காலத்திலிருந்து சமீபகாலம்வரை தவளைச் சத்தம், பிள்ளையார் எறும்பு இவைகளைக் கொண்டுதான் மழை வரும் என்று கணித்துக்கொண்டிருந்தார்கள். இன்று அப்படியில்லை–

**மழை எங்கே பெய்யும்?**


காற்றுமண்டலத்தை சுப்பர் கம்பியூட்டர்கள் மூலம் மொடல் பண்ணுகிறார்கள். இதில் கிரிட் பாயிண்ட் (Grid Point) ஸ்பெக்ட்ரல் (Spectral) என்று இருவகை உண்டு. இதில் ஸ்பெக்ட்ரல் மொடல்தான் பிரசித்தம். இந்த மொடலை வைத்துக் கொண்டு பூமி முழுவதுமான காற்று மண்டலத்தை சுப்பர் கம்பியூட்டர் கற்பனை (Simulation) செய்கிறது. அடுத்து பத்து நாட்களுக்கு எங்கெங்கே மழைபெய்யும், எங்கே புயற்காற்று, எங்கே குளிர் என்று கண்டு கணக்கிட்டுச் சொல்கிறது. இதில் க்ளோபல் அட்மாஸ்பெரிக் ரிஸர்ச் ப்ரொக்ராம் (Global Atmospheric Research Programme) என்றெல்லாம் இருக்கிறது. இதற்கு க்ரே கம்பியூட்டர் இல்லாமல் முடியவே முடியாது. இதைக் கேட்டுத்தான் இந்தியாவுக்கு இன்றைய தேதிவரை அமெரிக்கா கொடுக்கவில்லை.

அடுத்த உபயோகம் சினிமா. ஆம் சினிமா. இரண்டு வருஷத்து முன் 'தி லாஸ்ட் ஸ்டார் ஃபைட்டர்' (The last Star Fighter) என்கிற விஞ்ஞானக்கதை சினிமா அமெரிக்காவில் ஏ.பி.சி, (A B. C) எல்லா செண்டர்களிலும் பிய்த்துக்கொண்டு ஓடி விநியோகஸ்தர்களின் கையைக் கடிக்காததற்குக் காரணம் சுப்பர் கம்பியூட்டர். சில அனிமேஷன் (Animation) முறைப்படி டிஜிட்டல் சீன் சிமுலேஷன் (Digital Scene Simulation) என்கிற ஒரு புரொக்ராம் மூலம் நம்மால் நினைத்துப்பார்க்க இயலாத அத்தனை வேகத்தில் ஒரு காட்சியை மாற்றவும், உருட்டவும், திருப்பவும், உள்ளே வெளியே கலர் மாற்றவும், வண்ணங்களைச் செய்யவும் ஒரு க்ரே எக்ஸ் எம்பி கம்பியூட்டரை உபயோகிக்கிறார்கள். டிஜிட்டல் புரொடக்ஷன்ஸ் (Digital Productions) என்கிற தனிக்கம்பெனி இதில் சுப்பர் வேலைகளை நிறையச் செய்திருக்கிறார்கள்.

அடுத்தது க்வாண்டம் இயற்பியலில் மாண்ட்டி கார்லோ சிமுலேஷன் (Monte Carlo Simulation) என்ற முறைப்படி க்வார்க் (Quark) க்ளுவான் (Gluon) போன்ற துகள்களின் அற்பகால வாழ்வை கணக்கிட சுப்பர் கம்பியூட்டரைப் பிரயோகிக்கிறார்கள். பிரபஞ்சத்தின் ஆரம்பகாலத்தில் நடந்த விந்தைகளையும் அத்தனை சக்திகளையும் ஒட்டவைத்துப் பார்க்க சுப்பர் கம்பியூட்டர்களைப் பிரயோகப்படுத்துகிறார்கள். ஒரு நட்சத்திரம் பிறக்கும்போது என்ன நேர்கிறது என்று அருகேபோய்ப் பார்க்கவேண்டியதில்லை.

ப்ளாஸ்மா (Plasma) என்கிற ஒருவிதமான பிசின்மூலம் எம். எச். டி – மாக்னெட்டோ ஹைட்ரோ டைனமிக்ஸ் (Magneto Hydro Dynamics: MHD) என்று புதிய முறையில் மின்சக்தி ஆராய்ச்சிகளுக்கும் 'சுப்பர்' தேவைப்படுகிறது. சிலிக்கன் சில்லுக்குள் லட்சக்கணக்கான இணைப்புகளை எழுதும் எல். எஸ். ஐ (LSI) ஆராய்ச்சியில், பெற்றோலியம் எண்ணெய்க் கிணறுகள் ஆராய்ச்சி, அணுசக்தி நிலையத்தின் அவசர கால ஆராய்ச்சிகள் என்று 'சுப்'புக்கு பற்பல உபயோகங்கள். விலைகொடுக்கத் தயாராக இருந்தாலும் வாங்க முடியவில்லை. ★

> திறமைவாய்ந்த கம்பியூட்டர்களை சுப்பர் மினி, மினி சுப்பர், சுப்பர் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில் சுப்பர் கம்பியூட்டர் சக்திவாய்ந்தது; அதிவேகமாக இயங்குவது. உலகில் மிஞ்சிப் போனால் இப்போது சில நூறு சுப்பர் கம்பியூட்டர்களே உள்ளன. உலகில் ஒருசில நாடுகள்தான் இவற்றைத் தயாரிக்கின்றன.
>
> சுப்பர் கம்பியூட்டர்களைக் கடைகளில் வாங்கமுடியாது. இவை தயாரிக்கப்படுகிற நாடுகளின் அரசுகள் அனுமதித்தால்தான் இவை பிற நாடுகளுக்கு விற்கப்படுகின்றன. சுப்பர் கம்பியூட்டர்கள் பெரும்பாலும் விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வானிலை கணிப்பும் இதில் அடங்கும்.



க்ரே சுப்பர் கம்பியூட்டர்

# கோடீஸ்வரப் பூனைகள்

ஏழையின் வீட்டில் அடுப்பு எரியாதபோது அதில் பூனை படுத்துறங்கும் என்பார்கள்...

ஆனால் பூனைகள் அடைக்கலம் புகுந்த பகுதிகளுக்குப் பல கோடிகளையே கொட்டித் தந்து இருக்கிறார் ஒரு அதிசய மனிதர்.

அவரது பெயர் பென் ரீ. இங்கிலாந்தில் பக்ஸ் என்ற பகுதியில் ஒன்றரைக் கோடி



ரூபாய் மதிப்பு உள்ள மாளிகையில் வாழ்ந்து வந்தார்.

புராதனப் பொருட்களைச் சேகரித்து வியாபாரம் செய்வது இவரின் தொழில் இதில் கோடீஸ்வரன் ஆனார்.

பூனைகள் என்றால் இவருக்கு மிகவும் பிடிக்கும். நம்மிலும் பலருக்குப் பூனைகளைப் பிடிக்கும் காரணம் அவை எலிகளைப் பிடிக்கும் நமக்கு உதவும் என்பதால்...!

ஆனால் இந்தக் கோடீஸ்வரர் ரீயின் கதையே வாழ்வில் நெருங்கி உறவாடிய மனிதர்களைக்கூட ஒதுக்கித் தள்ளிவிட்டு இந்த வாயில்லா ஜீவன்களாம் பூனைகளிடம் முழு அன்மையும் பொழிந்திருக்கிறார்.

வெறும் அன்பைப் பொழிந்திருந்தால்கூட அவரை மன்னித்து இருப்பார்கள்!

ஆனால் ரீ செய்தது என்ன தெரியுமா? தனது ஆஸ்திகளையும் அல்லவா அள்ளித் தந்து இருக்கிறார் பூனைகளுக்கு!

சமீபத்தில் தனது 82 ஆவது வயதில் மரணம் அடைந்தார் ரீ.

அவர் இறந்த பிறகு அவரின் உயில் உறவினர்கள் முன்னிலையில் படித்துப் பார்க்கப்பட்டது.

நாட்டில் உள்ள பூனைகள் பராமரிப்பு அறக்கட்டளைகள் மூன்றுக்கு தனது ஆஸ்தி முழுவதுமே சொந்தம் எனத் தாரைவார்த்துத் தந்துவிட்டார் உயில் மூலம்!

அப்படித் தானம் செய்த ஆஸ்தியின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? 16 கோடி ரூபாய்!

வாயில்லா ஜீவன்களை வாரிசுகள் ஆக்கிய ரீயின் உயிலைக் கேட்டு வாயடைத்துப் போனார்கள் உறவினர்கள்.

மானிடராய் பிறத்தல் அரிது என்று உறவினர்களிடம் அப்போது யாரும் நினைவு படுத்தி இருந்தால் அவர்கள் என்ன சொல்லி இருப்பார்கள் பூனையாய்ப் பிறத்தலே மேல் என்று சொல்லியபடி அவர் மீது பாய்ந்து இருப்பார்கள்!

# 58 ஆயிரம் பேருக்கு நினைவுத் தூபி

வியட்நாம் போரில் 58 ஆயிரத்து 132 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர்.

இவர்களுக்கு அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

247 அடி நீளமுள்ள பளிங்கு போன்ற கருங்கல்லில் 58 ஆயிரத்து 132 பேரின் பெயர்களும் பொறிக்கப்பட்டு உள்ளன.

இந்த நினைவுச்சின்னத்தை இறந்த வீரர்களின் உறவினர்கள் நாள்தோறும் பார்த்துச் செல்கிறார்கள்.

அப்போது மலர்க் கொத்து, தொப்பி, பதக்கம், காலணி, புகைப்படம், அழைப்பிதழ் போன்ற பொருள்களை அன்புப் பரிசாக அங்கு வைத்து விட்டுச் செல்கிறார்கள்.

லொறி, லொறியாக வந்து குவியும் இவற்றை அதிகாரிகள் எடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். ★

# ஆண்டுக்கு 5லட்சம் கர்ப்பிணிகள் இறப்பு

ஒவ்வொரு பெண்ணுக்கும் பிரசவம் என்பது மறுபிறவி எடுப்பது போன்றதாகும்.

தற்போது அதிநவீன சிகிச்சை முறைகள் இருப்பதால் ஓரளவு பயமில்லை.

அப்படி இருந்தும் இந்தியா, சீனா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் ஆண்டுக்கு 5 லட்சம் பெண்கள் பிரசவ காலத்தில் உயிரிழக்கின்றனர்:

ஆசியாவில் 3 லட்சம் பேர், ஆபிரிக்காவில் 1½ லட்சம் பேர் லத்தின் அமெரிக்காவில் 34 ஆயிரம் பேர்.

முழுவளர்ச்சி அடைந்த நாடுகளில் ஆண்டுக்கு மொத்தம் ஆயிரம் பேர் மட்டுமே பலியாகின்றனர்.

உலகவங்கி அறிக்கையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. ★

# சீனப் பெருஞ்சுவர் பற்றி....

சீனப் பெருஞ்சுவர் உலகப் புகழ்பெற்றது. இச்சுவரின் மொத்த நீளம் 18,000 கிலோ மீற்றர். இப்போதைய சீன அரசு இச்சுவரையொட்டி நெடுக 4. 66மில்லியன் ஹெக்டேர் நிலப் பரப்பில் காடு வளர்த்து இன்னொரு பச்சைச் சுவரை எழுப்பியுள்ளது.

இதில் 733,000 ஹெக்டேரில் காற்றுத்தடுப்புக்காடுகளையும் 1 33 மில்லியன் ஹெக்டேரில் சமூகக் காடுகளையும் வளர்த்துள்ளது. காற்றுத் தடுப்புக்காடுகள் மண் அரிப்பைத்தடுக்க மணற்பாங்கான கடற்கரைப்பகுதியில் 6.000 கி.மீ. தூரத்திற்கு நடப்பட்டுள்ளன. நமக்குக் காடுவளர்க்கத்தெரியாது. அழிக்கமட்டுமே தெரியும். மரம் நடத் தெரியாது. வெட்டி எரிக்க மட்டுமே தெரியும்.

# 'பாமர'ப் புலவர்

ஒரு புலவரும் அவர் நண்பரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது இன்னொரு பெரும் புலவர் ஒருவரைப்பற்றி அங்கே பேச்சு வந்தது.

''அவரைப்பற்றி தங்கள் கருத்து என்ன?'' என்று புலவரிடம் அந்த நண்பர் கேட்டார். ''அவர் ஒரு பாமர மனிதர்'' என்றார் புலவர்.

இதைக்கேட்டு நண்பர் சற்றுத் திகைத்தார். அவ்வளவு பெரிய புலவரைப் போய் ''பாமர மனிதர்'' என்று இவர் குறிப்பிடுகிறாரே என்ற ஆதங்கத்துடன் 'அவர் உலகத்துக்கே வழி காட்டக்கூடிய நல்லறிவாளர் என்று போற்றப்படுகிறார் அவரைப் போய் நல்லது கெட்டதே தெரியாதவர் என்ற பொருள்பட பாமரர் என்கிறீர்களே..?' என நண்பர் வினவினார்!

''நான் பாமர மனிதர் என்று குறிப்பிட்டதைத் தாங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். 'பாமர' என்று நான் கூறியது அவர் ஒரு பா எனும் கனி குலுங்கும் மரம் என்று பொருளில் சொன்னதாகும் அதாவது மாமரம் என்பது போல இவர் பாமரம் என்பதையே பாமர மனிதர் என குறிப்பிட்டேன்'' என்றார் புலவர்.

புலவரின் நாவன்மையைக் கேட்டு மகிழ்ந்தார் நண்பர்!

# விஞ்ஞான விந்தைகள்

★ யானையின் துதிக்கையில் மனிதத் தசைகளை விட 70 மடங்கு அதிகமான தசைகள் உள்ளதாம்.



★ 'பிளாக்விடோ' என்று அழைக்கப்படும் சிலந்தி இனத்துக்கு கொடிய பாம்பைவிட 15 மடங்கு வீரியமுள்ள விஷத்தன்மை உண்டு. இவை ஆபிரிக்கக் காடுகளில் நிறைந்து காணப்படுகின்றன.

★ ஒருசொட்டு இரத்தத்தில் சுமார் 30கோடி சிவப்பு அணுக்கள் இருக்கின்றன.

★ வானத்தில் இருந்து பெய்யும் மழைநீர், மணிக்கு 7 மைல் வேகத்தில் விழுகின்றது.

★ ஒரு சாதாரண எறும்புக்கு 5 மூக்குகள் உண்டு ஒவ்வொன்றாலும் விதவிதமான வாசனைகளை நுகரமுடியும்

★ ஆஸ்திரேலியாவில் காணப்படும் 'புஷ்டர்க்கி' என்ற இனக்கோழியில் முட்டையில் இருந்து குஞ்சு பொரித்து வெளியே வந்த உடனேயே 'ஜிவ்' என்று பறக்க ஆரம்பித்துவிடும்.

★ மிகவும் பலம்வாய்ந்த உயிரினம் எறும்புதான். அது தன்னைப்போல 7 மடங்கு அதிக எடையுள்ள பொருளை இழுத்துச்செல்லும் வல்லமை படைத்தவை. ★

# ஒன்றுக்கு பின்னால் வரும் பூஜ்யங்களின் மதிப்பு

இந்தியக் காங்கிரஸ் தலைவர்களின் ஒருவரான சத்தியமூர்த்தி ஒரு புகழ்பெற்ற பேச்சாளர்.

ஒருமுறை அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் உணர்ச்சி ததும்பப் பேசிக்கொண்டிருந்தார்.

கூட்டத்தில் இருந்த ஒருவர் ''மேடையில் இப்படி உணர்ச்சி ததும்பப் பேசிவிடலாம். ஆனால் செயலில் செய்து காட்டுவது தான் முடியாது. மகாத்மாகாந்தியைச் சொல்லுங்கள். அவர் நம்பர் ஒன்று. நீங்கள் எல்லாம் வெறும் சைபர்தான்'' என்று கூறினார்.

அதற்கு நிதானமாய்ச் சத்தியமூர்த்தி ''ஆம் ஆம். நீங்கள் கூறியது முழுவதும் உண்மை. தலைவர் காந்திஜி நம்பர் ஒன்றுதான். நாங்கள் அனைவரும் சைபர்கள்தான். ஒன்றுக்குப் பின்னால் வரும் ஒவ்வொரு சைபருக்கும் பத்து மடங்கல்லவா மதிப்பு ஏறுகிறது''— என்றார்.

கேட்டவர் வாயடைத்துப் போனார். ★

# எழுதப் படிக்கத் தெரியாத பக்தனே மெய்ஞ்ஞானி

யார் மெய்ஞ்ஞானி?

சைதன்ய தேவர் தெற்கே யாத்திரை சென்றபோது, ஒரு பண்டிதர் கீதையைப் பற்றி உபந்நியாசம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார்.

கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு பக்தன் உட்கார்ந்திருந்தான்.

அவனுக்குக் கீதையில் ஒரு சுலோகத்தின் பொருளும் தெரிந்து கொள்ளும் சக்தி இல்லை.

ஆனால் உபந்நியாசம் நடந்து கொண்டிருந்தபோது, அவன் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது.

எதற்காக அழுகிறாய் அப்பனே! என்ன தெரிந்துகொண்டாய்?' என்று சைதன்ய தேவர் கேட்டார்.

அதற்கு அந்தப் பக்தன் 'தேர்மேல் கிருஷ்ண பகவானையும், அருச்சுனனையும் காண்கின்றேன். அதனால் என்கண்களில் கண்ணீர் பெருகுகிறது. உபந்நியாசம் ஒன்றும் என் காதில் விழவில்லை' —என்றான்.

எழுதப் படிக்கத் தெரியாத இந்தப் பக்தனே மெய்ஞ்ஞானி. கண்ணன் பேரில் அவனுக்கு உண்டான காதலே எல்லா சாஸ்திரங்களின் பொருளும்.

—பகவான் ராமகிருஷ்ணரின் ஞானமொழி. ★

# தினமும் மரணம்

உலகில் பட்டினியாலும் நோயாலும் தினம் 40 ஆயிரம் குழந்தைகள் சாகிறார்கள்.

இதில் ஆபிரிக்கக் கண்டக் குழந்தைகளே அதிகம்.

வளரும் நாடுகள் கொடுத்த கடனை கெடுபிடி செய்து வசூலிப்பதால் ஆபிரிக்க நாடுகள் தங்கள் குழந்தைகளை பட்டினி போட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று சர்வதேச குழந்தைகள் நல நிதி நிறுவனம் கூறி உள்ளது. ★

# வழுக்கை நீங்க புதிய மருந்து

வழுக்கை நீங்க உதவும் மருந்து விரைவில் சந்தைக்கு வருகிறது.

இம் மருந்தின் பெயர் ரொகெய்ன் (Rogaine) இம் மருந்தைச் சந்தைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை அமெரிக்க அரசு விரைவில் வழங்க உள்ளது.


அரசு அங்கீகாரம் கிடைக்கும் வரை காத்திருக்கும் பொறுமை அமெரிக்க வழுக்கைத் தலையருக்கு இல்லை.

அதனால் இம்மருந்து வேறு வழிகளினால் வழுக்கையர்களின் கைளுக்குக் கிடைத்து விட்டது.

பாதுகாப்பான ஒரு மருந்து பகுப்பாய்வாளர் ஆலோசனைச்சபை சிபார்சு செய்திருக்கிறது.

தலைமயிரை சீக்கிரத்தில் முளைக்க வைக்கும் அதிசய மருந்து இது என்று வர்ணிக்கபபடுகிறது.

இளம் வயதில் இருந்த அடர்த்தியான அளவுக்குத் தலையில் மயிரை இம் மருந்து வளரவைக்காது என்றாலும் வழுக்கையை மறைக்கும் அளவுக்கு வளர உதவும் என்று வைத்திய நிபுணர்கள் கருதுகின்றனர். ★



# எடிஸனின் ஆராய்ச்சி

தோமஸ் அல்வா எடிஸன், பிரபல விஞ்ஞானி.

ரப்பர் மரத்தில் ஒரு ஆராய்ச்சியை அவர் மேற்கொண்டார்.

ரப்பர் மரத்தைத் தவிர மற்ற மரங்கள் எதிலாவது இயற்கையான ரப்பர் கிடைக்குமா? என்று பார்ப்பதே அவரின் ஆராய்ச்சி.

சுமார் 50 ஆயிரம் தாவர வர்க்கங்களை அவர் சோதித்துப் பார்த்தார். ஒன்றிலும் ரப்பர் கிடைக்கவில்லை.

பக்கத்தில் இருந்த நண்பர், 'மிஸ்டர் எடிஸன், நம்முடைய இந்தச் சோதனை பிரயோசனமில்லாது போயிற்றே?' என்று சொல்லி வருத்தப்பட்டார்.

'ஏன் பிரயோசனம் இல்லை. இந்த 50 ஆயிரம் வகை தாவர வர்க்கங்களில் ரப்பர் கிடைக்காது என்பதை அறிந்து கொண்டோம் இல்லையா?'— என்றார் எடிஸன் ★

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் பயில்வோம்

பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க:

(1) மலையும் மலைசார்ந்த இடமும்
1. குறிஞ்சி, 2. முல்லை, 3. மருதம், 4. நெய்தல்

(2) செல்வமில்லாதவர் உலகத்திலே ''நடைப்பிணமாவார்' இங்கே நடைப்பிணம் என்பதன் கருத்து

(3) 1. சோம்பேறிகள், 2. பயனற்றவர்கள், 3. பேய்கள், 4. அநாதர்
பழந்தமிழரின் நாடக கலைச் சிறப்பினை அறிய உதவும் நூல்
1. புறநானூறு, 2. சிலப்பதிகாரம், 3. நெடுநல்வாடை, 4. யாழ்நூல்

(4) அசோக சக்கரவர்த்தி தம்முடைய சாசனங்களை கற்பாறைகளில் பொறிப்பதற்குப் பயன்படுத்திய எழுத்து
1. காரோஸ்டி, 2. தேவநாகரி, 3. வட்டெழுத்து, 4. பிராமி

(5) சொற்பிறப்பு ஆராய்ச்சியாளர்களுக்கெல்லாம் தந்தையென படத்தக்கவர்
1. தொல்காப்பியர், 2. வீரமாமுனிவர், 3. யாஸ்கர், 4. பாணினி

(6) ''ஆதி பகவன் முதற்றே புலகு'' என்னும் தொடரில் ஏகார இடைச்சொல் வந்துள்ள பொருள்
1. வினு, 2. எதிர்மறை, 3. பிரிநிலை, 4: தேற்றம்

(7) ''கம்பனும் வியக்கும் பாடல்'' இதில் உம்மையிடைச் சொல் வந்துள்ள பொருள்
1. பிரிநிலை, 2. உயர்சிறப்பு, 3. இணைவு, 4. ஒழியிசை

(8) பின்வருவனவற்றுள் விரைவு குறிப்பை உணர்த்தும் தொடர்
1. திடுதிடென, 2. திடீரென, 3. சடக்கென, 4 திடுக்கென

(9) ''நள்ளிருள்'' என்பதில் வரும் உரிச்சொல்
1. நடு, 2. நள், 3. நனி, 4. இரவு

(10) பின்வருவனவற்றுள் ''வா'' என்னும் அடியாகப் பிறந்த பெயர்
1. வாவல், 2. வாயில், 3. வாரானை, 4. வாடை

(11) ''அவதாரம்'' என்னும் சொல்லில் அவ என்ற முன்னொட்டு உணர்த்தும் பொருள்
1. மேல், 2. கீழ், 3. அப்பால், 4. பின்

(12) பின்வருவனவற்றுள் பெண்பாலை மட்டும் உணர்த்துவது
1. ஆசிரியர், 2. புத்திசாலி, 3. செவிலி, 4. பரிகாரி

(13) பின்வரும் சொற்களில் பெயராகவும் வினையாகவும் அமையக்கூடிய சொல்
1. சமலா, 2. வந்தான், 3. அணை, 4. கட்டு

(14) இன்றைய இலக்கிய உலகில் ''திறனாய்வு'' துறை முக்கிய இடம்பெறுகிறது. திறனாய்வு என்பதன் பொருள்
1. இலக்கிய ஆராய்ச்சி, 2. விமர்சனம், 3. கலை, 4. பாடல்

(15) இரு பொருள் அமையத் தொடுப்பது
1. இணைமொழி, 2. சிலேடை, 3. இரட்டைக் கிளவி, 4. மடக்கு

(16) ஒரு நூலுக்கு நூலாசிரியன் தவிர்ந்த பிறர்தரும் புகழுரை
1. முகவுரை, 2. முன்னுரை, 3. விதப்புரை, 4. அணிந்துரை

(17) ஆடு மேய்ப்பவன் இடையன் எனப்படுவதுபோல ஆனை செலுத்துபவன்
1. குயவன், 2. வலபன், 3. பாகன், 4. வீரன்

(18) ''ஆழம்பார்த்தல்''என்னும் இலக்கணத் தொடருக்குரிய பொருள்
1. பரிசோதனைசெய்தல், 2. அளவெடுத்தல், 3' மதிப்பீடுசெய்தல், 4. அறிவு முதலியவற்றை ஆராய்தல்

(19) ''சாது''போல் நடித்து தீது புரிபவனை குறிப்பிடும் இலக்கணத் தொடர்
1. அண்டப் புரட்டன், 2. உருத்திராட்சப்பூனை,3. தொழுகள்ளன், 4. அரைமனிதன்

(20) ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்னும் பழமொழிக்கு ஒத்தவேறு பழமொழி
1. அமவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா?
2. ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?
3. காலத்திற்கேற்ற கோலம், 4. அலைமோதும்போதே தலைமுழுகு.

(விடைகள் திங்கள் உதயனில் பிரசுரமாகும்)

க. பொ. த. சாதாரணதரம் (புதிய பாடத்திட்டம்)
1988 தமிழ்-மாதிரி வினுத்தாள் (பகுதி ஒன்று) [தயாரிப்பு.- தாஸ்]

# அழகானவற்றைக் கண்டவுடன் அவற்றை சிலையாக வடிக்கும் ஆர்வம் கொண்டவர்

திருமதி இந்திராபாபுவின் வீட்டினுள் நுழைந்ததும் ஷோக்கேசினுள் இருந்தசிற்பங்கள் கண்ணைத் கவர்ந்தன.

கண்ணன், பிள்ளையார், முருகன், யேசு, மாதா இவைகளுடன் நாய், பூனை, கொஞ்சும் கிளிகள்கூட சிற்ப வடிவில் சிலையாகி நின்றன.

✱ இவ்வளவு அழகான சிற்பச் சிலைகளைச் செய்கிறீர்களே ஒரு குருவுக்குக் கீழ் இருந்து படித்தீர்களா...?

! 'இது கடவுள் எனக்குத் தந்த கொடையென்றுதான் சொல்லவேண்டும். இயற்கையாகவே அழகாக உள்ள எதையாவது கண்டால் அதை சிலையாக வடித்துவிடவேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் தான், இன்று இவ்வளவு அழகான சிற்பங்களை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்தது.

★ சரி ஒரு சிலை செய்வதற்கு எத்தனைநாட்கள் பிடிக்கும் என்று சொல்லமுடியுமா...?

ஒரு சிலைக்கு என்று பார்க்க முடியாது. காரணம் ஒரு

> கண்கவரும் சிற்பங்களைத் தயாரிக்கும் தொழிலில் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பவர் மானிப்பாயைச் சேர்ந்தவர் திருமதி இந்திரா பாபு கலைப்பொருள்களுடன் படத்தில் காணப்படுகிறார்.
>
> பேட்டி: அல்லி.

தொகை சிலைக்கு ஒருநாளைக்கு ஒரு வர்ணம் பூசுவோம், அது காய்ந்தபிறகுதான் மறு வர்ணம் பூசுவோம். எனவே ஒரு மாதம் என்றுதான் பார்க்க வேண்டும். இப்படிப் பார்த்தால் 18'' அல்லது 20'' அங்குலம் உயரமுள்ள சிலைகள் 95 அல்லது 100 வரையில் செய்துமுடிக்கக்கூடியதாக இருக்கிறது.

★ இதை ஒரு சிறியகுடிசைக் கைத்தொழில்போலச் செய்து வருகிறீர்கள் என்று நினைக்கிறேன்... வருமானமுள்ள ஒரு தொழிலாக உருவாக்கும் உத்தேசம் இல்லையா...?

! நிச்சயமாக அப்படியான ஒரு எண்ணம் எனக்கு உண்டு. இதன்மூலம் சில பெண்களுக்காகவாவது வேலைவாய்ப்பு, வசதிகளைக்கொடுக்கவேண்டும். என்ற ஆசை இருக்கிறது. இப்போதுகூட சில பெண்கள் எனக்கு உதவியாக திறமையாக வேலைசெய்கிறார்கள். ஆனால் எல்லாவற்றுக்கும் நேரம்வேண்டும்.

✱ நீங்கள் செய்யும் அத்தனை சிலை, சிற்பங்களும் விற்பனையாகின்றனவா? இவற்றை எப்படி சந்தைப்படுத்துகிறீர்கள்?

உருவாக்கும் அத்தனை சிலைகளும் விற்பனையாகின்றன. சொல்லப்போனால் உற்பத்தியாகும் கலைப் பொருள்கள் விற்பனைக்கு பற்றாக்குறையாகவே உள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களில் எல்லாம் இவை விற்பனை செய்யப்படுகின்றன.

அவர்கள் தாங்களாகவே வந்து காரிலோ, வானிலோ உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்கின்றார்கள்.

★ இந்தக் கலைப் பொருள்களைச் செய்வதற்கு என்னென்ன பொருள்களைப் பாவிக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா?

! கடதாசி, கோதுமை மா, சீமெந்து, வெள்ளைக்களிமண், பெயின்ற் வகைகள், மண்ணெண்ணை என்பனவற்றைப் பாவித்து இவைகளைச் செய்கிறேன்.

✱ உங்களுக்கு உதவியாக இருக்கும் மற்றப் பெண்கள் உங்கள் மனத்திருப்திக்கு ஏற்றுப் போல வேலையில் ஒத்துழைப்பார்களா...?

! நிச்சயமாக நான் எதிர்பார்ப்பதிலும் பார்க்க திறம்படச் செய்து முடிப்பார்கள். என் வெற்றிக்கு அவர்களின் பங்களிப்பும் ஒரு உறுதுணை என்றே சொல்ல வேண்டும்.

★ கடைசியாகக் குழந்தைகளுடனும் குடும்பப் பொறுப்புடனும் இக்கலைத்தொழிலைத் திறம்படச் செய்ய உங்களால் எப்படி முடிகிறது?

! உண்மைதான்; இருந்தாலும் நாம் மற்றவர்களின் கையை எதிர்பார்க்காமல் நமக்குத் தேவையான பணத்தை நாமே பெற முடிகிறது. எங்கு பார்த்தாலும் என் கலைப்படைப்புகள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் கடைகளிலும் காணும்போது ஒரு மனத்திருப்தி.

எல்லாவற்றுக்கும் மேலாக நான் உருவாக்கும் தெய்வச் சிலைகள் பலருடைய சுவாமி அறையில் பூஜை செய்து கும்பிடப்படுவதைப் பார்த்ததும் கஷ்டங்கள், சோம்பல் எல்லாம் பறந்து விடும். இதை விடச் சந்தோஷம் வேறு என்ன இருக்கிறது!

இப்படிப் பெருமையுடன் முடிக்கிறார் திருமதி இந்திரா பாபு. ★

-அல்லி-



நங்கை

'தர்மத்திற்காகவும், நீதிக்காகவும் போராடியவர்கள்.

தோற்றதாக வரலாறு கிடையாது'— ஈழத் தமிழரின் நாற்பது ஆண்டுகால போராட்ட வரலாற்றின் யதார்த்தபூர்வமான பின்னணி, இன்று அரச மட்டங்களில் மூடிமறைக்கப்பட்ட நிலையில் தமிழீழ மக்கள் மன்றத்தின் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இனப்போராட்டமும் இந்திய இலங்கை ஒப்பந்தமும்' என்ற நூல் வரலாற்றுப் பொக்கிஷமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் இருபாகங்களாகப் பிரிக்கப்பட்டு தமிழரின் எழுச்சியும், வீழ்ச்சியும் எவ்வாறு இருந்தன என்பதை ஆங்காங்கே புள்ளிவிபரங்களுடன் கொண்டிருப்பது இன்னொரு சிறப்பம்சமாகும்.

1803 ஆம் ஆண்டில் இலண்டனில்அரோஸ்மித்என்பவரினுல் தயாரிக்கப்பட்ட இலங்கையின் வரைபடம் 1799 இல் எழுதப்பட்ட கிளேகோர்ன் குறிப்பின் பின்னணியில் அமைந்துள்ளது. இக்குறிப்பின்படி 'தீவின் ஆட்சியை இருவெவ்வேறுன தேசிய இனங்கள் மிகப்பழைய காலத்தில் இருந்தே தங்களுக்குள் பிரித்து வைத்துக்கொண்டிருக்கின்றன. முதலாவதாக சிங்களவர்கள் வளவைக் கங்கையில் இருந்து சிலாபம் வரை உள்ள நாட்டின் தென்மேற்குப் பகுதிகளிலும், அவற்றுக்குட்பட்ட பகுதியிலும் வாழ்கின்றார்கள். இரண்டாவதாக மலபார்கள் [தமிழர்கள்] - இவர்கள் வடக்குக் கிழக்கு பிராந்தியங்களை ஆட்சி செய்கின்றார்கள். இவ்விரு தேசிய இனங்களும் தமது மதம், மொழி மற்றும் பழக்கவழக்கங்களில் முற்றுக வேறுபட்டிருக்கின்றார்கள்.' என்ற வாசகங்கள் இன்றைய தமிழீழப் போராட்டத்தின் உறுதிப்பாட்டை நியாயப்படுத்துகின்றன:

நீண்டகாலமாகத் [illegible] தமிழ் அரசும், சிங்கள அ[illegible] இரு அரசுகளாக இயங்கி வந்த வேளையில், பிரித்தானிய குடியேற்றவாதிகள் தமது வர்த்தக நோக்கங்களுக்காக இரு அரசுகளையும் 1833 இல் இல் ஒன்றுக இணைத்து ஒரு ஆட்சியின் கீழ் இலங்கை முழுவதும் கொண்டுவரப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்தடுத்துச் சிங்கள, பிரித்தானிய ஏகாதிபத்திய அரசுகளினுல் தமிழரின் துயர வாழ்வு ஆரம்பமானது.

1931 இன் டொனமூர் அரசியல் அமைப்பின் சிங்கள அமைச்சர் சபை, அரச உதவியுடனுன சிங்களக்குடியேற்றங்கள், மலையகத் தமிழரின் குடியுரிமை பறிப்பு, சிங்களம் மட்டும் சட்டம், குறைந்த தொழில் வாய்ப்புக்கள், பல்கலைக்கழகத் தெரிவுத் தரப்படுத்தல் என்ற வகையில் தமிழருக்கெதிரான அடக்குமுறைகள் பரிணும வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து சாத்வீகமான போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் என்பன போன்றவை முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு தடவையும் தோல்வியைத் தழுவியதுடன் தமிழருக்கெதிரான அடக்குமுறைகளும், இன ஒதுக்கல்களும் மேலும் தீவிரப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து விரக்தி, ஆவேசம், சுதந்திரவேட்கை ஆகியவற்றின் மத்தியில் தமிழீழ விடுதலைத் தீவிரவாத இயக்கங்கள் தோற்றம் பெறுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 1977 ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு ஈழத்தமிழர் ஏகோபித்த குரலில் 'தமிழ் ஈழம் ஒன்றே தீர்வு' என்ற




ஆணையை வழங்கியதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் 1983 இல் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இதற்கு முன்னர் பல்வேறு சிங்கள அரசுகளினுல் முன்வைக்கப்பட்ட யோசனைகளும்,

| | |
|---|---|
| நூலின் பெயர்: | இலங்கை இனப்போராட்டம். |
| வெளியீடு: | தமிழீழ மக்கள் மன்றம், 121, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| விலை: | ரூபா 12/- |
| விமர்சனம்: | வல்வை ந. அனந்தராஜ் |

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்களும் செல்லாக் காசாக்கியதுடன், தமிழரை மேலும் ஏமாளிகளாக்கியது. இதற்கு சிங்கள மாக்சியக் கட்சிகள் [illegible] தூண்டுதல்களாக இருந்தன என்பன போன்ற [illegible] படைத் தகவல்கள் இந்நூலின் முதலாவது பகுதியில் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசின் தந்ரோபாயங்களையும், அன்னிய சக்திகளின் உதவியுடனுன இராணுவ நடவடிக்கைகளையும் சாதுரியமாக சமாளித்து வெற்றி கொண்டுவரும் வேளையில் திடீரென 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி இந்திய இலங்கை அரசுகளுக்கிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தம் பற்றிய ஆய்வுரைக் கண்ணோட்டம், இந் நூலில் இரண்டாவது பகுதியிலும் இடம்பெறுகிறது. இந்த ஒப்பந்தம் தமிழரின் அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புக்களையும் எந்த அளவுக்குப் பிரதிபலிக்கின்றன என்பதையும் இந்த ஒப்பந்தத்தில் உள்ள அரைகுறைத் தீர்வுகள் போராட்டச் சூழலில் உரம்பெற்றுவிட்ட தமிழனுக்கு விடிவைத் தருமா என்பது பற்றிய ஒரு ஆய்வுரையாக அமைந்துள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி இந்தியாவும் இலங்கையும் அவற்றுக்குச் சார்பான நாடுகளும் வானளாவப் புகழ்ந்து கொண்டிருக்கின்ற நேரத்தில்,

1. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுதல்.
2. வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பை மறுத்தல்.
3. இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தாமை:
4. போராளிகளுக்கான பாதுகாப்பின்மை.
5. அதிகாரமற்ற மாகாண சபைக்கான தேர்தலுக்கான நடவடிக்கை.
6. தகுந்த பாதுகாப்பான நெகிழ்ச்சியற்ற அரசியல் அமைப்பின்மை.
7. தமிழரின் கையில் பொலிஸ் நிர்வாகத்தை ஒப்படைக்காமை.
8. புதிது புதிதாக இராணுவ முகாம்கள் அமைத்தல்.
9. தமிழருக்கான கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் ஆகியவற்றிற்கான பாரபட்சம்.

ஆகியவை தங்கு தடையின்றி அரசின் உதவியுடன் நடைபெற்றுவருவதையும், இதனைத் தடுக்கும் சக்தியற்ற நிலையில் உள்ள இந்த ஒப்பந்தம் பற்றி ஆங்காங்கே இந்நூல் தெளிவுபடுத்துகின்றது.

இந்த நிலையில் இந்நூலை ஆக்கியோர் இறுதியில், 'இந்திய இலங்கை ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்கு ஒரு நீண்டகாலத் தீர்வைத் தரமுடியுமா?' என்ற வினுவைக் கேட்டு இந்நூலைப் படிப்பவர்கள் 'இல்லை' அல்லது 'ஆம்' என்ற விடையில் எதனைத் தெரிவு செய்யவேண்டும் என்பதையும்; இந்நூலின் இறுதியில் கூறி வைத்திருப்பது மிகவும் பொருத்தமானதாகவும், தமிழீழ மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற்றை அறிய விரும்புவோருக்கும், அரசியலைப் பயில விரும்பும் மாணவர்க்கும்' இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் தாற்பரியத்தை உணராது பிரச்சாரம் செய்யும் அரசியல்வாதிகளுக்கும் ஒரு சிறந்த நூலாக இது பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து.

இந் நூல் அழகிய மூவர்ண அட்டையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாக வெளிவந்துள்ளது. ★

## சமயத்தின் சாரம் ஒழுக்கமே!

சமயத்தின் சாரம் ஒழுக்கமே. என்னுடைய சமயம் சிறைக்கூடு போன்றதன்று, கடவுள் படைப்புக்கு உட்பட்ட எல்லாவற்றிற்கும் அதில் இடமுண்டு.

—காந்திஜி

# காந்திஜியின் வாழ்வில் ஒருநாள்...

மகாத்மா காந்திஜி எளிமையானவர். சட்டை அணிவதில்லை. அது கண்டு ஒரு குழந்தை ஒரு நாள் இந்த அஹிம்சாமூர்த்தியிடம்,

'பாபுஜி நீங்கள் ஏன் சட்டை அணியவில்லை? நான் என் தாயாரிடம் கேட்டு உங்களுக்கு ஒரு சட்டை தைத்துக் கொண்டு வந்து தரட்டுமா? என் அம்மா தைத்துத் தந்த சட்டையை நீங்கள் அணிவீர்களா?' என்று கேட்டது.

அதற்கு அந்த மகான் தன் வாயால் புன்னகை ஒன்றைச் சிந்தி 'ஓ நிச்சயமாக, ஆனுல் ஒரு நிபந்தனை. நான் அணிவதற்கு மட்டும் ஒரு சட்டை தந்தால் போதுமா?' என்ருர்.

கள்ளங்கபடமற்ற அச்சிறு பாலகன் மறுபடி 'அப்படியானுல் உங்களுக்கு எவ்வளவு சட்டை வேண்டும்? இரண்டு போதுமா?' என வாஞ்சையுடன் கேட்டது.

அதற்கு அந்த மகாத்மா கனிவுடன் குழந்தையை நோக்கி,

'எனக்கா? 40 கோடி சகோதரர்கள் இருக்கிறார்களே அத்தனை பேருக்கும் சட்டை கிடைத்தால் நானும் மகிழ்வுடன் சட்டை போட்டுக் கொள்வேன்' என்ருர்.

தகவல்: தி. தவபாலன்

## தோட்டம் பார் தம்பி!

தோட்டம் பார்க்கப் போகலாம்
துரிதமாய் நீ வா தம்பி
வாட்டம் போக்கும் காய்கறி
வழங்கும் தோட்டம் பார்தம்பி.

பூத்த கொடிப் பூசனி
போஞ்சி பயறு தக்காளி
நேர்த்தியாய் வெங் காயம்நல்
நீண்ட புடோல் பார்தம்பி

வெண்டி கீரை கத்தரி
வேண்டும் அளவு கொள்ளலாம்
உண்டிக் கேற்ற பாகற்காய்
உறைப்பு மிளகாய் பார்தம்பி

உயர்ந்த பலா வாழைமா
உளம் இனிக்கப் பழம்தரும்
வளர்ந்த தோடை எலுமிச்சை
வாட்டம் நீங்கப் பயன்தரும்

பாடுபட்டுத் தினந் தினம்
பார்த்து நீர்விட் டுரமிட்டு
நாடு போற்றும் தோட்டம் நீ
நன்று ஆக்கி வாழ்தம்பி.

— செ. மகேந்திரன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காக்கா' பிடிக்கத் தெரிந்தவர்கள் தான் 'பேனா' பிடிக்கிறார்கள்

## தென்இந்திய தமிழ் சினிமாவின் இன்றையநிலை

**சென்னையிலிருந்து தி. மேனகன்**



அண்ணாத்துரை

நமது சினிமாக்கள் மூலம் நம்முடைய மக்களுக்குப் பிடித்த நோயைப்பற்றி விளக்கும் கட்டுரையல்ல இது... சினிமாத் தொழிலையே பிடித்துள்ள நோயைப்பற்றிய கட்டுரையே இது.

ஒரு படத்தின் வெற்றிக்கு அதன் டைரக்டரும், கதை வசனகர்த்தாவும்தான் முதல் இரு காரணகர்த்தாக்கள் என்பதையே இத்தனை ஆண்டுகளாகபுரிந்துகொள்ளதசினிமா, இந்திய சினிமா மட்டும்தான் என்றால் அது மிகையில்லை...

ஒருபடத்தில் அதன டைரக்டரும், கதை வசனகர்த்தாவும் திறமையோடும், முழுமூச்சோடும் உழைத்தால் நிச்சயம் அந்தப்படம் வெற்றி பெற்றே தீரும்.

ஆனால் இங்கே ஒரு கதை வசனக்கர்த்தா என்பவர் ஒரு படத்தயாரிப்பின் போது கடைசியாகத் தேடப்படும் நபராக இருக்கிறார். அவர் ஒன்றும் ஒரு படத்திற்கு அவசியமானவரல்ல என்ற அலட்சியத்தோடு பார்க்கப்படுபவராக இருக்கிறார். இதன் காரணமாக இங்கே கதை வசனக்கர்த்தா என்று சொல்லிக் கொண்டு உலாவுபவர்கள் எல்லாம் 'காக்காய்' பிடிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்களே தவிர, 'பேனா' பிடிக்கத் தெரிந்தவர்களாக இருப்பதில்லை.

தமிழ்த்திரை உலகைப் பொறுத்தவரையில் அந்தக் காலத்தில் கண்ணகி, அம்பிகாபதி, சிவகவி போன்ற படங்களுக்குக் கதை, வசனகர்த்தாவாகப் பணியாற்றி ஒரு இளங்கோவனின் ஆற்றல் இன்றளவும் வியக்கத்தக்கதாய் இருக்கிறது. கல்லூரிப் பாடங்களாக அந்தப் பாடங்களின் உரையாடல்களை வைக்கலாம்.

அறிஞர் அண்ணா எழுதிய 'வேலைக்காரி' படத்தின் கதை வசனம் இன்றளவும் ஒரு சாதனைக்கல்லாக நிலைத்து நிற்கிறது.

கலைஞர் கருணாநிதி எழுதிய அபிமன்யூ, ராஜகுமாரி, மருதநாட்டு இளவரசி, மந்திரிமாகுரி, பராசக்தி, மணமகள், மனோகரா போன்ற படங்களின் உரையாடல்கள் திரைவசனங்களுக்கு இலக்கிய அந்தஸ்தையே அளித்தவையாகும்.

> தமிழ் சினிமாவில் கதை வசனம் எழுதுபவர்களின் நிலைபற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

சமூகப் படங்களில் புதுமையான சிந்தனையோடு உரையாடல்களை அமைத்துப் புகழ் பெற்ற ஸ்ரீதரும், கே. எஸ். கோபாலகிருஷ்ணனும் சாதித்த சாதனைகள் எண்ணி எண்ணி மகிழத்தக்கவை!

ஐம்பது ஆண்டுகளைக்கடந்துவிட்ட தமிழ்த் திரை உலகின் மொத்தத் தயாரிப்புப் படங்கள் பத்தாயிரத்தைத் தாண்டியிருக்கலாம். ஆனால் இத்தனை படங்கள் மூலம் மனதிலே நிற்கும் வசனக்கர்த்தாக்கள் எத்தனை போ?

பத்தாயிரம் படங்கள் வந்திருந்தால் அவற்றில் ஒன்பதாயிரத்து ஐந்நூறு படங்கள் தோல்விப் படங்களாக இருக்கும். அந்த ஒன்பதாயிரத்து ஐந்நூறிலும் கதை வசனக்கர்த்தா என்பவர் பேனா பிடிக்காமல் காக்கா பிடித்து வந்தவராகவே இருப்பார்.

ஒரு படத்தின் வெற்றி ஒவ்வொரு காட்சி... ஏன் ஒவ்வொரு 'பிரேமிலும்' உள்ள உயிரோட்டத்தில்தான் இருக்கிறது. அந்த உயிரோட்டத்தை இயக்குனரின் யுக்தியாலும், கதை வசனக்கர்த்தாவின் சிறந்த புத்தியாலும் சிறந்த 'ட்ரீட்மெண்டால்' தான் கொண்டு வர முடியும் என்பது இந்த ஐம்பதாண்டு அனுபவத்திலும் தமிழ்நாட்டு சினிமா இன்டஸ்ட்ரியைச் சேர்ந்தவர்களும் புரிந்ததில்லை. இந்திய சினிமா இண்டஸ்ட்ரியைச் சேர்ந்தவர்களும் புரிந்ததில்லை.

இவர்கள் எல்லாம் ஒரு படத்தை உருவாக்க முனை



பாக்கியராஜ்

யும்போதே, ஐந்து சண்டை ஆறு பாடல்கள், இரண்டு கனவுக் காட்சிகள் இருந்தால் போதும்என்றுஒரு கதையைத் தீர்மானிக்கும் முன்பே படத்தில் வரும் காட்சிகளைத் தீர்மானித்துக் கொண்டு பூஜை போடுபவர்களாகவே இருக்கிறார்கள்.

இவர்களுடைய வெற்றிக் கணக்கெல்லாம், அந்தச் சமயத்தில் எந்த நட்சத்திரம் நடித்த படம் ஓடியிருக்கிறது. அதில் எது எத்தனை பாட்டு இருந்தன, சண்டை இருந்தது என்பதை சிந்திப்பதோடு முடங்கி விடுகிறது.

இதனால்தான் ஒரு பட வெற்றிக்கு முதல் காரணமாக இல்லாத நட்சத்திரங்கள் இந்திய சினிமாக்களில் ஆதிக்கம் செலுத்த முடிகிறது.

என்ன காரணங்களுக்காகவோ ஒருபடம் ஓடியிருக்க, அந்த வெற்றியின் காரணம் முழுவதும் அதில் நடித்த ஹீரோவைச் சேர்ந்து விடுகிறது. இந்திய சினிமாக்களில் அதனால்தான் ஒரு நட்சத்திரம் திறமையின் காரணமாக அல்லாமல், ஒரு படத்தின் வெற்றியின் காரணமாக சுப்பர் ஸ்டார் ஆகிவிட முடிகிறது.

இத்தனை ஆண்டுகள் ஆகின்றன, இன்னும் கூட இங்கே டைரக்டர் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு ஒருவன் சொல்லும் கதையில் விஷயம் இருக்கிறதா? இல்லையா? என்பதைப் புரியக் கூடிய அடிப்படை ஞானம் கூட இன்னும் ஏற்படவில்லை. இவர்களுக்குக் கதையைக் கேட்டுப் புரியக்கூடத் தெரியாது என்பதற்கு ஒரு சிறு உதாரணம்...

தமிழ்த்திரை உலகில் ஒரு கதையை அருமையான ட்ரீட்மெண்ட் மூலம் மிக ரசிக்கத்தக்க படமாக்கித் தருபவர்கள் கே. பாக்கியராஜ் குறிப்பிடத்தக்கவர். இத்தனை திறமை இவரிடம் இருந்தும், இவர் தமிழ்த் திரைப்பட உலகில் நுழைய முயற்சி எடுத்துக் கொண்ட காலகட்டத்தில், சினிமா வட்டாரத்தைச்



கருணாநிதி

சேர்ந்த பிரபலங்களிடம் தனது கதைகளைச் சொல்லிப் பார்த்திருக்கிறார். சில நிமிடம் கூட அந்தக் கதைகளை உட்கார்ந்து கேட்காமல், "இது ஒரு கதையா, குப்பை..... குப்பை" என்று பாக்கியராஜை அவர்கள் விரட்டி அடித்திருக்கிறார்கள்.

ஆனால் இன்று அவர் எப்படியோ மேலே வந்து விட்ட பிறகு "அடடா... பாக்கியராஜ் என்ன மாதிரிக் கதை சொல்லுவார் தெரியுமா?" என்று அதே பிரபலங்கள் முந்திக்கொண்டு கதை விடுகின்றன.

ஆக, ஒரு கதையை உட்கார்ந்து கேட்டு இது திரைப்பட ட்ரீட்மெண்டுக்குச் சரியாக வருமா வராதா? என்ற முடிவெடுக்ககூடிய யோக்கியதை இல்லாதவர்கள்தான் ஓட்டல் அறைகளில் தனக்குக் கதவைத் திறந்து மூடுபவர்களைக் கதை வசனக்கர்த்தாவாகப் போட்டுப் படம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ★

# சென்னை தமிழ்த்திரை வானில் யாழ்ப்பாணத்துக் குழந்தை நட்சத்திரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏழுவயது நடிகர் மாஸ்டர் தின பந்தன், தென் இந்தியப் படத்தில் நடிக்கிறான்:

எம். எஸ். சுகுவின் 'ஊரே உனக்காக' படத்தின் மூலம் அறிமுகமாகும் மாஸ்டர் தின பந்தன்,பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் திரு. வி. ரி. சிவலிங்கத்தின் ஒரே புதல்வன்.

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் 2 ஆம் வருடத்தில் படிக்கும் தினபந்தன், படத்தில் குறும்புக்காரப் பாத்திரத்தில் நடிக்கிறான்.



மாஸ்டர் தின பந்தன்

சஞ்சீவிக்கு அளித்த பேட்டி வருமாறு;

கேள்வி: படங்களில் நடிப்பதற்கு உங்களுக்கு எப்படி ஆசை வந்தது?

தினபந்தன்: என் அம்மப்பா ஒரு நாடக நடிகர். அவரைப் போல நடிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். என் ஆசை சென்னையில் நிறைவேறியது.

கேள்வி: நடிப்பினால் படிப்பு பாதிக்கப்படவில்லையா?

தீனு: ஒரு மணித்தியாலம் நடிப்பு, — அதை ஈடு செய்ய இரண்டு மணித்தியாலங்கள் படிப்பு-

கேள்வி: படத்தில் என்ன பாத்திரத்தில் நடிக்கிறீர்கள்?

தீனு: நான் பாடசாலையில் படிக்கும் குழப்படிக்கார மாணவனாக நடிக்கின்றேன்.

கேள்வி: படத்தில் உங்கள் காட்சி எவ்வளவு நேரம் வருகின்றது.

தீனு: இதுவரை இரண்டு மணித்தியால நடிப்பு படமாக்கப்பட்டுள்ளது.

கேள்வி: உங்களைப் போன்ற குழந்தை நட்சத்திரங்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறீர்களா?

தீனு. நான் எவரையும் சந்திக்கவில்லை. சாலினி அக்கா அங்கில்லை. வெளிநாடு போயிட்டார்.

கேள்வி: நீங்கள் நடிக்கும் படத்தின் சூட்டிங் முழுவதும் முடிந்து விட்டதா?

தீனு: இல்லை. பாடசாலைக்குப் போகவேண்டும் என்பதில் இங்கு வந்தோம். சூட்டிங் நடக்கும்போது அழைப்பார்கள். அப்போது போவேன்.

கேள்வி: வேறு படங்களில் நடிக்க வாய்ப்பு வந்திருக்கிறதா?

தீனு: சான்ஸ் வந்தால் நடிப்பேன்.

கேள்வி: ஆங்கிலப்படங்கள் பிடிக்குமா?

தீனு:ஓ!தமிழ்ப் படங்களை விட ஆங்கிலப் படங்கள் அதிகம் பார்ப்பேன்.

மிகவும் நகைச்சுவையாகவும் துடிப்புடனும் தீனுபந்து பேட்டியின்போது பதிலளித்தார்.

பேட்டி:

**அகில்ராஜ்**

தீனுவின் தந்தை திரு. வி. ரி. சிவலிங்கம்:

சினிமாவில் தீனுவுக்கு எதிர்காலம் அல்லது நாட்டம் இருக்கும் என்றால் அதைத் தடுப்பது தவறு என்றுதான் கருதவேண்டும்.

வேறு படங்களில் நடிக்கச் சந்தர்ப்பம் வந்தால் நடிக்க அனுமதிப்பேன்—" என்று சொன்னார். (எ-10

## துணுக்கு

லட்சுமி கணபதி கம்பைன்ஸ் மிகுந்த பொருட் செலவில் தயாரிக்கும் "மீனாட்சி திருவிளையாடல்" என்ற புராணப் படத்துக்காக சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் படமான காட்சிகளில் ஒன்றில் சிவனாக விஜயகாந்த், ஜோடியாக ராதா நடித்தனர்.

★ ★ ★

கலைவாணன் கண்ணதாசன் டைரக்ட் செய்யும் 'ஆறு முடிச்சுப்படத்தில் கார்த்திக்- ஷோபனா ஜோடியாக நடிக்கின்றனர்.

**வெள்ளித் திரையில்**


# கையிலே கமரா ஏந்தி

## காரிகை இவள் கண் சிமிட்டுவது ஏன்...?



கமராவைக் கையில் பிடித்து எவரும் படம் எடுக்கலாம்...

.... ஆனால் கலையம்சத்துடன் தரமான படம் பிடிப்பது என்பது ஒரு கலை. எல்லோராலும் அது முடியாது.

அது போலவே...

படச்சுருள்களைக் கழுவுதல், பிரதி செய்தல் என்பனவற்றையும் எல்லோராலும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும், தரமாகவும் செய்து தர முடியாது.

- உயர்ந்த தொழில் நுட்பத்துடனும், நுணுக்கத்துடனும் படச்சுருள்களை நவீன கம்பியூட்டர் மூலம், நேரில் பார்ப்பது போன்று மின்னும் தெளிவான கலர் போட்டோ பிரதிகளாக்கித் தருவதற்கும்-
- படச்சுருள்களை முற்றிலும் இலவசமாகக் கழுவுவதற்கும்-
- **ஒரு பிரதிக்கு ரூபா 4-75 மட்டுமே செலுத்தி -**
- மூன்று முதல் ஐந்து நாட்களில் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம்:

**'ஷப்ரு'** 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா நாட்களிலும் படச்சுருள்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலகை ஆட்டிப்படைக்கும் போதைவஸ்துப் பாவனை

உலகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பலவிதம் நாட்டுக்கு நாடு வேறுபடும். ஒரு நாட்டில் இருக்கும் பிரச்சினை இன்னொரு நாட்டில் இருப்பதில்லை. ஆனால் உலகம் தழுவிய அளவில் ஏககாலத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு பிரச்சினை இந்தப் போதைப் பொருள் பாவனை.

போதைப்பொருள் பாவனை என்றால் என்ன? சுருக்கமாகச் சொன்னால் ஒருவனது மனநிலை (Mood) உணர்வாற்றல் (Perception), சுயநினைவு (Conciousness) இவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தவென முறைதவறிப் பாவிக்கப்படும் (Abuses) இரசாயனப் பதார்த்தங்களாகும்.

இந்தப் பிரிவிற்குள் வரும் சிலவகைப் பதார்த்தங்கள் நோய் நிவாரணியாக மேலைத்தேய, கீழைத்தேய வைத்திய முறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பதார்த்தங்கள் வைத்தியர்களால் குறிக்கப்படும் அளவுகளில் எடுக்கப்படும்போது அவை நோய் நிவாரணியாகத்தொழிற்படும். அஃதன்றி முறை தவறிப் பாவிக்கப்படுகையில் போதைப் பொருள்களாகத் தொழிற்படும்.

போதைப் பொருள் பாவிப்பவர்கள் நாளடைவில் (ஒரு முறையிலும்கூட) தொடர்ந்து பாவிக்க உந்தப்படுகிறார்கள். அதாவது அவர்கள் போதைப் பொருளுக்கு பழக்கப்படுகிறார்கள் (Addicted) ஒருவர் தனக்கும் தனது சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய விதத்தில் போதைப்பொருள் களைத் தொடர்ந்த முறையிலே (Chronic) அல்லது இடைவிட்டோ (Periodic) பாவிக்கும்போது அவர் போதைப் பொருளுக்குப் பழக்கப்பட்டுவிட்டார் எனக் கூறுகின்றோம்.

எமது நாட்டில் பாவிக்கப்படும் முக்கிய போதைப் பொருள்களாக ஹெரோயின் (Heroine). கஞ்சா (மரிஜுவானா) (Ganja), ஒப்பியம் (அபின் (Opium) மற்றும் தூக்கமாத்திரைகளைக் (Sedatives) குறிப்பிடலாம்.

### எதற்காக இவை பாவிக்கப்படுகின்றன?

மனிதனின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. செயற்பாட்டின்காரணங்களை, அதன் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளும் பொழுது மனிதனால் அச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடிகிறது. ஆக, போதைப் பொருள் பாவனை என்ற செயற்பாட்டைக் கட்டுப்படுத்த அதன் காரணங்களை அறிந்து கொள்ளல் மிக அவசியமாகிறது. இந்தக் காரணங்கள்,

1. தனியனும் அவன் உளநிலையும்.
2. குடும்பச்சூழல்.
3. சமூகம் என்ற மூன்று காரணிகளின் இடைத்தாக்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

### தனியனும் அவன் உளநிலையும்.

ஒருவனின் உளநிலை முக்கியமாக அவன் வளர்ச்சிப்படியின் எந்தப் பருவத்தில் இருக்கிறான் என்பதில் தங்கியுள்ளது. போதைப் பொருள் பாவிப்பவர்கள் பெரும்பாலானவர்கள் வாலிபப்பருவத்திலும் அதனைச் சற்றுக் கடந்த நிலையிலும் (Adolescent & Early Adults 16 — 30 வயது) உள்ளவர்களே. இந்தப் பருவத்தில் உள்ளவர்களைப் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடத்தூண்டும் உளநிலைகள் யாவை? இதுதான் எமது பிரச்சினை.

வாலிபப் பருவத்தில் இருப்பவர்கள் வீரதீரச் செயல்களை விரும்புபவர்கள். புதிய அனுபவங்களை, வித்தியாசமான வழிமுறைகளைக்கண்டறிவதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்கள்.

ஆகவே இவர்கள் போதைப் பொருள்களின் உடனடி விளைவுகள் கேள்விப்பட்டு (நண்பர்கள் வாயிலாக) அதன்பால் கவரப்பட்டு அந்த அனுபவத்தைப் பெற உந்தப்படுகிறார்கள். இந்த உந்தலை எதிர்க்கும் மனோவலிமை இவர்களுக்குக் குறைவு.

அடுத்ததாக, இந்தப் பருவத்தில் இருப்பவர்கள் சாராது வாழ(Independence) அல்லது இயன்ற அளவு குடும்பத்தினின்று விலகி வாழ வேண்டும் என்ற உளநிலையிலிருப்பவர்கள்.

இதன் காரணமாக இவர்கள் தங்களது கணிப்புகள் (Valves), கருத்துக்கள் (Attitudes) என்பவற்றைத் தங்களது வயது சார்ந்த குழுவினரிடமிருந்தே(Peer group) பெறுகிறார்கள். இந்தக் கருத்துக்கள், கணிப்புகள் சமூகம் தொடர்பானவையாகவோ, நடத்தைகள் தொடர்பானவையாகவோ அல்லது வேறு எந்த விடயம் தொடர்பானவையாகவும் இருக்கலாம்.

ஒரு வாலிபன் தன்னைப் பற்றி அறிந்து கொள்வது அல்லது கணித்துக் கொள்வது தான் சார்ந்திருக்கும் குழுவினரின் கருத்துகளில் இருந்துதான். குடும்பமோ, சமூகமோ எல்லாமே இந்த குழுவினருக்கு அடுத்ததாகத் தான்.

**- கொ. றெ. கொண்சன்டைன் -**

இந்தக் குழுவுடன் தனது உறவை வலுப்படுத்திக் கொள்ள ஒரு வாலிபன் தன்னாலான முயற்சிகளை எல்லாம் செய்வான். இந்தக் குழுவில் இருப்பவர்கள் போதைப் பொருள் பாவித்தால் தானும் பாவிப்பான் அல்லது அவர்களது வற்புறுத்தலுக்காகப் பாவிப்பான். காரணம் அந்தக் குழுவுடன் அன்னியோன்னியமாகப் பழகுவதென்றால் அவனும் அப்படித்தான் இருக்கவேண்டும்.

வாலிபப் பருவம் மிகவும் நெருக்கடிகள் நிறைந்த ஒரு வளர்ச்சிப்பருவம். இவற்றிலிருந்து விடுபட சிலவேளைகளில் போதைப்பொருள்கள் பாவிக்கப்படலாம்.

### குடும்பச் சூழல்

ஒரு குழந்தை வளர்ந்து வாலிபப்பருவத்தை அடையும் போது பெற்றோர்கள் புதிய பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். இந்தக் கட்டத்தில் அநேக பெற்றோர்களே ஒரு நெருக்கடியான உளப் போராட்டத்தில்தான் இருப்பார்கள். (40 — 50 வயதுகளில்) அவர்கள் இந்த நிலையில் தங்களது கடந்தகால குடும்ப வாழ்வையும் எதிர்காலத்தொழில் நிலைகளையும் பற்றி மீள் ஆய்வு செய்கிறார்கள்.

இதேவேளை வாலிபப்பருவத்தை அடைந்துள்ள தங்களது பிள்ளைகளின் நடத்தைகளும் போக்குகளும் என்றுமில்லாதவாறு சிக்கலானதாகவும் விளங்கிக் கொள்ள முடியாதபடியும் அமைவதனால் அவர்களின் குழப்பம் மேலும் அதிகரிக்கிறது. இதனால் புரிந்துணர்வு அற்ற நிலையில் (Misunderstanding) வாக்குவாதங்கள் அதிகரிக்கின்றன. குறிப்பாகத் தந்தை மகனில் குறைகாண்பதில் கரிசனையாக இருப்பார். இது சாதாரண உளவியில் மாற்றங்களை விளங்கிக் கொள்ளத் தவறுவதனால் ஏற்படும் பிரச்சினை.

இதில் இருக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் ஒன்று பெற்றோர் தொடர்பானது நன்னடத்தையையும் (Discipline) கட்டுப்பாட்டையும் (Restriction) சரியான முறையில் விளங்கிக் கொள்ளாமை. அல்லது இரண்டையும் சமமாகக் கருதுவது. அதாவது கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் நன்னடத்தையை உருவாக்க நினைப்பது. மற்றையது வாலிபர்கள் தொடர்பானது. சாராது வாழலின் யதார்த்த பூர்வ பரிமாணத்தை அதாவது அவனது கடமைகளை, சமுதாய எதிர்பார்ப்புகளை விளங்கிக் கொள்ளத் தவறுதல்.

இந்த இரண்டு காரணிகளின் இடைத்தாக்கத்தினால் சிக்கல்கள் உருவாகின்றன. இவற்றில் இருந்து தன்னை மீட்டுக் கொள்ள அல்லது தனது நிலையை உறுதியாக்கிக் கொள்ள (நினைத்து) தனது வயது சார்ந்த குழுவினருடன் (Peer group) தனது பிணைப்பை வலுப்படுத்திக் கொள்கிறான். முழுச் சமுதாயத்திலும் (குடும்பம் உட்பட) அவனை ஒரு தனியனாக ஒரு மனிதனாக ஏற்றுக்கொள்ளும் அமைப்பாக ஒரு வாலிபன் இந்தக் குழுவைக் காண்கிறான். இதனால் அவனுக்கு மனநிறைவு ஏற்படுகிறது. ஒரு அங்கீகாரம் கிடைத்ததாக நினைக்கிறான்.

இங்கே தான் குடும்பத்தின் பங்கு அதிகரிக்கிறது. ஒருவன் வாலிபப் பருவத்தை அடையும்போது குடும்பப் பிணைப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். அவனது செயற்பாடுகளிலும், அவனது விருப்பு வெறுப்புகளிலும் பெற்றோர்கள் அக்கறை காட்டவேண்டும். அவன் பழகும் நண்பர்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். பெற்றோர்களின் செயற்பாடுகள் ஒரு வாலிபன் அவர்களில் நம்பிக்கை வைத்து தனது பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளத் தூண்டவேண்டும். அன்பும், அரவணைப்பும், வழிகாட்டலும் அதிகரிக்கப்படும்போது மற்றைய சக்திகளின் செல்வாக்கு குறைகிறது,

இவை தவிர பிரச்சினைகள், சச்சரவுகள் நிறைந்த குடும்பங்களில் இருந்து வருபவர்களுக்கு போதைப் பொருள்களுக்கு அடிமையாக்கக்கூடிய சாத்தியக் கூறு அதிகம் உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

சில குடும்பங்களில் நித்திரை மாத்திரைகளும் உளநோய்களுக்கான மருந்துவகைகளும் தொடர்ந்து பாவிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட குடும்பச் சூழலில் இருந்து வருபவர்களுக்கும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம்.

### சமூகம்

கடந்த சந்ததிகளில் எல்லாம் வாலிபர்கள் மற்றவர்களுடன் இணைந்து தொழில் துறையில் ஈடுபட்டார்கள். அப்பொழுதெல்லாம் வாழ்க்கை சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களுடன் வாலிபர்கள் கலந்து செயற்பட சந்தர்ப்பம் கொடுத்தது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் வாலிபர்கள் தங்களுக்கென ஒரு பண்பாட்டை, வாழ்முறையைப்பின்பற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்தப் பருவம் கடந்த பின்பு அல்லது சமூகத்திற்கு அவர்கள் தேவைப்படும்போது மீண்டும் சமுதாயத்திற்குக் கொண்டுவரப்படுகின்றார்கள். இதற்கான அடிப்படைக்காரணம் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்களும், பொருளாதார நெருக்கடிகளும் விஞ்ஞான வளர்ச்சியும் சமூகத்திற்கு அதன் அங்கத்தவர்களில் இருந்த கட்டுப்பாட்டை, செல்வாக்கை சிதைத்துள்ளமையே. இப்படிப்பட்ட ஒரு தனிமைப் படுத்தப்பட்ட சூழ்நிலையில் வாழ்வதனால் வாலிபர்களின் கணிப்புகளும், கருத்துகளும் சமுதாயத்திலிருந்து கணிசமான அளவு வேறுபடுகின்றன. இது போதைப்பொருள் பாவனையின் ஒரு முக்கிய காரணி.

இன்றைய சமுதாயத்தில் சமுதாயத்தினதும் விஞ்ஞானத்தினதும் அதீத வளர்ச்சி காரணமாக ஒருவர் அதிக எதிர்பார்ப்புக்களுடன் வாழ நேருகிறது. இந்த எதிர்பார்ப்புகள் தொழில்துறையில் இருக்கலாம்; அல்லது கல்வியல் இருக்கலாம். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும் வேளை தோல்விகளும் அதிகரிக்கின்றன. எதிர்பார்ப்புகள், தோல்விகள் ஏற்படாத இடத்திலும் கூட விஞ்ஞான வளர்ச்சியினதும் அதன் விளைவுகளினதும் தாக்கம் பற்றி புகழ்பெற்ற எதிர்காலவியலாளரான அல்வின் டொபலர் (Alvin toffler) கூறுகிறார். இவரது கருத்துப்படி விஞ்ஞான வளர்ச்சியும் அதன் விளைவுகளும் மனிதனின் இயைபாக்கமடையும் (Adaptiveness) திறனைக் கடந்து விட்டதால் இவை மனித வளர்ச்சியில் ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவற்றின் காரணமாக அதாவது தோல்விகள் இயைபாக்காமின்மை என்பவற்றைக் கடப்பதற்கு அல்லது இவற்றின் தாக்கங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஒருவர் போதைப் பொருள்களை நாடலாம். ★

(மிகுதி அடுத்தவாரம்)




## ஆண்டவனின் கருணை வேண்டி....

1, மோட்சத்திலே நல்ல
ஆட்சிசெய்யும் வல்ல
ஆண்டவனே எனது
கண்ணிரண்டும் உனது
மோட்சமாம்நல் விண்ணை
ஏறெடுத்து உன்னை
பார்க்கின்றன நன்கு
உதவிசெய்வாய் என்று

2, வேலைக்காரன் ஒருவன்
தனது எஜ மானன்
தனக்குஆன வேலை
இடுகின்ற அவ் வேளை
எப்போஎப்போ என்று
பார்த்திருத்தல் போன்று
வேலைக்காரி ஒருத்தி
தனதுஎஜ மாட்டி
சொல்லும்வேலைக் காக
காத்திருத்தல் போல
நாங்களெல்லாம் இன்று
இறைவனான எமது
ஆண்டவனின் கருணை
ஆதரவு இவற்றை
ஆசியோடு பெறவே
வாஞ்சிக்கிறோம் நிதமே

3,4 பெரியபணக் காரர்
அகந்தைச் செருக் காளர்
எம்மைப்பரி காசம்
செய்வர்படு மோசம்
அத்துடனே நிந்தை
செய்துஎங்கள் சிந்தை
முற்றிலுமாய் நிரப்பி
வைக்கிறார்கள் குழப்பி
இதனைப் போக்க நீயே
அன்றிவேறு யாரே
ஆகவேஉன் இரக்கம்
தந்தெமக்கு இரங்கும்
ஆண்டவனே இரங்கும்
கருணைதந்து இரங்கும்

வேதாகம சங்கீதம் – 123

தமிழ் வடிவம்:நவாலியூர் சி.என் செல்லத்துரை

# உடற்பயிற்சி, உணவு முறையால் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம்

உலகின் மொத்த சனத்தொகையில் 2 சதவீதத்தினர் நீரிழிவுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நோயாளர்களுள் 90சதவீதத்தினர் 40வயதைத் தாண்டியவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்நோய் பரம்பரை காரணமாகவே பலருக்கு ஏற்படுகின்றது. பெற்றோரில் யாரேனும் ஒருவருக்கு இந்நோய் இருந்தால் 50 சதவீதம் குழந்தைகளைப்பாதிக்கும் சாத்தியக் கூறுகள் உண்டு.

இருவருமே பாதிக்கப்பட்டிருப்பின் பிள்ளைகள் பாதிக்கப்படும் சாத்தியக்கூறுகள் இன்னும் அதிகமாகும். பெற்றோர்களில் யாருக்குமே இந்நோய் இல்லாவிட்டாலும் கூட சில சமயங்களில் பிள்ளைகளில் பாதிக்கப்படக்கூடும்.

இந்நோயினால் பெண்கள் ஆண்களிலும் பார்க்கக் கூடிய எண்ணிக்கையில் பாதிக்கப்படுகின்றனர்.

நீரிழிவு நோய் ஏற்படுவதற்குச் சில பிற காரணிகளும் காரணமாயிருக்கின்றன. அதிக உடல் நிறை, உடற்பயிற்சி இல்லாமை, மாப்பொருள், வெல்லம் கொண்ட உணவுகளை அதிகம் உண்ணல், சில தொற்றுநோய்கள், மனக்கஷ்டம், புகைப்பிடித்தல், மது அருந்துதல், அடிக்கடி கர்ப்பம் தரித்தல் என்பன நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றன.

இவற்றைத் தவிர்ப்பதன் மூலம் நோய் ஏற்படாமல் தடுக்கலாம். அல்லது நோய் ஏற்படுவதைத் தள்ளிப்போடலாம்.

**- சிவன்சுதன் -**

நீரிழிவு நோய் ஆரம்பத்திலேயே கண்டறியப்படின் தகுந்த உணவுமுறையாலும் அளவான உடற்பயிற்சியினாலும் அதைக் கட்டுப்படுத்த முடியும். இந்நோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியாதாயினும் பூரணமாகக் கட்டுப்படுத்தி சாதாரண வாழ்க்கை வாழ முடியும்.

நோயைக் கட்டுப்படுத்தாது கவனியாது விடும்பட்சத்தில் தோல் புண்கள், கண் சம்பந்தமான நோய்கள், சிறுநீரகக் கோளாறு, கோமா போன்ற நிலைகள் தோன்றக் கூடும்.

சில குழந்தைகள் பிறக்கும் போதே நீரிழிவு நோயுடன் பிறக்கின்றன. இது பிறவிக் குறைபாடு காரணமாக ஏற்படுகின்றது. இலங்கையில் இவ்வாறான நோய் மிகமிக அரிதாகவே ஏற்படுகின்றது.

நீரிழிவு நோய் உடலில் இன்சுலின் எனப்படும் ஒரு பதார்த்தம் குறைவடைவதாலேயே ஏற்படுகின்றது.

ஒருவகைத் தொற்று நோய் உடலிலுள்ள இன்சுலின் சுரக்கும் கலங்களை அழித்துவிடுகின்றது. இதனாலும் நீரிழிவு நோய் ஏற்படலாம். ஆயினும் இவ்வாறான நிகழ்வுகள் இலங்கையில் மிகக் குறைவாகும்.

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களில் கணிசமான தொகையினர் தமக்கு நோய் இருப்பதுபற்றித் தெரியாதிருக்கின்றனர். வேறு ஏதாவது காரணங்களுக்காக இரத்தப் பரிசோதனையோ சிறுநீர்ப் பரிசோதனையோ செய்யப்படும் போது தான் இவர்களின் நோய் கண்டறியப்படுகின்றது.

பெற்றோருக்கு இந்நோய் காணப்படுமாயின் அவர்கள் 40 வயதிற்குப்பின் ஒவ்வொரு மாதமும் சிறுநீர்ப்பரிசோதனையும் இரத்தப் பரிசோதனையும் செய்து பார்ப்பது நல்லது.

சாதாரணமாகக் குருதியிலுள்ள குளுக்கோசின் செறிவு 80-100 m.g / 100 m.l ஆகும். நீரிழிவு நோயாளர்களில் இதனளவு 180 m.g / 100 m.l ஐத் தாண்டி விடுகின்றது.


## வைத்திய சஞ்சீவி

ஆரம்ப நிலையிலுள்ள நோயாளர்கள் தமது உணவில் மாப்பொருள், வெல்லம் என்பனவற்றின் அளவைக் குறைப்பதன் மூலமும் இலைவகைகள் (குறிப்பாக சிறுகுறிஞ்சா); பழவகைகள் போன்றவற்றின் அளவைக் கூட்டுவதன் மூலமும் குருதி குளுக்கோசின் செறிவைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும்.

பாவற்காயும்,அவரைக்காயும் குருதி குளுக்கோசின் உயர்வைக் கட்டுப்படுத்துவதில் பெரிதும் உதவுகின்றது. உணவின் மூலம் நோயைக் கட்டுப்படுத்த முடியாவிடின் மாத்திரைகளை உபயோகித்து அதனைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும்.

மிகத் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு [Insulin Dependent Diabetes] இன்சுலினை ஊசிமூலம் ஏற்றுவதன் மூலம் மட்டுமே குருதி குளுக்கோசின் செறிவைக் கட்டுப்படுத்த முடியும். ★

## சொற்சிலம்பம்



போட்டி இல 88

சொற்சிலம்பம் இல: 88
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

இங்கே வெட்டுக

முடிவு திகதி: 5-10-1988

### இடமிருந்து வலம்

1. மெல்லிய காற்று, 5. குளிர், 7. இலையின் மறுபெயர், 8. 'கு' சேர்ந்தால் காரம், 9. நில் (குழம்பியுள்ளது), 10. 'பி' சேர்ந்தால் இளையவன். ஆனால் குழம்பியுள்ளான், 11. சுழல்வது, 13. ஒத்தாசை மாறியுள்ளது, 15. பாம்பு இதில் மயங்கும். ஆனால் குழம்பியுள்ளது, 18. வீமனின் எதிரி, 19. பழுத்தால் அதிக ருசி, 21. இது செய்யக்கூடாது. 22. இது பாம்பைக் சொல்லும், 23. பொருள் 12 இதில்.

### மேலிருந்து கீழ்

1. நிலங்களில் ஒன்று, 2. அரிசியிலிருந்து நீக்கப்படுவது. 3. இது இல்லாமல் கல்யாணமா? (குழம்பியுள்ளது), 4. ஒருமை, 6. மானுடன் தலைகீழாக நிற்கிறான், 8. வீட்டு வாசலில் இருப்பது, 11. நடனத்தின் ஒரு பிரிவு, 12. அரிசியை இவ்வாறு சேர்ப்பர், 14. உதவுபவன், 16. பானை வனைபவன், 17. நிறுத்து (தலைகீழ்), 20. கிளி இப்படிக் கத்தும் (தலைகீழ்) 21. கிணற்றில் இருப்பது.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றும் பரிசு: | 25 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த எஜமானனுன சனிபகவான் பயபக்தி மிக்க ஊழியனுமாவார்

கன்னிமாதமெனப்படும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிவாரங்கள் சனீஸ்வரனுக்குரிய விரதமாகும். மாதந்தோறுமுள்ள சனிவாரங்களிலும் பார்க்க 'புரட்டாதி மாதச் சனிவாரங்கள்' மிகவும் விசேடமாகும்.

ஜாதகத்திலே இவர் அமையும் இடத்தைப் பொறுத்து 'பலன் கூடவும் குறைபவும் வரும்' என்பதால் சனிபகவான் அமையும் இடத்தைப் பொறுத்து மக்களுக்கு நன்மை, தீமையான பலன் ஏற்படுகின்றது.

கொடுப்பவனும் சனீஸ்வரனே! கெடுப்பவனும் அவரேதான்!

முற்பிறவியிலே செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப நாம் இப்போது பிறந்திருக்கின்றோம். நன்மைகள் பல செய்திருந்தால் நல்வாழ்வைப் பெறுவோம் தீமைகள் செய்திருந்தால் அதன பிரதிபலனை சனீஸ்வரனே கெட்ட இடத்தில் அமர்ந்து துன்புறுத்துவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை.

சனிபகவான் மகர கும்ப இராசிகளைத் தனது வீடுகளாகவும் துலாராசியை உச்ச வீடாகவும் கொண்டவர். பூசம், அனுசம், உத்திரட்டாதி என்பன சனியின் நட்சத்திரங்களாகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சனீஸ்வரனையும் கிருஷ்ணபகவானையும் தவருது வணங்க வேண்டும்.

கிரகங்களில் புதன், சுக்கிரன் இருவரையும் நண்பர்களாகவும் செவ்வாய், சூரியன், சந்திரன் ஆகியோரை விரோதிகளாகவும் உடையவர். சனிபகவான் தமது 3, 10 ஆம் பார்வைகளால் கசப்பான தீயசெயல்களைத் துணிந்து செய்வார். ஆனுல் வக்கிரியாகும்போது பாவச் செயல்களை மிதமாகவே செய்வார்.

ஜாதகத்தில் சனி மகர, கும்ப, துலா ராசிகளில் அமர்ந்திருந்தால் (1, 2, 4, 7, 10 ஆம் வீடுகள்) அவரை நாம் 'சனி ஆதிக்கர்' என்று சொல்லலாம்.

சனீஸ்வரன் ஒருவரை எந்த அளவுக்கு உயர்வான நிலைக்கு இட்டுச் செல்கின்ருரோ அவ்வண்ணமே தாழ்வுநிலைக்கும் தள்ளி விடுகின்ருர். திடீர் ஏற்ற இறக்கத்திற்கும் இவரே காரணர் ஆகிருர். வாரி வழங்குவதிலும் அழிப்பதிலும் அவரை விட நிகர் யாருமே இல்லையெனலாம். வறுமை நிலையில் வாடும் ஒருவர் துறவு பூணத் துணிவதும் சனியின் சோதனைதான்.

**-செல்வி. சற்குணவதி-**

### சனி ஆதிக்கரின் பொது இலட்சணம்

சனிபகவான் சிறந்த எஜமானன் மட்டுமன்றி பயபக்தி மிக்க ஊழியனுமாவார். அவர் உயர்ந்த கொள்கைவாதி. சிறந்த தத்துவஞானியும் கூட. ஆனுல்... இரக்கம், நம்பிக்கை இரண்டுமற்றவர் ஆயினும் மனவுறுதி மிக்க இவர் சமாதானமும் மனிதாபிமானமும் கொண்டவர்.

காலம் தவருத கடமையுணர்வு, நன்நடத்தை, நேர்மை, சாதுரியம் ஆகிய உயர்பண்புகள் இவர்பால் உண்டு. அத்துடன் ஞாபகசக்தி, வாக்குச்சக்தி (Intutive Power) நடுநிலை நியாய ஆதிக்கம் என்பன சிறந்து காணும்.

சனி ஆதிக்கமுள்ள பிள்ளைகள் இளமையில் மந்தமும் சுறுசுறுப்பும் அற்றவர்களாகவே காணப்படுவார்கள். சிலரிடம் பயந்த சுபாவமும் சோலைழத்தனமும் திறமையைக் காட்டுவதில் தயக்கம், நாணம் ஆகிய பிற்போக்குக் குணங்கள் காணப்படும். இத்தகையோருக்கு சிறிது தன்னம்பிக்கை, துணிவு இரண்டையும் ஊட்டிவிட்டாலே போதும். சுமது திறமை, விடாமுயற்சி, சாதுரியம் இவற்றின் துணைகொண்டு ஆகவே வந்து விடுவர்.

### தோஷ நிவாரணம்

எனவே சனீஸ்வர தோஷமுடையவர்கள் சனீஸ்வரனை மிகவும் பயபக்தியுடன் வழிபட வேண்டும். இவர்கள் சனிக்கிழமைகளில் எண்ணெய் வைத்து முழுகி சனீஸ்வராலயத்தில் என் எண்ணெய் விளக்கேற்றியும்; எள்ளுச்சாதம் அருந்தியும், நீல மலர்களால் அர்ச்சினை செய்தும் வழிபாடு செய்து கொள்ளலாம்.

எழைகளுக்கு கறுப்புத்துணி எள்ளுச்சாதம், இரும்புப் பொருள்கள் இவற்றைத் தானம் கொடுப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

சனீஸ்வரனின் தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளோர் யாவரும் இம்மந்திரத்தைத் தவருது ஜெபிக்க வேண்டும்

'நீலாஞ்ஜந ஷமாபாஸம்
ரவிபுத்ரம் யமாக்ரசம்
ச்சாய மார்த்தாண்ட
ஸம்பூதம் தம் நமாமி ஸ
நைஸ்சரம்'

(காலையில் மாலையில் இவற்றைக் கடவுள் வழிபாட்டுடன் ஜெபிக்கவும்)

அத்துடன் பின்வருவனவற்றையும் கடைப்பிடிக்கவேண்டும்.

1. காலையில் சிவப்பு நிறப் புஷ்பம் போட்டு சூரியனை வழிபட வேண்டும்.
2. அறுகம் புல்லால் அர்ச்சித்து விக்கினேஸ்வரப் பெருமானை வழிபட்டுவர விக்கினங்கள் நீங்கி நல்வாக்கும் செல்வாக்கும் பெறலாம்.
3. துளசி இலையால் மகாவிஷ்ணுவை வழிபட்டு அவரது அஷ்டோத்தர நாமங்களை ஜெபிக்க வேண்டும்.
4. சனிக்கிழமைகளில் விரதமிருந்து காகத்திற்கு சோறு வைத்துவிட்டுச் சாப்பிடலாம். சனீஸ்வரனுக்கு எள் எண்ணெய் எரிக்கலாம். எள் அன்னம் வைத்து அர்ச்சனை செய்த பின் அவற்றை எடுத்து காகத்திற்குக் கொடுக்கலாம்.

இறுதியாக ஆஞ்சநேயரை வழிபடவும். துன்பம்யாவும் நீங்கி நல்லருள் கிடைக்கும். சனீஸ்வரனின் அருட்பார்வையும் கடாட்சமும் மேலோங்கும். ★

# வாய்ச் சொல்லில் வீரரடி

அந்த மேடை ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபம் வர்ணக் குஞ்சங்களால் எழிலுற சோடிக்கப்பட்டிருந்தது. மண்டபத்தில் போடப்பட்டிருந்த கதிரைகளில் ஐநூறுபேர்வரை அமர்ந்திருந்தனர்.

ஒன்றில் ரூபன் அலுப்புடன் அமர்ந்திருந்தான். கையில் இருந்த நிகழ்ச்சி நிரல் மட்டையை நோக்கினுன். அதில் 'சேவை நலம் பாராட்டு விழாவும் - பிரியாவிடையும்' எனும் தலைப்பில் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் அரச அதிகாரி தர்மலிங்கத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்ட விழாவைப்பற்றி இருந்தது.

ரூபன் மேடையில் கம்பீரமாக நடுநாயகமாக இருந்த தர்மலிங்கத்தாரை நோக்குகிருன், பதவிப்பொலிவோடு அமர்ந்திருந்தார். அவருக்கு அருகில் இருந்தவர் ரூபனின் மாமா.

விழா ஏற்பாட்டாளர்கள் சிலர் தேவையற்ற விதத்தில் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தும் உரத்த குரலில் சத்தமிட்டும் கட்டளைகளைப் பிறப்பித்தும் தர்மலிங்கத்தாரின் கவனத்தைக் கவருவதில் முனைப்பாகவிருந்தனர்.

ரூபன் இப்போது பேச்சைச் செவிமடுத்தான். பேச்சாளர் தம் சிம்மக்குரலில் முழங்கிக் கொண்டிருந்தார்.

'எங்கள் விழாவின் நாயகன் அரச ஊழியர்கட்கே ஏன் அனைத்து மக்கள் சேவையாளருக்குமே முன்னுதாரணமாகத் திகழ்பவர், ஐயா அவர்கள், நேர்மைக்கும் நிர்வாகத் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டு. ஐயாவுக்கு இன்று பாராட்டு விழா. ஏனென்ருல் அவரின் நேர்மை, கடமை, உணர்ச்சி, நேரம் தவருமை மக்களுக்கு சேவையாற்றுவதிலுள்ள பற்று இப்படி அடுக்கிக் கொண்டேபோகலாம். ஐயா மக்களுக்காகவே...ரூபனின் கவனம்திசை மாறியது. சிலமாதங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று மனதில் படமாக ஓடியது......

ஒருநாள்

அது தர்மலிங்கத்தாரின் பணிமனை: நேரம் காலை பத்து மணி. ரூபனின் சைக்கிள் அலுவலக வாயினுள் நுழைகிறது. அலுவலக முன்றலில் நின்ற மரங்கள் பரப்பிய நிழலில் அத்தொகுதி மக்கள் பலர் தத்தமது பிரச்சினைகளுடன் காத்திருந்தனர்.

விவசாயிகள், ஆசிரியர்கள், அரச உதவிப்பணம் பெறும் ஏழைகள், அடையாள அட்டை போன்ற அவஸ்தைகள் கொண்ட இளைஞர், யுவதிகள் என்றவாறு பலர் சோர்வான முகங்களோடு பேசியபடி நின்றனர்.

சிலர் அலுவலக விருந்தையில் படுத்தேவிட்டனர். அவர்கள் நின்றவிதம் உ.அ.அ. என்னும் வரவில்லை என்பதை உறுதிப்படுத்தியது.

சைக்கிளை நிறுத்திவிட்டு கையிலிருந்த படிவத்துடன் அரச அதிகாரியின் முத்திரை குத்துபவரை அணுகினுன். படிவத்தைப் பார்த்தவர் அலட்சியமாக 'ஐயா வந்துதான் பார்க்கவேணும். சில் பண்ணேலாது' என்ருர். ரூபன் வெறுப்புடன் மரத்தடிக்கு வந்தான்: சைக்கிள்பாரில் அமர்ந்தபடி கூடியிருந்த சனங்களை, அவர்களின் பேச்சுக்களைக் கவனித்தான்.

'உந்தாள் இப்போதைக்கு வராது. ஒருநாள் எண்டாலும் நேரத்துக்கு வராரே? சரி இவங்கள்தான் லேற்ருவாருங்கள் எண்டு நாங்களும் பிந்திப்போனுல் நேரம்போட்டுது நாளைக்கு வா என்பாங்கள்.' இது ஒருவர்.

மற்றவர் 'எங்காவது திறப்புவிழா அப்படி இப்படியெண்டு போயிருப்பார். இப்போதெல்லாம் பிந்திவாறதே ஒரு கௌரவமாப் போச்சு' என்ருர். எங்குமே ஐயாவுக்கு அர்ச்சனைகள்.

அருகிலிருந்தவரிடம் நேரத்தை அறிந்தான். மணி 12ஆகிக்கொண்டிருந்தது. அவனுக்கு 1 மணிக்கு வகுப்பு இருந்தது. அன்று முக்கிய பகுதி. போகாவிட்டால் விளங்காது. போவதாயின் இந்நேரத்திற்குக் கிளம்பி இருக்கவேண்டும்.

ஒருவாருக ஐயாவின் ஸ்கூட்டர் நிதானமாக வந்தது. சோர்ந்துநின்ற மக்களெல்லாம் 'கனடா விசா' கிடைத்ததுபோல் ஆனந்தப்பட்டனர். ஓடிப்போய் வரிசையாக நின்றுகொண்டனர். ரூபனும் இணைந்துகொண்டான்.

அதிகாரி வந்து அன்றைய பத்திரிகையுடன் அமர்ந்துவிட்டார். தேநீர் ஒன்று வரவழைத்தார். வெளியில் நின்ற தம் உறவினர் ஒருவரைக் கூப்பிட்டு குடும்பக் கதை பேச ஆரம்பித்துவிட்டார்.

அவரின் பியோன் வந்து ஐயா இப்பதான் வந்தவர். போய் மரத்துக்கு கீழை நில்லுங்கோ. உங்களைக் கூப்பிடுவார்' என்ருன். பலர் தொங்கிய முகத்துடன் அகன்றனர். ரூபனும் இன்னும் சிலரும் நின்றுவிட்டனர். அவர்கள் நின்றகோலம் உள்ளே நுழைந்துவிடுவார்கள் போலிருந்தது.

அப்போது விருந்தையில் படுத்திருந்த ஒரு மூதாட்டி அதிகாரி வந்ததை அறிந்து அரக்கப்பரக்க வந்தாள். அம்மாதுவின் தோற்றம், கலைந்த தலை முதலியன அங்கு நின்ருேர் மனதில் இரக்கத்தை வரவழைத்தது. காலை சாப்பிடாமலே வந்திருந்தாள் போலும்.

ஈனமான குரலில் தனது சாணிப்பிரச்சினை சம்பந்தமாக ஐயாவை காணவேண்டுமென்று விசாரணை செய்பவரிடம் கூறினுள்.

அவ்வூழியரோ 'இஞ்சை எவ்வளவு பேர் நிற்கினம். உன்ரை சில்லறைப் பிரச்சினையளுக்கெல்லாம் ஐயாவை ஏன் தொந்தரவு செய்யிறியள், போனை, போ, போ என்று விரட்டினுர்.

இப்போது உள்ளே கதிரைகள் அடுக்கும் ஆரவாரம் எழுந்தது. ரூபன் சேவகனிடம் 'எப்ப நாங்கள் உள்ளுக்கை போறது, எவ்வளவு நேரமாய் நிற்கிறது' என்று கேட்டான். 'மீற்றிங் நடக்குது கொஞ்சம் பொறுங்கோ' என்ருன் சேவகன்.

உள்ளே தொகுதியைச் சேர்ந்த கிராம சேவகருடன் ஐயா பேசிக்கொண்டிருந்தார். தேநீரும் வரவழைக்கப்பட்டது. உள்ளே நடந்த அட்டகாசமும் சிரிப்பும் வெளியே நின்ற மக்களை மோதியது.

நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. அருகிலிருந்தவரிடம் அன்றைய தினசரியை வாங்கிப் புரட்டினுன். ஒரு மூலையில் ஒரு விழாவில் தர்மலிங்கத்தார் ஆற்றிய உரை வெளிவந்திருந்தது.

அதில் அவர் அரச ஊழியர் மக்களுடன் எப்படிப் பழக வேண்டும். எப்படி அன்புடன் அவர்தம் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டும். கடமையைக் கண்ணுக்கொள்ள வேண்டும். வாங்கும் சம்பளத்துக்கு கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்று பேசியிருந்தார்.

ரூபன் விரக்தியுடன் சிரித்துக்கொண்டான். அவன் நிற்பதே ஐயா தலைமையிலான அலுவலகத்தில்தானே.

'என்ன அவற்ற கையெழுத்துக்காக எவ்வளவு நேரம் நிற்கிறது. அவர் லேற்ருய் வந்ததும் பத்தாமல், மீற்றிங்கும் வைக்கிருர்'. ரூபனின் ஆத்திரக் குரல் அவையெங்கும் எதிரொலித்தது: மற்றவரும் அவனுக்கு ஆதரவாக கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

உள்ளேயிருந்து ஐயா 'உங்கை என்ன சத்தம் இது என்ன சந்தையோ? டேய் எல்லாரையும் நாளைக்கு வரச் சொல்லு'

ஒருவரும் அசையவில்லை. இப்படி எத்தனைநாள் சொல்லப்பட்டது.

ரூபன் வெளியில்நின்ற பெண்களை சமையல், வீட்டு வேலைகளைவிட்டுவிட்டு வந்திருக்கும் அவர்களை அனுதாபத்துடன் பார்த்தான். ரியூசனுக்கு போகமுடியாத தன்னை எண்ணிக்கொண்டான்.

அவன் சிந்தனையைத் திடீரென்று எழுந்த கைதட்டல் குழப்பியது.

அப்போதுதான் ஐயாவின் பாராட்டுவிழாவில் நிற்பது அவனுக்கு நினைவுவந்தது. ஒருவர் எழுந்து 'ஆகவே தலைவர் அவர்களுக்கு 'மக்கள் தொண்டன்' என்ற பட்டத்தை இம்மேடையிலே வழங்கி இப்பொன்னுடையை போர்த்துகிறேன்.'

என்றதும் ஐயா மிகவும் அடக்கமாக பணிவாக எழுந்து வந்தார் அவர்வந்த தோற்றம் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர் என்பதை காட்ட முயன்றுகொண்டிருந்தது. ஐயா குனிந்து பொன்னுடையை தன் தோளில் ஏற்றுக்கொண்டு மக்களுக்காக ... மண்டபத்தை ஆர்ப்பரிக்கச் செய்கிறது.

**- உரும்பிராய் வே. குமரன் -**

சிறுகதை

# நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த மட்டக்களப்புப் பொது நூலகம்

"பாடை ஏறினும் ஏடது கைவிடேன்" என்ற மகுடவாக்கியத்தைத் தாங்கி மட்டுநகரின் மத்தியில் கம்பீரத்துடன் நிற்கிறது மட்டக்களப்பு பொது நூலகம்.

காலத்தால் மறைந்து - மறந்து கிடந்த யாழின் பெருமையை உலகிற்கு உணர்த்திய பெருமகன் விபுலானந்தரால் பெருமை பெற்றது மட்டக்களப்பு.

பௌர்ணமி நிலவின் பேரொழிலில் தம்மை மறந்து இசைபாடிக் களிக்கும் பாடும் மீன்களால் உலகப் புகழ் பெற்றதும் மட்டக்களப்பு. இன்று இலங்கையின் தலைசிறந்த நூலகங்களில் ஒன்ருய் - வடக்குக் கிழக்கின் மிகப்பெரும் அறிவுக் களஞ்சியமாய் திகழும் மட்டுநகர் பொது நூலகத்தால் பெருமைகொள்கிறது மட்டக்களப்பு

ஒவ்வொரு சரித்திர சாதனைகளின் பின்னும் ஒரு சரித்திர நாயகனின் வரலாறு பின்னிப் பிணைந்திருக்கும். மட்டக்களப்பு போன்ற ஒரு சாதாரண நகரத்தின் மத்தியில் இத்தனை பிரமாண்டமான பொது நூலகம் சேவைப் பணிபுரிவதற்கு தம் வாழ்நாளில் முழு இலட்சியமே நூலக சேவைதான் என அல்லும்பகலும் உழைத்த பெருமகன் திரு. ஜி. என். இரத்னே காரணமாகும்.

### தொன்மையான நூலகம்

மட்டக்களப்பு பொது நூலகத்தின் வரலாறு மிகவும் தொன்மையானது. 1855 ஆம் ஆண்டில் சந்தாதாரர் நூலகமாக ஐரோப்பிய கனவான்களாலும், மட்டக்களப்பு மாவட்ட உயர் அதிகாரிகளாலும் ஆரம்பிக்கப்பட்ட நூலகம் சாதாரண பொதுமக்களுக்கு எட்டாத உயரத்தில் இருந்தது. மாதாந்தம் அங்கத்தவர்கள் சந்தா செலுத்தி வந்தனர். மாலை வேளைகளில் அங்கத்தவர்களுக்காக மட்டும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

நாடு சுதந்திரம் பெற்றதும் பொதுமக்கள் யுகம் ஆரம்பித்தது. சாதாரண பொதுமக்களும் தமது ஓய்வு நேரங்களை பயனுறு விதத்தில் செலவிடவும், அறிவில் மேன்மையடையவும் ஓர் பொது நூலகத்தின் அவசியம் உணரப்பட்டது. காலஞ்சென்ற திரு. வி. நல்லையா கல்குடா நாடாளுமன்ற உறுப்பினராகவும், சுகாதார உள்ளூராட்சி அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளராகவும் இருந்த வேளையில் மட்டக்களப்பு பொது நூலக இயக்கம் வலுவடைந்தது. மட்டுநகர் நகரசபையின் தலைவராக காலஞ்சென்ற திரு. எஸ். ஏ. செல்வநாயகம் பணியாற்றியபோது நூலக ஆரம்பிப்புப் பணியில் அதிக அக்கறை காட்டினுர்.

ஒரு பொது நூலகத்தை ஆரம்பிக்க சகல ஏற்பாடுகளையும் செய்ததுடன் 1855 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்த மட்டக்களப்பு சந்தாதாரர் நூலகத்தையே பொது நூலகமாக கையேற்று — நகரசபையின் நிர்வாகத்திற்குட்படுத்தினுர். அப் பொது நூலகம் 1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி திரு. வி. நல்லையாவினுல் திறந்து வைக்கப்பட்டது

### நூலக பஞ்சசீலம்

நூலக விஞ்ஞானத்தின் பிதாமகர் திரு. எஸ். ஆர். இரங்கநாதன் கூறிப்போந்த நூலக பஞ்சசீலத்தினை அடியொற்றி 'நூலகம் ஓர் வளரும் ஸ்தாபனம்' என்ற கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் இன்று நகரின் மத்தியில் பிரமாண்டமாய் உயர்ந்து நிற்கிறது.

மூன்று தனித்தனியான கட்டடங்களைக் கொண்ட 'மட்டக்களப்பு நூலகத் தொகுதி' (Library Complex) என மட்டுநகர் மக்கள் பெருமையுடன் அழைக்கும் மத்திய நூலகத்தையும் அதன் கிளை நூலகமாய் அரசடி பார் வீதியில் அமைந்துள்ள புதிய மாடிக் கட்டடத்தையும், நகரின் பல்வேறு பகுதிகளிலும் பரந்துபட்டுள்ள 6 கிளை படிப்பகங்களையும் கொண்டதே தற்போதைய பொது நூலகம்.

நூல் நிலையத்தின் சேவை விரிவுபடுத்தப்பட்டு வளர்ந்தோரை மட்டுமன்றி சிறிய பிள்ளைகளையும் ஈர்த்தது. எனவே சிறுவர் நூலகத்தின் தேவை உணரப்பட்டது. நூலகரதும் நூலகக் குழுவினதும் இடையரு முயற்சியால் 1974 அக்டோபர் 12 ஆம் திகதி மட்டுநகர் பொதுநூலகத்தில் சிறுவர் நூலகம் அந்நாள் மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினர் திரு. இராஜன் செல்வநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது.

### இன்றைய நிலை

1950 இல் 825 நூல்களுடனும் 16 அங்கத்தவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு நூலகம் காலத்தின் வளர்ச்சியால் வளர்ச்சி அடைந்து இன்று இலங்கையின் தலைசிறந்த நூலகங்களுள் ஒன்ருய் இயங்குகின்றது. ஆங்கிலத்தில் 18,000 நூல்களும் தமிழில் 14,000 நூல்களும் சிங்களத்தில் 3,000 நூல்களும் இங்குள்ளன. தனித்தனியாக உசாத்துணைப் பகுதி, இரவல் நல்கும் பகுதி, சிறுவர் பகுதி படிப்பகம் என்பனவை இயங்குகின்றன. நூலக அங்கத்தவர்கள் தொகை 6000 எட்டியுள்ளது.

### தகவல் வங்கி

இவை அனைத்தையும் விட ஓர் சிறப்பம்சம் தகவல் வங்கி ஒன்று இங்கே இயங்குகின்றது. குறித்த விடயங்களைப் பற்றிய குறுங்கால அல்லது நெடுங்கால தகவல்களை அறிய பத்திரிகை நறுக்குகளும் ஏனைய தகவல் பிரசுரங்களும் பல்வேறு தலைப்புக்களில் கோவைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. தகவல்கள் பெற விரும்புவோர் உசாத்துணை நூலகரிடம் பெற விரும்பும் தகவலைக் கூறினுல் அடுத்தகணமே சகல விவரமும் கொண்ட தகவல் கோவையை அவர் பெற்றுக் கொள்வார்.

கொழும்பு மாநகர பொது நூலகம் அமைந்திருப்பது போன்று ஒரே கூரையின் கீழ் நூலகத்தின் சகல பிரிவுகளும் கொண்டு வரப்படும் நாளை வாசகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். மட்டக்களப்பின் நாளைய அபிவிருத்தியில பொது நூலகத்தின அபிவிருத்தியும் வந்தே நிற்கிறது. மட்டுநகர் மக்களிடையே அறிவுச்சுடரை ஏற்றி வரும் இப் பொது நூலகம் - மக்கள் மனம் கவர - கவர்ச்சி மிகு தோற்றத்துடன் கூடிய புதிய கட்டடத்தில் புதுப் பொலிவு கொள்ளும் நாளை யாவரும் எதிர்பார்க்கின்றனர். ★

**- செ. யோ. செல்வராஜா -**
(நூலகர், மட்டக்களப்புப் பொது நூல் நிலையம்)

# பொது அறிவுப்போட்டி இல. 14

| | | |
|---|---|---|
| 1. | நெல் முளைக்க எது தேவை? | நீர் / உரம் |
| 2. | ஆக்கமும் கேடும் விளைய எது காரணம்? | சொல் / செயல் |
| 3. | இராமபிரானின் வம்சம் எது? | சந்திர / சூரிய |
| 4. | இந்தியாவின் வாசல் என்று கருதப்படும் நகரம்? | புதுடில்லி / பம்பாய் |
| 5. | உழவருக்கு முக்கியமான மாதம் எது? | ஆடி / தை |
| 6. | பெண்கள் கட்டிக் கொள்வார்கள்? | சேலை / தாலி |
| 7. | எதன் அருகில் போகக் கூடாது என்பார்கள்? | நீர் / நெருப்பு |
| 8. | உறவைக் குறிப்பது எது? | அம்மா / அண்ணி |
| 9. | பெண்களுக்கு எது கூடாது என்பார்கள்? | மிடுக்கு / துடுக்கு |
| 10. | எது விளையாட்டு? | காலபந்து / சடுகுடு |
| 11. | எது அழகு சாதனம்? | சோப்பு / பவுடர் |
| 12. | பிடிக்குப் பெயர் போனது எது? | நண்டு / உடும்பு |

பெயர்:- ..................
விலாசம்:- ........................
...............

பொது அறிவுப்போட்டி இல: 14
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

--- இங்கே வெட்டுக ---

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 12. 10. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பொது அறிவுப் போட்டி இல: 13 இல் சரியான முடிவுகள் வருமாறு;**

1. நேபாளம், 2. நிக்கல், 3. கபர், 4. கழுதை, 5. மலாக்காக் கடல், 6. நிக்ஸன், 7. 30, 8. கர்ணன். 9. செந்நீர், 10. பல்லக்கு, 11. காது, 12. கடலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road,
Jaffna.

# சஞ்சீவி சஞ்சிகை

01-10-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

# கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தங்களுக்கு வேட்டு வைக்கும் ஆர்மேனியப் பிரச்சினை

## ரஷ்யர்கள் இனரீதியாக சிறுபான்மையினராகும் போது சோவியத் குடியரசுகளில் நெருக்கடி வலுக்கலாம்

கம்யூனிஸ்ட் நாடுகளில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வரும் நெருக்கடிகள் தற்போது அதன் தலைமையகமான சோவியத் யூனியனிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

தற்போது ஆர்மேனியா (Armenia), அஸர்பைஜான் (Azerbaijan) குடியரசுகளுக்கு இடையிலான இனமோதல்களையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

1956 ஹங்கேரி எழுச்சி, 1968 செக்கோஸ்லோவேக்கிய நெருக்கடி, 1980 முதல் இருந்துவரும் போலந்து தொழிற்சங்கத் தகராறுகள் வரிசையில் தற்போது சோவியத் யூனியனில் ஏற்பட்டு வரும் இனமோதல்கள் கம்யூனிஸ்ட் உலகுக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் சவாலாகவே கருதப்படுகின்றன.

இரு சோவியத் குடியரசுகளான ஆர்மேனியாவிலும், அஸர்பைஜானிலும் பிரச்சினை ஏற்படக் காரணமான நகோர்னோ கரபாவிலும் (Nagorno-Karabakh) ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகள், படுகொலைகள், பாடசாலைப் பகிஷ்கரிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் தனது மூன்று வருட கால ஆட்சியில் என்றும் இல்லாதவாறு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளார். இரண்டாவது உலகமகா யுத்த காலத்தின் பின்பு சோவியத் யூனியன் உள்நாட்டில் எதிர்நோக்கி உள்ள பெரிய நெருக்கடியாக இது கருதப்படுகிறது.

தற்போது சோவியத் யூனியனில் உருவாகிவரும் நெருக்கடிகள் சோவியத் யூனியனின் முகாமில் உள்ள (வார்ஸோ ஒப்பந்த நாடுகள்) ஏனைய கம்யூனிஸ்ட் நாடுகளிலும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தூண்டுகோலாக அமையலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அத்துடன் சோவியத் அதிபர் கோர்பச்சேவின் 'உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்' — 'பகிரங்கமாக கருத்துக்களை வெளியிடுவது' ஆகியவற்றுக்கு (Perestroika and glasnost) சோவியத் நெருக்கடிகள் முட்டுக்கட்டையை உருவாக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சோவியத் அதிபர் சமீபத்தில் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில் 'அரசியல் சீர்திருத்தங்களின் முதுகில் கத்தி' என்று வர்ணித்துள்ளார்.

வன்முறைகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருமாறு ஆர்மேனியா — அஸர்பைஜான் குடியரசுகளின் தலைவர்களுக்கு சோவியத் அதிபர் இவ்வாரம் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

சோவியத் யூனியன் பல குடியரசுகளை உள்ளடக்கிய ஒருவித சமஷ்டி ஆட்சியைக் கொண்ட நாடு ஆகும்.

இந்தக் குடியரசுகளில் ஒன்றுதான் ஆர்மேனியா. ஆர்மேனியாவின் தலைநகரம் ஜெரெவான் (Yerevan) மற்றைய குடியரசான அஸர்பைஜானின் தலைநகர் பெகு (Behu).

### ஆர்மேனியா

ஆர்மேனியாவில் பெரும்பான்மை மக்கள் கிறிஸ்தவர்கள். இந்த நூற்றாண்டில் துருக்கியினால் நசுக்கப்பட்டு துருக்கியில் இருந்து வெளியேறியவர்களை பெரும்பான்மையாகக் கொண்டது ஆர்மேனியா.

### அஸர்பைஜான்

ஆர்மேனியாவுடன் நெருக்கடியில் சம்பந்தப்பட்டுள்ள அஸர்பைஜான் குடியரசு முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது.

எல்லையில் உள்ள முஸ்லிம் நாடுகளான ஈரான் - துருக்கியின் செல்வாக்கு இங்கு ஓரளவு இருந்து வருகிறது.


### நகோர்னோ கரபா

தற்போதைய பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நகோர்னோ கரபா பகுதி 1923 ஆம் ஆண்டு தொடக்கம் அஸர்பைஜான் குடியரசுக்குக் கீழேயே இருந்து வருகிறது. கிறிஸ்தவர்களான ஆர்மேனியர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஒரு மலைப் பிரதேசம் இது. இங்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ஆர்மேனியர்கள் வாழ்கின்றார்கள். இது நகோர்னோ கரபா சனத்தொகையில் 75 சத விதம். மிகுதி 25 சதவிதமும் அஸர்பைஜான் முஸ்லிம்களைக் கொண்டது. நகோர்னோ கரபாவின் தலைநகரம் ஸ்ரெபானகெர்ட். (Stepanakert) அஸர்பைஜான் குடியரசின் கீழ் விசேஷ அந்தஸ்து வழங்கப்பட்ட பிரதேச ஆட்சிமன்று ஒன்று இங்கு நிறுவப்பட்டு நிர்வாகங்களை மேற்கொண்டு வருகிறது.

தாம் அஸர்பைஜான் குடியரசினால் நசுக்கப்படுவதாக நகோர்னோ கரபாவின் பெரும்பான்மை கிறிஸ்தவர்களான ஆர்மேனியர்கள் கருதுகின்றார்கள். தற்போதைய நெருக்கடிக்கு இதுவே அடிப்படைக் காரணம்.

### இணைப்புத் தீர்மானம்

கடந்த பெப்ரவரி மாதம் நகோர்னோ கரபா ஆட்சி மன்




றம் அதிமுக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. நகோர்னோ கரபாவை ஆர்மேனியாக் குடியரசுடன் இணைக்க வேண்டும் என்பதே அந்தத் தீர்மானம். இதற்கு நகோர்னோ கரபா கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவும் கிடைத்திருந்தது. இந்தத் தீர்மானத்தை அடுத்து ஆர்மேனியா — அஸர்பைஜான் நகோர்னோ கரபா ஆகிய மூன்று பிரதேசங்களிலும் ஆர்மேனியா கிறிஸ்தவர்களுக்கும் அஸர்பைஜான் முஸ்லிம்களுக்கும் இடையில் இனமோதல் வெடித்தன.

இந்த மூன்று பிரதேசங்களிலும் இந்த இரு இனத்தவர்களே வாழ்கின்றார்கள்.

### நெருக்கடி உச்சக்கட்டம்

இணைப்பை ஆதரித்து ஆர்மேனியாவிலும் நகோர்னோ கரபாவிலும் கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. அஸர்பைஜானில் இணைப்புக் கோரிக்கைக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன.

### சுப்ரீம் சோவியத் தீர்ப்பு

கடந்த பெப்ரவரியில் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்தபோது ஒரு மாதகாலத்தில் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அதிபர் கோர்பச்சேவ் உறுதி அளித்தார். இதனால் வன்முறைகள் ஓய்ந்திருந்தன.

அதிபர் கோர்பச்சேவின் உறுதிமொழிக்கு இணங்க சோவியத் பாராளுமன்றமான சுப்ரீம் சோவியத் (Presidium of the Supreme Soviet) இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்தது.

கடந்த ஜூலை மாதம் ஓர் அறிவிப்பும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. தற்போது உள்ள எல்லைகளில் மாற்றம் செய்ய முடியாது என்பதே அந்த அறிவிப்பு.

அதே சமயம் நகோர்னோ கரபாவில் உள்ள ஆர்மேனியர்களுக்குப் பல சலுகைகள், வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் ஒன்றையும் சுப்ரீம் சோவியத் வெளியிட்டது.

சுப்ரீம் சோவியத்தின் தீர்ப்பு ஆர்மேனியாவிலும் நகோர்னோ கரபாவிலும் உள்ள பெரும்பான்மை ஆர்மேனியர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதனாலேயே ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் வன்முறைகளும் அங்கு தொடர்கின்றன.

### கடும் நடவடிக்கை

சோவியத் யூனியனில் அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி உள்ள அதிபர் கோர்பச்சேவ் தமது நோக்கங்களுக்கு முற்றிலும் மாறாக கிளர்ச்சிகளை அடக்க தற்போது சில கடும் நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறார். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டாய வேலை முகாமுக்கு (Labour Camp) அனுப்பும் தண்டனையும் இவற்றுள் ஒன்றாகும்.

சோவியத் அதிபரினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு சீர்திருத்தக் கொள்கைகளே தற்போதைய ஆர்மேனிய — அஸர்பைஜான் நெருக்கடிக்குத் தூண்டுதலாக அமைந்ததாக சோவியத் ஆட்சிபீடத்தில் உள்ள பழைமை விரும்பிகள் கருதுகிறார்கள்.

அரசியல் சீர்திருத்தங்களுக்கு எதிரான இவர்களின் கை ஓங்கக் கூடாது என்பதில் அதிபர் கோர்பச்சேவ் அக்கறை செலுத்தி வருகிறார்.

லியோனிட் பிரேஷ்னேவின் காலத்தின் பின்பு மிகவும் நிதானமான தலைவராகக் கோர்பச்சேவ் கருதப்பட்டு வருகிறார்.

ஜோசப் ஸ்ராலினின் பின் கடும்போக்குடைய தலைவராகக் கருதப்பட்டவர் லியோனிட் பிரேஷ்னேவ்.



கோர்ப்பச்சேவ்

இவரது ஆட்சிக் காலத்திலேயே செக்கோஸ்லோவேக்கியாவுக்குள் வார்ஸோ படை (1968 இல்) அனுப்பப்பட்டன. ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் படைகள் (1979 இல்) அனுப்பப்பட்டன. ஐரோப்பாவில் 'எஸ். எஸ் - 20'ரக அதி சக்திவாய்ந்த ஏவுகணைகளும் பிரேஷ்னேவின் ஆட்சிக் காலத்திலேயே நிறுவப்பட்டன.

### இனப்பிரச்சினை

இந்த நூற்றாண்டில் உள்நாட்டில் சோவியத் யூனியன் எதிர்நோக்கும் பெரும்பிரச்சினையாக இனப்பிரச்சினை கருதப்படுகிறது.

சோவியத் யூனியனில் 15 குடியரசுகளில் நூற்றுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழுகிறார்கள்.

## உலக உலா

ஏஸ்.பி.சீலன்

சோவியத் ஆட்சிப்பீடத்தில் தற்போது நிலவும் அரசியல் சமூக நிலை காரணமாக சிறுபான்மை இனத்தவர்களின் குரல், தற்போது பல குடியரசுகளில் கேட்க ஆரம்பித்துள்ளது.

சோவியத் யூனியனின் முழுச் சனத்தொகை 28 கோடியே 50 லட்சமாகும்.

தற்போது இதில் 51 சதவிதமானோர் ரஷ்ய இனத்தவர்கள். அதிபர் கோர்பச்சேவும் ஓர் ரஷ்ய இனத்தவரே.

சோவியத்யூனியனில் பிறப்பு விகிதம் ரஷ்ய இனத்தவர்களிடையே குறைவு. முஸ்லிம்கள் மத்தியில் அதிகம்.

தற்போது 51 சதவீதமாக உள்ள ரஷ்ய இனத்தவர்களின் பெரும்பான்மை இதன் காரணமாக 2000 ஆம் ஆண்டளவில் 48 சதவிதமாகவும் 2050 ஆம் ஆண்டளவில் 40சதவிதமாகவும் வீழ்ச்சி அடையலாம் என்று மதிப்பீடுகள் தெரிவித்திருக்கின்றன.

இது நாட்டின் ஆதிக்கத்தில் ரஷ்ய இனத்தவர்களுக்குப் பெரும் தலையிடியை உண்டு பண்ணலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பொருளாதாரத்தில் அதிக கவனம்

அதிபர் கோர்பச்சேவ் பதவிஏற்றதுமுதல் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையிலேயே அதிக கவனம் செலுத்திவந்தார். அத்துடன் முன்னைய சோவியத் தலைவர்களைப்போல் அன்றி ஆட்சிக்கு வரமுன் எந்தவொரு சோவியத் குடியரசிலும் இவர் உத்தியோகபூர்வப் பதவி எதையும் வகிக்கவில்லை.

ஆர்மேனிய — அஸர்பைஜான் பிரச்சினையை ஆரம்பத்தில் இவர் பாரதூரமானதாகக் கருதாததற்கு இதுவும் ஒரு காரணம் என்று நம்பப்படுகிறது.

இன அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள சோவியத் குடியரசுகளில் ரஷ்ய இனத்தவர்கள் பரவலாக வாழ்கின்றனர். இது இக்குடியரசுகளில் தற்போது ஒருவித அச்ச உணர்வை உருவாக்கி வருகிறது.

ஏற்கனவே உக்ரேய்ன், பெலோ ரஷ்யா, ஜோர்ஜியா குடியரசுகளில் சில தனிப்பட்ட இனரீதியான ஸ்தாபனங்கள் தமதுதேசியமொழி, வரலாறு, கல்வித்துறைகளில் இருந்துவரும் ரஷ்ய ஆதிக்கத்தில் இருந்து விடுபட முனைந்து வருகின்றன.

தற்போதைய நிலைமை நீடிக்குமானால் சோவியத் தலைமைப்பீடம் கோர்பச்சேவ் ஆட்சிக்குப்பின்னர் தொடர்ந்து மிதவாதப் போக்கைக் கடைப்பிடிக்குமா என்பது சந்தேகமே.

★

## உலக விளையாட்டு

# 'மோசடி'யிலும் ஒலிம்பிக் சாதனை!

'மோசடி'யிலும் ஒலிம்பிக் சாதனை நிகழ்த்தப்பட்டது.

விளையாட்டுக்களில் தான் ஒலிம்பிக் சாதனைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அப்படி என்றால் 'மோசடி'யும் ஒரு விளையாட்டா?

இப்படியும் நீங்கள் கேட்கலாம்.

உண்மைதான். 24 ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் 'மோசடி'யையும் ஒரு விளையாட்டாகத்தான் வீரர்கள் கணித்து விட்டனர்.

ஆனால் அந்த விளையாட்டு, வினையாகியும் விட்டது.

சோல் ஒலிம்பிக் போட்டிகளில் ஆரம்பத்தில் இரண்டு பல்கேரிய வீரர்களுக்கு வழங்கப்பட்ட தங்கப்பதக்கங்கள் பறிக்கப்பட்டன.

போதைவஸ்து பாவித்த பின்னர் அவர்கள் பாரம் தூக்கும் போட்டிகளில் பங்குபற்றியமை கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னரே தங்கப் பதக்கங்கள் பறிக்கப்பட்டன.

மொத்தமாக 6 வீரர்கள் போதைவஸ்துவைப் பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களின் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனால் பென் ஜோன்சன் விவகாரம் போல் அவை பெரிதாக்கப்படவில்லை.

உலகின் அதிவேக ஓட்ட வீரர் யார் என்பதைத் தீர்மானிக்கும் போட்டி தான் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம்.

அதன் காரணமாகத்தான் பென்ஜோன்சன் மோசடி, ஒலிம்பிக்கில் 'சாதனை' ஒன்றை ஏற்படுத்தியது.

### கடந்த மார்ச்சில்

கடந்த மார்ச் மாதத்தில் தென் கொரியாவில் 'கனடா வாரம்' கொண்டாடப்பட்டது.

ஜமேக்காவில் பிறந்து கனடாவினால் 'சுவீகாரம்' செய்யப்பட்ட 27 வயதான பென் ஜோன்சன் அதில் கலந்து கொள்ள சோல் சென்று இருந்தார்.

அப்போது தென்கொரிய டெலிவிஷன் அவரைப் பேட்டி கண்டது.

சோல் ஒலிம்பிக்கில் 100மீட்டர் பந்தயத்தில் நீங்கள் சாதனை நிகழ்த்துவீர்களா?— இப்படி ஒரு கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பென் ஜோன்சன் 'நிச்சயமாக! 9. 79 விநாடியில் 100 மீட்டரைக் கடந்து தங்கப்பதக்கம் பெறுவேன்' - என்று அடித்துச் சொன்னார்.

24. 9. 1988 சனிக்கிழமை: சோல் ஒலிம்பிக் ஸ்ரேடியம்- அலுமீனியத் தகரங்களில் சுற்றி அடைக்கப்பட்ட பகுதி.

காற்றுப் புகுந்து ஓட்ட வீரர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் என்பதற்காக இந்த அலுமீனியத் தகரச்சுவர் அமைக்கப்பட்டிருந்தது.

காற்று, சில வீரர்களுக்கு வெற்றி வாய்ப்பை அளித்து விடும் என்பதும் இந்த அலுமீனியத் தகரச்சுவர் அமைக்கப்பட்டதற்கு இன்னொரு காரணம்.

உலகின் அதிவேக ஆண் ஓட்ட வீரர் யார்?

பென்ஜோன்சன், அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல்லூயிஸ் பிரிட்டனைச் சேர்ந்த லின்போர்ட் கிறிஸ்டி ஆகியோர் ஓடத் தொடங்கினர்.

கண்மூடித் திறப்பதற்குள் காற்றுப் போல் ஓடித் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார் பென் ஜோன்சன்.

மார்ச்சில் தான் சொன்னதைச் செப்டம்பரில் நிரூபித்து விட்டார்.

100 மீட்டரை 9. 73 விநாடியில் கடந்தார்.

அதன் பின்னர் நடந்தது என்ன?

அவரின் சிறுநீர், பரிசோதனைக்காகக் கேட்கப்பட்டது.

போட்டி துவங்குவதற்கு முன்னர் போதைவஸ்துப் பரி

- விவியன் -

சோதனைக்கு சிறுநீரைக் கேட்டவுடன் கொடுத்திருந்த பென ஜோன்சனால், போட்டி முடிந்தவுடன் அடுத்த பரிசோதனைக்குத் தனது சிறுநீரைக் கொடுக்க முடியவில்லை.

இயற்கை அவருக்கு ஒத்துழைக்கவில்லை. எவ்வளவோ முயற்சி செய்தார். சரிவரவில்லை.

மூன்று போத்தல் பியர் குடித்தார்.

சுமார் 2½ மணித்தியாலங்கள் கழித்தே அவரினால் தனது சிறுநீரைப்பரிசோதனைக்குக் கொடுக்க முடிந்தது.

அதன் பின்னர் சனி இரவை விருந்துகளின் மத்தியில் அவர் கழித்தார்.

ஞாயிறு காலை அவர் ஒலிம்பிக் ஸ்ரேடியம் சென்றார். தனது சகவீரர் மார்க் மக்கோஸ் 110 மீட்டர் தடை தாண்டி ஓடும் பந்தயப்பயிற்சியைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அங்கிருந்தவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

நான் பெரியவன் என்பதை உணருகின்றேன் — இப்படிப் பெருமிதமடைந்தார் பென்.

இயற்கை மறுக்கிறது என்று அவர் இழுத்தடித்தும் அடுத்த நாள் நடந்த சிறுநீர் பரிசோதனை அவரைச் 'சிறியவனாக' உலகுக்கு எடுத்துக் காட்டியது.

செவ்வாய் காலை அவர் சொல்லாமல் கொள்ளாமல், கிம்பு விமானநிலையம் சென்று கனடாவுக்கு பறந்துவிட்டார்.

பிறந்த நாடும் வேண்டாம் என்றது. சுவீகரித்த நாடும் வேண்டாம் என்றுவிட்டது.

போதைவஸ்துப் பாவனை வாழ்க்கையிலும் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் தனது விளையாட்டைக் காட்டி விட்டது:

ஒலிம்பிக் சரித்திரத்தின் மிகப்பெரும் மோசடியாக இச்சம்பவம் கருதப்படுகின்றது.

பென் ஜோன்சன் சம்பவத்தைத் தொடர்ந்து ஒலிம்பிக் வீரர்களை எந்த நேரத்திலும் போதைவஸ்துப் பரிசோதனைக்கு உட்படுத்த சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தீர்மானித்து விட்டது.

★

# 'உஷா' யுகம் முடிந்துவிட்டது?

உஷாவைப் பொறுத்த வரையில் நினைத்தது ஒன்று, நடந்தது இன்னொன்று.

லொஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் தடை தாண்டி ஓடும் பந்தயத்தில் நான்காவதாக வந்தவர் உஷா.

சோல் ஒலிம்பிக்கிலோ அப்பந்தயத்தில் ஓடிய 35 பேரில் 31 ஆவது ஆளாக உஷா வந்தார்.

24 வயது நிரம்பிய இந்திய ரயில்வே ஊழியரான பி. டி. உஷா 400 மீற்றரை சோல் ஒலிம்பிக்கில் 59.55 விநாடிகளில் ஓடிமுடித்து 31 ஆவது இடத்தைப் பெற்றார்.

4 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 55.42 விநாடிகளில் அத்தூரத்தை ஓடி முடித்து வெண்கலப் பதக்கம் பெறும்வாய்ப்பை இம்மியில் நழுவவிட்டவர்தான் இந்த உஷா.

இந்திய ஓட்டப் பந்தய வீராங்கனையின் விளையாட்டு வாழ்வு இப்படியா முடிய வேண்டும்?

'உஷா' யுகம் முடிந்துவிட்டது என்றே சொல்லலாம்.

★ ★ ★

நல்ல பாம்புகளைச் சமையல் செய்து 'சூப்' எடுத்துக் குடிப்பதன் மூலம் பலம் அதிகரிக்கும் என்பது தென்கொரிய மக்களின் நம்பிக்கை.

ஒலிம்பிக் தொடங்கிய போது 500 பாம்புகளைக் கொன்று 'சூப்' செய்தனர்.

பெண்கள் ஹொக்கி வீராங்கனை கிபூ-ருக் முதலாவதாகக் குடித்து ருசி பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org